Registered as a News Paper
பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 16 | வெள்ளி - 07 | 08-14-ஏப்பிரல்-2005



# படித்ததில் பிடித்தது

## மாலாவி நாட்டுக் கவிதை

## ஆபிரிக்கப் புயல்

மேற்கிலிருந்து மேகங்கள்
காற்றுடன்
விரைந்து வருகின்றன.
இங்கோரிடத்தில்
அங்கோரிடத்தில்
சடார் சடாரெனத் திரும்பியபடி...
வெட்டுக்கிளிக் கும்பலொன்று
சுழன்றடிப்பது போல்...
தனக்குப் பின்னால்
பொருட்களைத் தூக்கியெறிந்தபடி...
ஒன்றுமில்லாததைத்
துரத்தும் ஒரு விசரன் போல்...

சூல்கொண்ட மேகங்கள்
அதனது முதுகில்
ஆரோகணித்திருக்கின்றன
குன்றுகளின் மீது தரிப்பதற்குத்
திரள்வதாய்...

இருண்ட இயல் கடந்த
இறக்கைகள் போல்
காற்று இரைந்து செல்கிறது.
அது கடக்க வசதியாக
வளைந்து வழி விடுகின்றன...
மரங்கள்!

கிராமத்தினுள்ளே
குதூகலம் பொங்க
குழந்தைகளின் கூச்சல்கள்
சுழன்றடிக்கும் காற்றின்
ஓசைகளோடு கலந்து
மிதந்து வருகின்றன.

முதுகு சுமந்த ஏணையில்
குழந்தைகள் தொற்றியிருக்க
உள்ளேயும் வெளியேயுமாய்
வெறிபிடித்தவராய்
ஓடித்திரியும் பெண்கள்.

மரங்கள் தலைசாய்த்து
வழிவிட
காற்று மூசிக்கொண்டு
கடந்துசெல்கிறது

கிழிந்து நாராகிவிட்ட
கொடிகள் போல்
காற்றில்
ஆடைகளின் படபடப்பு
காற்றில் கிளம்பிவிட்ட
மேலாடைகள்
தொய்ந்து தொங்கி விட்ட
முலைகளை
வெளிக்காட்டுகின்றன.

குமுறி... நடுங்கி...
குருடாக்கும் ஒளிப்பிழம்பு
தாறுமாறாய்
வெடித்துக் கிளம்ப
புகைமணத்தின் நடுவே
நிலத்தில் அறையும்
பெருந்துளிகள் அணிவகுப்போடு
வந்தது
புயல்!

ஆங்கிலத்தில் – டேவிட் றுபாட்றி
தமிழில் – குழல்

# காரசாரம்

வெற்றிலை ஒரு காரமான இலை. பல மருத்துவ குணங்களைக் கொண்டது. என்றாலும் வெற்று-இலைதான்.

**வெத்திலை பாக்குச் சுண்ணாம்பு**
**பத்திரி ஏலங் கராம்பு.**
**ரத்தம் போல் சிவந்துபோச்சுதே-என்**
**ராசாத்தி ஒம் மேல ஆசையாச்சுதே.**

கண்ணான தன் காதலிக்குத் தன் மனதைச் சொல்லிப்பாடும் ஒரு நாட்டார்பாடல் இது.

**வாட(ல்) வெத்தில வதங்க(ல்) வெத்திலை**
**வாய்க்கு நல்லால்லே-நீ**
**நேத்து வச்ச குங்குமப்பொட்டு**
**நெத்திக்கு நல்லால்லே.**

இதுவும் நாட்டார் பாடல் தான். தமிழர்களுடைய வாழ்வில் இரண்டறக் கலந்துள்ளது வெற்றிலை. வெற்றிலை இல்லாத எந்த மங்கல நிகழ்வும் எங்களிடம் இல்லை. வீடுகளில் நடக்கும் அமங்கல நிகழ்வுகளிலும் கூட வெற்றிலை முதன்மையானது.

எவ்வளவு அழகானவன் என்று வியக்க மணல் குடமாக மறுத்துவிடுகிறது. இதன் காரணமாகவே தாயை பரசுராமன் வெட்டினான். புத்தாண்டு தினத்தில் நல்லநேரம் பார்த்துக் கைவிஷேடம் (கைவியளம்) கொடுக்க வெற்றிலை வேண்டும். நிறைகுடம் வைக்க, பூசைசெய்ய வெற்றிலை வேண்டும். வெற்றிலை



இல்லாத விருநதேயில்லை. வீட்டுக்கு யார் வந்தாலும "உந்தத் தட்டத்தத்தா" என்று உரிமையோடு கொடுத்தும் வாங்கியும் உபசரிப்பது எம் வழக்கம். மேலும் விடுகதைகளாக:-

**பச்சைப்பச்சை டேக்டேக்**

# வெற்றிலை எங்களுக்குரியது...!

வீட்டு விசேடங்களுக்கு அழைப்பிதழ்கள் அச்சிடத் தொடங்கு முன், வெற்றிலை வைத்து அழைப்பதே முறையாகும். இன்றும் தமிழர்கள் வழிவந்த இவ் வெற்றிலை வைத்தல் முதற்சடங்குகளாக நடைபெறுவதைக்காணலாம்.

திராவிடப் பாரம்பரியத்திலிருந்து திரிந்த சிங்கள மக்கள் வெற்றிலையைக் கையில் கொடுத்து வரவேற்பதும் தட்டங்கொடுப்பதும் எம்மிடமிருந்து பெற்ற வழக்கங்கள் தான். வெற்றிலை என்பது எங்களுக்குப் போத்துக்கேயரிடமிருந்து வந்ததாக ஒரு புனைவை கட்டுரையொன்றில் பார்த்தேன்.

தோட்டப் பகுதியில் கனகாலமாகப் பாடப்பட்டுவரும் கிராமியப் பாடல்கள் வெற்றிலை பற்றி விளம்புகின்றன. நீண்ட நாட்கள் பிள்ளைப் பேறின்றி இருப்பவர்கள் கதிர்காமத்துக்கு நேர்த்திவைப்பார்கள். ஒரு பிள்ளை பிறந்தால் அதை கோயிலுக்கு விற்று விடுவதாக பின் குழந்தை பிறந்ததும் அப்படியே கோயிலுக்குக் கொண்டுபோய் ஏலங்கூறி விற்பார்கள். யாராவது ஒருவர் ஏலத்தில் அக்குழந்தையை வாங்குவார். பிறகு அவரிடம் பணத்தைக்கொடுத்து பெற்றவர்கள் மீண்டும் வாங்கிக்கொள்வார்கள். இதன் கருத்து "வித்துவாங்கினது"

இதுபோல நாங்களும் காலத்துக்குக்காலம் எங்களுடைய பொருட்கள், கலை கலாச்சாரம் போன்ற ஏராளமானவற்றை காலத்துக்குக் காலம் எம்மை ஆக்கிரமித்த அந்நியர்களுக்கு "வித்துவாங்குகிறோம்." இப்படித்தான் வெற்றிலை போர்த்துக்கேயரிடம் போனதோ...? யாமறியோம் பராபரமே.

**கலியாணம் என்று சொல்லிக்**
**கடலேறிப் பாக்கு வைத்தார்.**
**வெற்றிலையும் பாக்கும்**
**விருத்தமுடன் தான் கொடுத்தார்...**

என்றும் அநேக காலங் கடந்த பாடல்கள் எம்மிடமுண்டு. மகாபாரதத்திலே முடிசூட்டும் விழாவிலே முதல் மரியாதையாகக் கொடுக்கப்பட்ட தாம்பூலம் சிசுபாலனுக்கா, கிருஷ்ணனுக்கா என்ற தர்க்கத்தில் ஒரு போரே நடந்தது.

பரசுராமரின் தாய் மணலைக் கூட்டிக்குடம்செய்து நீர் அள்ளிவரும் பத்தினி. அவள் அவ்வாறு மணலைக் கோலும்போது விண்வெளியால் பயணித்த கந்தருவன் வெற்றிலை எச்சிலைத் துப்பி விடுகின்றான். அது அவளருகே விழ. அவள் அண்ணாந்து பார்த்து. அட

**(வெற்றிலை)**
**பால் பால் டேக்டேக் (சுண்ணாம்பு)**
**குண்டு குண்டு டேக்டேக் (பாக்கு)**
**குதிரை வால் டேக்டேக் (புகையிலை)**

என்றும்.

அழகு தமிழில்

**நொடியோன் திருமகளைப் பல்லரசன் கொண்டான்.**
**கொடியோன் திருமகளும் அக்குளத்தில் மாண்டாள்.**
**வெள்ளையராயனும் போய் அவ்விடம் சேர்ந்து**
**இரத்தவாறாகச் சொரியக்கண்டேன்.**

என்றும் ஏராளமான விடுகதைகள் உண்டு. மேலும் எம்மிடமிருந்து காணாமல் போய்விட்ட புலிப்பாணி வைத்திய நிகண்டில் ஒரு குறிப்பு தாம்பூலம் தரிப்பது எப்படி என்பதாக அது.

**நீற்றிலையின் மூக்கு நெடிய நரம்புடனே**
**தீற்றும் புறவுரியும் தின்றக்கால்-மற்றலரை**
**வெல்லப்போர்செய்யும்**
**விரநெடுமாலாயிடினும்**
**செல்லப்போய் நிற்பாள் திரு**

என்றுள்ளது. எப்பவோ வந்த போர்த்துக்கேயரை எங்கள் பண்பாட்டு, பயன்பாட்டுப் பொருட்களையே அவர்கள்தான் தந்தார்கள் எனக்கூறுவது தவறாகும். வெற்றிலை எமது சித்த வைத்திய முறைகளி லும், வீட்டுவைத்திய முறைகளிலும் கூடநீங்காத இடத்தைப்பிடித்துள்ளது. வேம்பையும், மஞ்சளையும் அமெரிக்கன் கேட்டான் வெற்றிலையை கேக்காமலே கொடுக்கலாமா...?

எழுத்தாளனுக்கு சுதந்திரம் வேண்டும்.தான் நினைக்கும் கருத்தை எழுதவும் எழுதியதை மற்றவர்களுக்குப் படித்துக்காட்டவும் அனுமதி வேண்டும். அனுமதி என்பது அச்சுவாகனமேறும் அனுமதி. ஓரிடத்தில் நடைபெறும், கேட்கும், பார்க்கும் சம்பவங்கள் சாதாரண மனிதனின் பார்வைக்குத் தெரிவதுபோல கலைஞனுக்குத் தெரிவதில்லை. அவனுடைய கண்கள் அதை வேறுபல கோணங்களில் பதிவுசெய்து வேறுபல நியதிகளை உள்வாங்கி உணர்ச்சிகளாக்கி வெளிவிடுகிறது. அவனது ஆற்றல், ஆளுமை, விருத்தாப்பியம் மற்றவர்களால் அல்லது வேறு சக்தி ஒடுக்கப் படவோ, நசுக்கப்படவோ கூடாது. அவ்வாறு சுதந்திரமாகத் தமது கருத்துக்களையோ தான் கண்டவற் றையோ துணிந்து கூறிய எழுதிய எழுத்தாளர்கள் எத்தனைபேர். அப்படிக் கூறுவதை தனது சொந்தச் செல

விலேயே அச்சேற்றும் தகைமை படைத்தோர் மட்டுமே.... உரிய கருத்துக்களை உலகறிய வைத்துள்ளனர். அரிய கருத்துகளைத் தரவல்ல பல எழுத்தாளர்களின் படைப்புகள் அடையாளமே இல்லாமல் போய்விட்டன. போய்க்கொண்டுமிருக்கின்றன.

போலியான முகத்திரைகளுடன் சார்புவாதத் தன்மையுடன் எழுதப்படும் எழுத்துகளே இன்று வெளிவருகின்றன. என்றாலும், போர்க்காலச் சூழலில் மூக்குடைபட்ட அல்லது முகத்திரை கிழிந்த ஏராளமான எழுத்தாளர்களும் இருக்கின்றனர். அந்நிய ராணுவத் தின் பிடிக்குள் வசதிகள் கருதி வாழ்ந்த போது படைக்கப்பட்ட படைப்புக்களை அரசசார்புடன் உலகப் புகழ் பெறவைத்த எழுத்தாளர் களும் உள்ளனர். எது எப்படியாயினும் சுதந்திரமாகத் தம் கருத்துக்களை எழுதிவிடத் துடிக்கும் எழுத்தாளர்கள எழுதவே செய்கின்றனர். அண்மையில ஒரு பிரபல எழுத்தாளரின் ஆக்கமொன்று விருது பெற்றதாக அறிவிக்கப்பட்டது. அந்நிலையில் அவரை ஒரு பத்திரிகை பேட்டி கண்டது. அவர் பேட்டி காண வந்த பத்திரிகை நிருபரிடம் இப்படிக் கூறினார் "இந்தக் கட்டுரையை நான்கு வருடங்களுக்கு முன்பு எழுதினேன். நீங்களும் இதை நிராகரித்தீர்கள். இன்னும் முன்னணி வகிக்கும் பல பத்திரிகைகளும் இதை பிரசுரிக்க மறுத்துவிட்டன. இறுதியாக என் நண்பர் ஒருவர் ஏதோ என்மீது இரக்கப்பட்டுச் செய்வதாக இதைப் பிரசுரித்தார் என்று அதுவே விருது பெற்றது. இதேநிலை ஏராளமான பத்திரிகையாளர்களுக்குமுண்டு. இங்கே சமுதாயத்துக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டிய அவசியமான கருத்தாக இருந்தாலும் கூட... மற்றவர்களால் தனது பத்திரிகை பாதிக்கப்பட்டுவிடுமோ என்ற பயம் அவர்களைப் பிடித்தாட்டுகிறது."

ஒரு பெண்ணின் முக்கால் நிர்வாணப்படத்தைப் போட வெட்கப்படாத சமூக நன்நோக்குப் பத்திரிகைகள் பெண்களின் உரிமைகள் தொடர்பான செய்திகளைப் போட அதிகம் யோசிக்கவேண்டியுள்ளது.

ஒரு அரச அதிகாரிபற்றிய புகாரை எழுதவோ, ஒரு பணக்காரரின் முறையற்ற நடவடிக்கைகளைப் பற்றி எழுதவோ எழுத்தாளனும் பயந்து சாகவேண்டிய நிலையிலுள்ளமை கண்கூடு. தன் போக்கில் துணிந்து எழுதும் அநேகருக்கு அதைப் பிரசுரித்து வெளியிடும் வசதியும் இருந்த போது தான் எம்.எஸ்.உதய மூர்த்தி, கண்ணதாசன், பிசீ.கணேசன், தமிழ்வாணன் என அநேகருடைய சிந்தனைகள் வெளிவந்தன.

உலக மட்டத்தில் உயர்ந்த பல எழுத்துக்கள் பலரால், பலபிரசுர உரிமையாளர்களால் நிராகரிக்கப்பட்டவைதான். இன்னும் அநேக எழுத்தாளர்கள் என அறிமுகப்படுத்தப் படாத எழுத்தாளர்களின் ஆக்கங்கள் பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்டு பிரசுரமாகாமல் மறக்கடிக்கப்பட்டுப் பின்னர் பிரபலமான எழுத்தாளர்களின் பெயரில் வெளி வந்ததும் உண்டு. இதேபோன்ற நிகழ்வுகளை அனுப வித்த ஆரம்ப எழுத்தாளர்கள் மிக அதிகம். பிரபலமாக இன்று பேசப்படும் சில எழுத்தாளர்களின் ஆரம்ப அனுபவம் இப்படித்தான் இருந்தது.

**"அந்த நிலா வானத்தில் சிரிக்கிறது. நிலா சிரித்துக்கொண்டு தான் இருக்கிறது. வானத்திலே சிரிப்பது நிலவுதான். சிரிக்கிற நிலவு வானத்திலே அதோ. இதே நிலவு தான் இன்னும் சிரிக்கிறது"**

எழுத்தாளனின் உண்மையான உள்மன உணர்வுகள் அங்கீகரிக்கப்படும் போதுதான் உண்மையான உலகின் உணர்ச்சிகள் கொந்தளிக்கும் விழிப்பு வரும்.

மாயா

# என்.ரி.ரி

புகழ்பெற்ற இந்தியப் பொருளியலாளரான அமர்தியா சென் ஒரு முறை பின்வருமாறு சொல்லியிருந்தார்....

"சுயாதீனமான ஊடகங்களைக்கொண்டிருந்த நாடுகள் எப்பொழுதும் பஞ்சத்தை அனுபவித்ததில்லை ஏனெனில், சுயாதீன ஊடகங்கள் எப்பொழுதும் குறைபாடுகளை முக்கியத்துவம் கொடுத்து வெளியில் கொண்டுவந்து விடுவதால் அரசாங்கங்கள் அவற்றிற்குப் பரிகாரம் காணும் நடவடிக்கைகளை எடுக்குமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றன." என்று.

அதாவது ஒரு சுயாதீன ஊடகம் எந்த மக்கள் திரளைப் பிரதிநிதித்துவம் செய்கிறதோ அந்த மக்கள் திரளையும் அதை ஆள்வோரையும் சதா உசார் நிலையில்: விழிப்பு நிலையில் வைத்திருக்க வேண்டும் என்று அர்த்தம்.

"ஒரு சுயாதீன ஊடகம் சில வேளைகளில் உனக்கு எரிச்சலூட்டலாம். ஆனால் உனக்கு ஆபத்து வரும் போது அதுதான் உன்னைப் பாதுகாக்கும்" என்று ஒரு மேற்கோள் உண்டு. அண்மை ஆண்டுகளில் ஆசியாவில் ஆப்கானிலும் ஈராக்கிலும் இரத்தம் சிந்தி நிரூபிக்கப்பட்ட ஒரு கூற்றாக இது காணப்படுகிறது.

கட்டாரை தளமாகக் கொண்டியங்கும் அல்ஜசீரா தொலைக்காட்சி இன்று அரபுக்களின் இதயத்துடிப்பாக மாறியிருக்கிறது. ஒசாமா பின்லாடன் தொடக்கிவைத்த "நவீன சிலுவை யுத்தத்தின்" பேறாகவே அல்ஜசீரா இன்று இத்துணை கவனிப்பைப் பெற்றிருக்கிறது.

முன்பு தலிபான்களின் ஆட்சிக்காலத்தில் ஊடகங்களை முரட்டுத்தனமாகக் கையாண்ட தலிபான்கள் வழமைக்கு மாறாக அல் ஜசீராவில் மட்டும் கைவைக்கவில்லை. இதன் நற்பலனை அமெரிக்கா ஆப்கானுக்குள் நுழைந்த பின்பே தலிபான்கள் அனுபவித்தார்கள். ஆப்கானில் நடப்பவைகள் பற்றி அமெரிக்காவின் நோக்கு நிலையிலிருந்து செய்திகளைத் தரும் ஊடகங்களே சக்திமிக்கவைகளாகவும் சர்வவியாபகமானவைகளாகவும் காணப்பட்ட ஒரு ஊடகச் சூழலில் ஆப்கானியர்களின் நோக்கு நிலையிலிருந்து செய்திகளை வெளியில் கொண்டு வந்தது அல் ஜசீராதான்.

இப்பொழுது ஈராக்கிலும் அதே தொண்டைத்தான் அல்ஜசீரா செய்துகொண்டிருக்கிறது. அல்ஜசீராவை மூடிவிடும்படி கட்டார் அரசாங்கத்தின் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன. வர்த்தக நோக்கு நிலையில் ஆதாயமின்றி ஓடிக்கொண்டிருக்கும் அல்ஜசீராவின் பங்குகளை தனியாருக்கு விற்றுவிடுமாறும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன. முடிவில், அண்மையில், அல்ஜசீராவுக்குப் போட்டியாக அல்குரான் என்றொரு புதிய தொலைக்காட்சிச் சேவை தொடங்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள் இஸ்லாமியத் தீவிரவாதத்திற்கு எதிரான தமது உலகளாவிய போரில் அல் ஜசீராவை ஓரங்கட்டாமல் அரபுக்களை மனோவசியம் செய்வது கடினம் என்று நம்புகிறன.

பலம் வாய்ந்த மிக நீண்ட பாரம்பரியங்களையுடைய சர்வ வியாபகமான மேற்கின் ஊடகங்களோடு ஒப்பிடுகையில் அல்ஜசீரா ஒரு மாற்று குரல் போலத் தோன்றினாலும் அரபுலகத்தைப் பொறுத்தவரை அது ஒரு மெயின்ஸ்ரீம் மீடியாவாக- ஒரு பிரதான நீரோட்ட ஊடகமாகத்தான் காணப்படுகின்றது; போற்றப்படுகிறது.

அல்ஜசீராவை நியாயப்படுத்துவது இன்று இப்பத்தியின் நோக்கமல்ல. மாறாக பலசாலி நாடுகளைத் தளமாகக் கொண்டியங்கும் சர்வவியாபகமான பேரூடகங்களால் போதியளவு பிரதிநிதித்துவம் செய்யப்படாத ஒரு பிராந்தியமோ அல்லது நாடோ அல்லது மக்கள் திரளோ தனக்கென்று ஒரு மாற்று ஊடகவலைப்பின்னலை உருவாக்கி வரும் ஒரு போக்கின் மேற்காசிய உதாரணம் இது என்பதாலேயே இன்று இப்பத்தியில் அல்ஜசீரா பற்றிக் குறிப்பிடவேண்டியிருக்கிறது.

ஆம். இன்றைய உலகளாவிய ஊடகப்பரப்பில் இரண்டு பிரதான ஓட்டங்களைக் காண முடியும், முதலாவது, பிரதான நீரோட்டத்துக்குரிய பேரூடகங்கள் மற்றது மாற்று ஊடகங்கள். இவை ஓல்றனேற்றிவ் மீடியாக்கள் என்று அழைக்கப்படுகின்றன.

பொதுவாக பேரூடகங்கள் எனப்படுபவை புரட்சிகரமானவைகளாகக் காணப்படுவதில்லை. ஏற்கனவே தரப்பட்ட நம்பிக்கைகள் ஏற்கனவே நன்கு ஸ்தாபிக்கப்பட்ட ஒழுங்குகள் போன்றவற்றின் குரலாகக் காணப்படுவதால் இவை பிறப்பியல்பிலேயே அந்த நம்பிக்கைகளையும் ஒழுங்குகளையும் மீற முடியாதவைகளாகக் காணப்படுவதுண்டு. சர்ச்சைகளைக் கிளப்புவது என்ற ஒரு புரட்சிகரமான அம்சத்தைத்தவிர மற்றெல்லா விசயங்களிலும் இவை போராடும் இனங்கள், நாடுகள் அல்லது மக்கள் திரளின் குரலாக எழ முடியாதவைகளாகக் காணப்படுகின்றன.

மற்றது, மாற்று ஊடகங்கள்.

பேரூடகங்களின் சர்வ வியாபகத்தன்மையோடு ஒப்பிடுகையில் இவற்றின் வீச்செல்லை மிகவும் வரையறைக்குட்பட்டதே. ஆனால் பேரூடகங்களால் பாதுகாக்கப்படும் ஏற்கனவே தரப்பட்ட நம்பிக்கைகளையும் ஸ்தாபிக்கப்பட்ட ஒழுங்குகளையும் எதிர்த்து உருவாகுபவை. என்பதால் இவை பிறப்பால் புரட்சிகரமானவை. எனவே போராடும் இனங்கள் மற்றும் நாடுகளின் நலிந்த குரலை இவை வெளிக்கொண்டு வருகின்றன.

இத்தகைய மாற்று ஊடகங்களின் பிரதான தளமாக இன்று இன்ரநெற் காணப்படுகின்றது. பலஸ்தீனத்தின் சமாதான முயற்சிகளைப் பற்றி எழுதப்பட்டதும் அதிகம் வாசிக்கப்பட்டதுமாகிய THE END OF THE PEACE PROCESS என்று நூலை எழுதிய எட்வேர்ட் டபிள்யூ செய்ட் அந்த நூலின் இரண்டாவது பதிப்புக்குரிய அறிமுகத்தில். பலஸ்தீனத்தில் நிகழும் அட்டூழியங்கள் எப்படி வெளித்தெரியவருகின்றன என்பது பற்றி பின்வருமாறு கூறுகிறார்...

"நூற்றுக்கணக்கான கண்கண்ட சாட்சிகளின் வாக்கு மூலங்களையும், ஒளிப்படச்சான்றுகளையும் இன்ரநெற் வழங்கியிருக் கிறது. இது அரபு மற்றும் ஐரோப்பியத் தொலைக்காட்சிகளிலும் வந்திருக்கிறது. இதில் பெரும்பகுதி அமெரிக்காவின் பிரதான நீரோட்ட ஊடகங்களில் கிடைப்பதில்லை. அல்லது அவை வெளிவருவது தடுக்கப்படுகிறது அல்லது அவை நொய்ந்து போகுமாறு செய்யப்படுகின்றன..." என்று.

இத்தகைய ஒரு பூகோள யதார்த்தத்தின் பின்னணியில் வைத்தே அண்மையில் அரங்கினுட் பிரவேசித்திருக்கும் NTT ஐ அதாவது தமிழீழத்தேசியத் தொலைக்காட்சியை பார்க்கவேண்டும்.

கிறிஸ்தவர்களின் மிகப் புனிதமான நாட்களில் ஒன்றாகிய பெரிய சனியன்று அதாவது கொல்லப்பட்ட மீட்பர் உயிர்த்தெழப்போகிறார் என்று காத்திருக்கும் ஒரு நாளிலே புகலிடத் தழிழர்களை நோக்கி ஒரு புதிய ஊடகவாசல் திறக்கப்பட்டிருக்கிறது.

நிலாந்தன்

தற்பொழுது பரிட்ச்சார்த்தமாக செய்திகள் மற்றும் பாடல்கள் என்று சுமாராக 15 நிமிடங்களுக்குக் குறையாமல் ஒளிபரப்பப்படும் NTT, காலப் போக்கில் தனது நேரத்தை மேலும் அதிகரித்துச் செல்லும் என்று கூறப்படுகிறது.

இப்பொழுதுள்ள பிரதான கேள்வி.

NTT ஒரு பிரதான நீரோட்ட ஊடகமா? அல்லது மாற்று ஊடகமா? என்பதே.

தமிழ் மீடியாப் பாரம்பரியம் என்று பார்க்கும்போது பொதுவாக பிரதான நீரோட்ட ஊடக மரபு எனப்படுவது பொதுவாக புரட்சிகரமானதாக இருந்ததில்லை. அது பெருமளவுக்கு தமிழ்ச்சினிமாவின் நீட்சியும் அகற்சியுமாகி எல்லாவற்றிலும் ஒருவித சினிமாத்தனமே விரவிக் கிடக்கக் காணலாம்.

அதேசமயம், புரட்சிகரமானவை என்று கூறப்படும் மாற்று ஊடகங்கள் பெருமளவுக்கு சிறு சஞ்சிகைகள் அல்லது சிறுபத்திரிகைகள் (ரப்லொயிற்ஸ்) என்ற அளவிலேயே சுருங்கிக்கிடக்கக் காணலாம்.

இத்தகைய ஒரு பகைப் புலத்தில் ஒரு விடுதலை இயக்கத்தின் தொலைக்காட்சியாக வந்து பிறந்திருக்கும் NTT எத்தகைய ஒரு பாத்திரத்தை வகிக்கப் போகிறது?

ஒரு விடுதலை இயக்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள ஒரு விடுதலைப் பிரதேசத்திலிருந்து முதலில் புலம் பெயர்ந்த தனது மக்களை நோக்கிவரும் ஒரு தொலைக்காட்சிச் சேவை என்று பார்க்கும்போது அது சிறுசஞ்சிகைகள், சிறுபத்திரிகைகள் அல்லது புலமைசார் இணையத் தளங்கள் போன்று சிறிய வட்டத்துள் சுருங்கி நின்றுவிட முடியாத அளவுக்கு பொறுப்பு அதிகமுடையதாகக் காணப்படுகிறது. அதேசமயம், ஒரு விடுதலை இயக்கத்தின் ஊடகம் என்பதால் அது ஆகக் கூடிய பட்சம் புரட்சிகரமானதாகவும் இருக்க வேண்டியுள்ளது.

எனவே, NTT தனது சனங்களை அணிதிரட்டுவது என்ற நோக்கு நிலையிலிருந்து வரும் போது ஒருவிதத்தில் பிரதான நீரோட்ட ஊடகமாக வரவேண்டியிருக்கிறது. அதேசமயம் அது ஒரு விடுதலை மீடியா என்பதால் அதிகம் புரட்சிகரமானதாகவும் இருக்க வேண்டியுள்ளது.


முன்னாள் சிறிலங்கா சனாதிபதி பிரேமதாஸவின் ஆலோசகரும் மூத்த சிவில் அதிகாரியுமான நெவில் ஜயவீர ஒரு முறை "பொருளியல் நோக்கில்" எழுதியிருந்தார்.... "சீரியஸானதுக்கும் ஜனரஞ்சகமானதுக்கும் பொதுவாகப் பொருந்தி வருவதில்லை..." என்று. தமிழில் இதுதான் பொதுப் போக்காய் இருந்து வருகிறது. ஆனால் தமிழீழ விடுதலைப் போராட்டம் இந்த வாய்ப்பாட்டை உடைத்து சீரியஸானதை ஜனரஞ்சகமாக்கவேண்டிய ஒரு கள யதார்த்தத்தை திறந்து விட்டிருக்கிறது.

ஜனரஞ்சகமானதை சீரியஸானதாக்க முடியாது. ஆனால் சீரியஸானதை ஜனவசியமுடையதாக மாற்ற முயற்சிக்கலாம். எல்லா விடுதலைப் போராட்டங்களும் கலைஞர்கள், எழுத்தாளர்கள், மீடியாக்காரர்களிடம் கோரிநிற்பது இதைத்தான்.

இந்த யதார்த்தத்தை உள்வாங்கி NTT யும், தமிழில் ஒரு புதுக்கலவையாக ஒரு நூதனமான சேர்க்கையாக புதிய முன்னுதாரணமாக வெளிவரவேண்டிய ஒரு தேவையிருக்கிறது.

அதுபோலவே, உலகமெலாம் சிதறிவாழும் தமிழர்களை ஒருங்கிணைக்க வேண்டிய ஒரு தொலைக்காட்சி என்ற மிகவும் சர்ச்சைக்குரிய ஆனால் மகத்தான ஒரு பொறுப்பையும் அது சுமக்க வேண்டியிருக்கிறது.



# நறுக்கென...

## சோமவன்சவின் குத்துக்கரணம்..!



இன்று தென்பகுதி அரசியலில் தன்னை ஒரு கோமாளிக் கதாநாயகனாக இனங்காட்டி நிற்பவர் ஜே.வி.பியின் சோமவன்ச அமரசிங்கதான். அரசுக்குள் இருந்துகொண்டு அரசின் செயற்பாடுகளுக் கெல்லாம் மௌன அங்கீகாரம் வழங்கி பதவிகளைப் பாதுகாத்துக்கொண்டு வெளியே மக்களைப் பேய்க்காட்டி, அவர்களின் அதாவது பௌத்த சிங்கள மக்களின் இன்றைய பாதுகாவலர்களாக தம்மை பிரசாரம் செய்து வரும் ஜே.வி.பியினரின் 'முரண்பாடுகளின் மூட்டை' என வர்ணிக்கப்படும் தலைவரான சோமவன்ச அமரசிங்க அண்மைக்காலமாக தனது தலைமறைவு வாழ்க்கையை விட்டு வெளியே மக்கள் மத்தியில் தன்னை பிரபல்யப்படுத்த பரப்பரப்பான உரைகளை ஆற்றிவருகிறார். எந்தப்பைத்தியக்காரனைச் சுற்றிலும் பத்துப் பேர் நிற்கவே செய்வர். சோமவன்சவை சுற்றிலும் ஒரு கூட்டம் கைதட்டச்சேரவே செய்கிறது. அதனால் உற்சாகமாக தனது "அலம்பல்"களை அவிழ்த்து விடவே செய்கிறார். சனாதிபதியின் காலில் மறைமுகமாக சரணடைந்து அரசியல் பண்ணிக்கொண்டு பகிரங்கமாக அவரை விமர்சிப்பதும். இந்தியாவுக்கு எதிரான கொள்கைகளை ஆழ ஒளித்துவைத்துக் கொண்டு இப்போது அதன் காலில் சரணடைந்து நிற்பதும், அமெரிக்காவுக்கு எதிராக கண்டனங்களைத் தெரிவித்துக்கொண்டே ரகசியமாக அமெரிக்கத் தூதரைச்சந்தித்து மன்னிப்புக் கேட்டு சரணடைய முயற்சிப்பதும், பௌத்த மதத்தை கட்டிக்காப்பதாகக் கூறும் மல்வத்தை- அஸ்கிரிய பீடாதிபதிகளை மனதளவில் தூற்றிக்கொண்டு, அவர்களிடம் சென்று ஆசீர்வாதம் வாங்க பேய்க்காட்டுவதுமாக..

சோமவன்ச அடிக்கும் குத்துக்கரணங்கள் அவரது அசியல் கோமாளித் தனத்தின் உச்சமாகும்.

அரசைக்கவிழ்ப்போம் என்று காலையில் மிரட்டிவிட்டு "ஆட்சியிலிருந்து விலகமாட்டோம்" என மாலையில் அறிக்கைவிடும் கோமாளித்தனம் யாருக்கு வரும்.

அரசியல் சுயநலத்தின் முழுமையான வடிவம் அவர்.

ஆனால் கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளுக்குத்தான் என்பார்கள் சோமவன்சவின் புளுகு எத்தனை நாளுக்கோ...? சோமவன்சவிற்கான கடிவாளம் சந்திரிகா கையில்தான் இன்னமும் இருக்கிறது. அதிகம் துள்ளுவாரேயானால் சட்டத்தைப்பயன்படுத்தி ஆளை அடக்கும் பிடியை சந்திரிகா பயன்படுத்தவே செய்வார்.

இது சோமவன்சவுக்கு நன்றாகத்தெரியும்.

எனவே அவரின் காலில் சரணடைந்தபடிதான் வெளிப்பகட்டுக்கு அவர் அலம்புகிறார் அவ்வளவுதான்.

பாவம் தென்பகுதி மக்கள். அவரின் அரசியல் பலவீனம் அறியாமல் கைதட்டுகிறார்கள்.... ஜோராய்த் தட்டட்டுமே..!

## இவர்களுக்குப்புரியுமா..?



அரசு- புலிகள் பொதுக் கட்டமைப்பு ஒன்று உருவாவதைத் தடுக்குமாறு மகாநாயக்கர்களிடம் பிக்குகள் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளதாம்.

அதாவது மகாநாயக்கர்கள் சனாதிபதிக்கு இது தொடர்பாக ஆணையிட வேண்டும் என்று அவர்கள் கருதுகிறார்கள் போலும்...

பாவம் பிக்குகள் முன்னணியினருக்கு பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக சரியான விளக்கமில்லையோ அல்லது விளக்கமிருந்தும் அத்தகைய கட்டமைப்பொன்றின் உருவாக்கம் தங்களின் அரசியல் எதிர் காலத்துக்கு ஆபத்தாகிவிடும் என அஞ்சுகிறார்களோ தெரியவில்லை.

இடைக்கால நிர்வாகம்

பொதுக்கட்டமைப்பு,

சமாதானப் பேச்சுவார்த்தை, என எந்த வார்த்தையைக் கேட்டாலும் அவர்களுக்கு ஒவ்வாமை ஏற்பட்டு உளறத் தொடங்கிவிடுகிறார்கள். ஆன்மீகம் அரசியல் பேச வெளிக்கிட்டாலும், அரசியல் ஆன்மீக உபதேசம் பண்ண வெளிக்கிட்டாலும் ஆபத்தென்னவோ முழுத் தேசத்திற்கும் முழு மக்களுக்கும்தான்.

அரசியல் வாதிகளை ஆன்மீக வாதிகள் ஆட்டிப்படைக்க வெளிக்கிட்டால் நாட்டில் மிஞ்சுவது மதவெறியும் இன வெறியும்தான்.

இலங்கையின் பௌத்த சிங்கள அரச பீடங்களும் மத பீடங்களும் நாட்டை அரசியல் ரீதியிலோ மக்களை ஆன்மீக ரீதியிலோ மேம்படுத்தியதாக வரலாறே இல்லை. அரசுக்கு வெளியே தப்பிச் சென்று அரசமரத்தடியில் அமர்ந்து ஞானம் பெற்ற போதிமாதவனின் வாரிசுகள், அரச பதவிகளில், ஆட்சிக் கதிரைகளில் அமர்ந்து கொண்டு அதிகார பீடத்தவரை ஆட்டிப்படைக்கும் அசிங்கம் இலங்கையில் நடந்து வருகின்றதெனலாம்.

இதுவே இலங்கையின் இன்றைய அவலங்களுக்கெல்லாம் மூல காரணியும் முன்னெப்போதுமில்லாத அளவுக்கு பிக்குகளின் ஆதிக்கம் என்பது அரசியல் மட்டுமல்ல நாடாளுமன்றத்திலும் அதிகரித்துள்ள நிலையில் நியாயமான ஆட்சி ஒன்றிற்கான சாத்தியக் கூறுகள் அஸ்தமனமாகத் தொடங்கிவிட்டது. இலங்கை இன விவகாரத்தில் தீர்மானங்களை வலியுறுத்தும் அல்லது அரசை நெறிப்படுத்தும் சக்திகளாக பிக்குகளும், அஸ்கிரிய மற்றும் மல்வத்தை பீடாதிபதிகளும் இருக்கும் வரை இலங்கை சமாதானம் நிலவும் ஒரு நாடாக இருக்கவே போவதில்லை.

பிக்குகள் முன்னணியினரின் மல்வத்தை அஸ்கிரிய பீடாதிபதிகளுக்கான கோரிக்கைகளை அவர்கள் எவ்வாறு அணுகப்போகிறார்கள் என்பது தெரியாது எனினும் அவர்கள் தர்மப்படி, நியாயப்படி தமிழ்மக்கள் தொடர்பான விடயங்களில் தமது எண்ணப் போக்குகளை மாற்றிக்கொள்வார்கள் என்று கூறவும் முடியாது.

பொதுக்கட்டமைப்பென்பது மனித நேயப் பணிகளுக்காக உருவாக வேண்டியுள்ள ஒன்றாகும். மனித நேயத்தைப் புறக்கணிக்கும் மனிதாபிமானம் என்பது தேசாபிமானமாக அர்த்தப்படாது வெறும், மதவெறியாகவே வரலாற்றில் பதியப்படும்... புரிகிறதா புத்தத்தை சரணடைந்ததாகக் கூறும் பிக்குகளே...

## மூடி மறைக்க முடியாது



"சிறிலங்கா இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள கிழக்கு பிரதேசத்திலுள்ள வெலிக்கந்த பகுதியில், கருணா கும்பலைச் சேர்ந்தவர்களின் முகாமொன்று இருக்கிறது"

"அதுமட்டுமல்ல அவர்கள் ஆயுதபாணிகளாகவே அப்பகுதியில் இயங்குகிறார்கள்"

அவர்கள் அங்கு அப்படி ஆயுதபாணிகளாக இயங்க அனுமதித்திருப்பது அப்பட்டமாக யுத்த நிறுத்த மீறலாகும்.

"புரிந்துணர்வு உடன்பாட்டின்படி அவர்களின் ஆயுதங்களை அரசு களைந்திருக்க வேண்டும்."

இப்படி கூறியிருப்பவர் வேறுயாருமல்ல போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட தலைமைப் பிரதிநிதி பி. ஆர்.ஸ்டீபன் என்பவரேயாவார். கிழக்கில் விடுதலைப்புலிகள் மீதான தாக்குதல்கள் குறித்து ஆராய சந்திரிகா அம்மையார் அமைத்த விசேட ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

யார், எதனை, எங்கே கூற வேண்டுமோ அவரே அதனை அந்த இடத்தில் வைத்துக் கூறிவிட்டார்.

அவரின் சாட்சிய வார்த்தைகளின் அடிப்படையில் பார்த்தால் அந்தப் பகுதியில் விடுதலைப் புலிகள் மீதான தாக்குதல்கள் அனைத்திற்கும் யார் காரணம் என்பதை அறிந்து கொள்வதென்பது அவ்வளவு கடினமான க்ாரியமேயல்ல...

கருணாகுழு- அரசபடை- அரசு என்ற முத்தரப்பு தொடர்பற்றதாக இந் நிகழ்வுகள் நடந்தேற வாய்ப்பே கிடையாது என்பது நன்கு தெளிவாகிவிட்டது. எனினும்- இந்த விசாரணைகள் முடிவில் எதுவும் நடக்கப்போவதில்லை என்பது தெரியும்.

எல்லாம் ஒரு கண்துடைப்பு நடவடிக்கைதான்.

கருணா குழுவை அரசு கைவிடப் போவதில்லை. அவர்களின் முகாம்களை அரச படையினர் பாதுகாப்பதை நிறுத்தப் போவதுமில்லை, அவர்களிடமுள்ள ஆயுதங்களை அரசு களையப்போவதுமில்லை.

இவையனைத்திலும் அரசின் அரசியல் அபிலாசைகள் அடங்கியுள்ளன. அது மட்டுமல்ல அரசுக்கு யுத்தத்தின் மீதான ஆர்வம் இன்னமும் அதிகளவில் முனைப்படைந்தே வருவதால் கருணா குழுவை மட்டுமல்ல எந்தக் குழுவையும் அரசு அரவணைக்கவே செய்யும்.

கண்காணிப்புக் குழுவும் பட்டும் படாமலுமே எதனையும் கூறும் அழுத்தம் கொடுக்காது வலியுறுத்தவும் செய்யாது.

ஆக... இத்தகைய யுத்தநிறுத்த மீறல்கள் தொடரத்தான் போகின்றன. அவ்வளவுதான்.

சமாதானம் என்னவாகும் என்று கேட்கிறீர்களா?

சமாதானம் அப்படி என்றால் என்று அரசு சிந்திப்பது உங்களுக்குப் புரியாது யுத்தம் சரணம் கச்சாமி என அரசு தீர்மானித்து வெகுகாலமாகிவிட்டது என்பதை நாம் உணராமல் இருப்பது நமக்குத்தான் ஆபத்து.

**செங்குட்டுவன்**




01. இந்தியா பிரபாகரன் பற்றி கவனமாக இருக்கும்படி நோர்வேக்கு எச்சரிக்கை- ரைம்ஸ்.

"சூடுகண்ட பூனை"

02. ஜே.வி.பியை அனுசரித்துப் போகுமாறு சந்திரிகாவுக்கு அநுரா அறிவுரை- செய்தி.

"அடுப்பங்கரைப் பூனை"

03. கொபி அனான் தன் மகன் கோஜோ அனானுக்கு ஐ.நா. சபை ரகசியங்களை வெளியிட்டார்- தாலிப்டீன்

"திருட்டுப் பூனை"

04. சந்திரிகா தன்வழியில் செல்கிறார். ஜே.வி.பி தன் வழியில் செல்கிறது.

"வழிகள் வேறானாலும் நோக்கம் ஒன்று"

05. புலிகள் விமானத்தளம் வைத்திருப்பது ஒரு போர் நிறுத்த மீறலாகும். -கதிர்காமர்.

"தமிழர் வைத்திருப்பது பற்றி இல்லையே"

06 கெயிட்டியில் எமது படை காலங்கடத்துகிறது. எல் ரீற் ரீ நுட்பமாக வளர்ந்து கொண்டிருக்கிறது .-இக்பால் அதாஸ்.

"பழைய பாடல் புதிய இசையமைப்பு"

# கடல் எங்கள் வளம்





விரிவடைந்து வரும் பொருளாதாரமொன்றின் தேவைகளுக்கு பொருந்தக்கூடிய வகையில் பாடசாலைக்கல்வி முதல் பல்கலைக் கழகம் வரையிலான பாடத் திட்டங்களுள் மேற்கொள்ளவேண்டிய சீர்திருத்தங்கள் மிக முக்கியமான உபாயங்களாகும். கல்வித்துறையில் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் புதிய உலக ஒழுங்கொன்றில் எழுச்சி கண்டுவரும் சவால்களை எதிர்கொள்வதற்குப் போதியளவாக இருக்கவில்லை. நாம் அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிட்டிருக்கும் கடல்வளம் சார் கல்வியானது மானிட மூலவள அபிவிருத்திக்கு அடிப்படை பங்களிப்பினை வழங்குவது மட்டுமன்றி நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் இன்றியமையாத பங்களிப்பினை வழங்க முடியும். இக்கல்வித்துறை பல்கலைக்கழக மட்டத்தில் டிப்ளோமா கற்கை நெறியாக யாழ்பல்கலைக்கழகத்திலும், தென்னிலங்கையில் சிறிஜயவர்த்தனா பல்கலைக்கழகத்தின் சாகர வளாகத்தில் பட்டப்படிப்பு சார்ந்த கற்கை நெறியாகவும் இருந்து வருகின்றது. பாடசாலை மட்டத்தில் க.பொ.த.சா/த வகுப்புக்களில் தொழில் முன்னிலைப் பாடங்களில் ஒன்றான கடல் உயிர்வள தொழில் நுட்பம் (Marine Bio Resources-Technology(88) நன்னீர் உயிர் வள தொழில் நுட்பம் (Fresh water Bio ResourcesTechnology (87) எனும் இருபாடங்கள் பாடவிதானத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

இலங்கையின் சனத்தொகை 1கோடி 85 இலட்சம் ஆகும். இதில் 50%மானோர் கரையோரப் பிரதேசங்களிலே வாழ்கின்றனர். 1497 மீன்பிடிக் கிராமங்களில் 500 இற்கு மேற்பட்ட கிராமங்கள் வடகிழக்கு பிரதேசங்களில் அமைந்துள்ளன. இதனால் கடல்வளம் சார் கல்வியானது நமது பிரதேசங்களில் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டிய அவசியம் உள்ளது. வெளிநாடுகளில் நன்கு திட்டமிடப்பட்ட முறையில் இக்கல்வித் திட்டம் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், உயர் தொழில் நுட்ப நிறுவனங்களில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. குறிப்பாக நோர்வே, ஜப்பான், இந்தியா, சீனா, ஐக்கிய அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் கடல் வளத்துறைக்கான தனியான பல்கலைக்கழகங்கள் ஆய்வு மையங்கள் நிறுவப்பட்டு முற்றிலும் நவீன தொழில்நுட்ப விஞ்ஞான ரீதியான மீன்பிடி, கடற்பொறியியல் பதப்படுத்தல் (PRES-ERVATION), சிறப்பான கடல்வள முகாமைத்துவம் போன்றவை கற்பிக்கப்படுவதுடன் நன்கு பயிற்றப்பட்ட துறை சார்ந்த வல்லுனர்களையும் இக்கல்வியினூடாக உருவாக்கிக்கொள்ள முடிகின்றது. எனவே எமது பிரதேசங்களிலும் இத்துறை சார்ந்த கல்வியினை அபிவிருத்தி செய்கின்ற பொறுப்பு கல்விசார் சமூகத்திற்கு மட்டுமல்லாது முழுச் சமூகத்திற்கும் இருக்கின்றது.

கடல்வளம் சார் கல்வியானது பல்வேறு துறைகளையும் பரந்துபட்ட அறிவினை கொண்ட கல்விசார் நிகழ்ச்சித் . மாக உள்ளடக்கப் பட்டுள்ளது. இதனை பின்வருமாறு நோக்குவோம்.

1. புவியியல் ரீதியாக சமுத்திரங்களின் அறிவியல் தன்மைகளை வெளிக்கொண்டுவரும் துறையாகவும், கடல் நீரின் அசைவுகள், அலைகள், வற்றுப்பெருக்கு மட்டங்கள், கடலின் அடித்தளத்திற்கும் வளிமண்டலத்திற்குமிடையிலான தொடர்புகள், பாறை அமைப்புக்கள், மண்படிவுகள், வானிலை, காலநிலை, கரையோர அமைவு என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

2. விஞ்ஞான ரீதியில் நீரின் வெப்பநிலை, உவர்ப்புத்தன்மை (Salinity) அமில காரத்தன்மை, கலங்கல் தன்மை, கடல்நீர் மாசடைதல், நீரில் வளர்ப்பு,அலங்கார வளர்ப்பு, மீன்களில் ஏற்படுகின்ற நோய்களும் அவற்றைக் கட்டுப்படுத்தும் காரணிகள் மற்றும் கடல் நீரின் பௌதீக இரசாயன காரணிகள் என பரந்துபட்ட விடயங்களை கொண்டமைந்துள்ளது.

3. உயிரியல் (Biologhy) அடிப்படையில் கடல்வாழ் உயிரினங்களில் மீன்கள் ஓட்டுமீன்கள், மொலஸ்காக்கள்,கிரஸ்ரேசியன்கள், இணைப்புடலிகள், வன்கூடுகொண்டவை, பிளாந்தன்கள் (Plankton) தனி நீந்திகள், அல்காக்கள், பாலூட்டிகள், அடித்தள உயிரிகள் என்பனவற்றின் உணவூட்டல் வாழ்விடம் தொழிற்பாடுகள், நடத்தையியல், இனப்பெருக்கம் போன்ற விடயங்களை கொண்டதாகும்.

4. கடற் பொறியியல் சம்பந்தமாக கப்பலோட்டம் (Navigation) இயந்திரங்களின் வகைகளும் அவற்றின் பயன்பாடுகள் பழுதுபார்ப்பு ஈரடிப்பு இயந்திரம் (Two stroke) நாலடிப்பு இயந்திரம் (Four stroke) மாலுமிகள் சம்பந்தமான பயிற்சி, தூரம், திசையறிகருவிகள் பயன்பாடு, கடல்மைல்கள், கடற்கலன்கள் கட்டுதல் தொடர்பான அடிப்படை விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

5.பொருளாதாரத் துறை ரீதியாக கடற் போக்குவரத்து, மீன்பிடித் துறைமுகங்கள், உல்லாசப்பயணம், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கம், செயற்பாடுகள் மீன்பிடித்துறையுடன் தொடர்புடைய அரச அரசசார்பற்ற நிறுவனங்கள், அரசாங்கத்தினால் நடைமுறைப் படுத்தப்படும் மீனவர் நல நோம்பல் தொடர்பான திட்டங்கள், கடல்சார் உணவுப் பொருட்களின் உற்பத்திச் சாலைகள், ஏற்றுமதி இறக்குமதி, மீன்பிடி உபகரணங்கள், உருவாக்குதல், பழுதுபார்த்தல், சந்தைப்படுத்தல், விரிவாக்கம் (Extension) மீன்பிடி முறைகளும் அவற்றின் வகைகள், துறைமுக பராமரிப்புக்கள் என பல்வேறு அறிவியல் சார்ந்த விடயங்களை உள்ளடக்கிய பாடநெறியாக அமைந்துள்ளன.

*கடல் வளக்கல்வியின் முக்கியத்துவம்.*

1. கடல்வாழ் உயிரினங்களிலிருந்து பெறப்படும் பயன்பாடுகள் இன்று அதிகரித்துள்ளன. மருத்துவத்துறை, கைத்தொழில்துறை, பொருளாதாரம் சார்ந்த துறைகளின் மூலம் அதிகளவு கண்டுபிடிப்புக்கள் சாதனைகள் ஆராய்ச்சியாளர்களினால் நிகழ்த்தப்பட்டுள்ளது. குறிப்பாக பல நோய்களை குணப்படுத்தக்கூடிய மருந்துப்பொருட்கள், நோய் எதிர்ப்பு சக்தியாக பயன்படும் மருந்து வகைகள் கடல்சார் உணவுப் பொருட்களிலிருந்து கண்டறியப் பட்டிருப்பதுடன் இவற்றிலிருந்தான பயன்பாடுகளை நேரடியாக அவதானிக்கக்கூடிய நிலையை ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர். இவை பற்றிய அறிவினை மாணவர் மத்தியில் ஏற்படுத்துதல் அவசியம்.

2. இயற்கையாகவும் மனித தலையீட்டாலும் கடல் நீர் மாசடைந்து வருவதுடன் கரையோர பௌதீக நிலைகள் அழிவடைந்து செல்கின்றன. இதனை தவிர்ப்பதற்கு மாணவர் கல்வியில் இத்துறையை உள்ளடக்குதல் வேண்டும். ஏனெனில் கரையோரப் பகுதியிலேயே 50%மான மக்கள் வாழ்கின்றனர். இந்த வளத்தைப் பயன் படுத்துவோரே இதனை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்ற விழிப் புணர்வுகளை மாணவர் மத்தியில் உருவாக்க முடியும்.

3.வேலை வாய்ப்பினை பொறுத்தமட்டில் த்றபோது கிட்டத்தட்ட 150000 பேர் நேரடியாகவும் 50000பேர் மறைமுகமாகவும் சந்தைப்படுத்தல், கடற்றொழில் திணைக்களம், கூட்டுத் தாபனம், கூட்டுறவு இறங்கு துறைகள், கப்பல் கம்பனிகள், தொழிற்சாலைகள், ஏனைய தனியார் துறைசார்ந்த அமைப்புக்களில் வேலைவாய்ப்பினை பெற்றுள்ளனர். எனவே இத்துறையை அபிவிருத்தி செய்வதால் மேலும் பல மடங்கு ஊழியப்படையை உள்வாங்கக்கூடிய துறையாக விரிவடையும்.

4. வடகிழக்கு மாகாணத்தில் 500இற்கு மேற்பட்ட கரையோரப் பாடசாலைகள் காணப்படுகின்றன. இப்பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களில் கூடுதலானோர் இடைநிலைப் பாடசாலைக் கல்வியுடன் இடைநிறுத்தி விடுகின்றனர். இதனால் கடல்வளம் சார் அறிவு, திறன்கள் முழுமையாகக் கிடைப்பதில்லை. குறிப்பாக நவீன தொழில் நுட்பமுறைகளைப் பயன்படுத்தி மீன் உற்பத்தியில் ஈடுபடமுடியாது. முற்றிலும் பாரம்பரிய மீன்பிடி முறையில் இன்றும் தங்கியிருத்தல். இதனை தவிர்ப்பதற்கு நவீன தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்திக்கொள்ளக் கூடிய சூழலை இக்கல்வியினூடாக முன்னெடுக்கமுடியும்.

5. சமுத்திரவியல் தொடர்பான அறிவினை மாணவர்களினூடாக மக்கள் மத்தியில் ஏற்படுத்துதல் குறிப்பாக இயற்கை அனர்த்தங்களான வெள்ளப்பெருக்கு, சூறாவளி, சுனாமி போன்றவை ஏற்படுத்துவது தொடர்பான சமுத்திரவியல் இயல்புகள், பண்புகளை மாணவர்களுக்கு புகட்டுவதன் மூலம் உயிரிழப்புக்கள், அழிவுகளிலிருந்து எதிர்காலத்தில் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

மேலே கூறப்பட்டுள்ள விடயங்களை நோக்கும் போது எமது பிரதேசங்களில் இக்கல்வியானது மாணவர் மத்தியில் விரிவுபடுத்த வேண்டிய அவசியத்தை உணரமுடிகின்றது. 01.07.2002இல் தமிழீழக் கல்விக் கழகம் யாழ்.பல்கலைக் கழகத்தில் மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறியினை பூர்த்திசெய்து வெளியேறிய 50பேரை யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் தெரிவுசெய்யப்பட்ட 70 பாடசாலைகளில் இப்பாடத்தினை மாணவர்கள் கற்பதற்கு மாகாண கல்வியமைச்சினூடாக ஆசிரியர்களாக நியமித்து அவர்களுக்கான சம்பளத்தினையும் வழங்கி வந்தது. தற்போது வடகிழக்கு மாகாண கல்வியமைச்சு 01.03.2005 இல் 68 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டு மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களுக்கும் இக்கல்வியினை மாணவர்கள் கற்பதற்கு ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

கடந்தகால போர்ச்சூழல், சுனாமிப் பேரலையின் தாக்கம் காரணமாக சிதைவுகளுக்குள் இருந்தும் உடைவுகளுக்குள் இருந்தும் எமது பொருளாதாரத்தினை மீட்டெடுக்க வேண்டிய கடமை எம் முன் காத்துக்கிடக்கின்றது. இராணுவ நடவடிக்கைகளினால் இத்துறை சார்ந்த கட்டுமானங்கள் சீரழிந்திருப்பதுடன் மீன்பிடியில் ஈடுபடும் நேரம், தூரம், கட்டுப்பாடுகள் என்பன வரையறுக் கப்பட்டிருப்பது துரதிர்ஷ்டமான தொன்றாகும். இலங்கை அரசாங்கம் அரசியல் சுதந்திரமடைந்து அரை நூற்றாண்டுகள் கழிந்த பின்னரும் கூட எமது கல்வி ஏற்பாடுகளுக்கு அபிவிருத்தி தேவைகளுடன் இன்னமும் அர்த்தமுள்ள உறவினை ஏற்படுத்தவோ அல்லது பராமரிக்கவோ முடியாமல் உள்ளது. நிலவும் கைத்தொழில்களுக்குக் கூட பொருத்தப்பாடுடைய தொழில் நுட்பப்பாடநெறிகள் இல்லாதிருக்கின்றது. எனவே எமது பொருளாதார வளமாகிய கடல்வளம் சார் கல்வியினை அபிவிருத்தி செய்வதனால் எதிர்காலத்தில் தன்னிறைவு கொண்ட தேசிய பொருளாதார மேம்பாட்டை உருவாக்கிக் கொள்ளலாம் என்பதில் ஐயமில்லை.

**-க.பரமேஸ்வரன்-**



ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி. 08 . 04 . 2005

மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# ஜே.வி.பி யின் கூச்சல்...!

சமஷ்டிமுறையிலான தீர்வுகள்மூலம் நாடுகளுக்குள் தோன்றிய இன முரண்பாடுகளை களைந்து உலகம் மிக வேகமாக பொருளாதார ரீதியிலும், அரசியல் ரீதியிலும் முன்னேறி வருகின்ற சூழலில் இலங்கையில் இன்னமும் 'சமஷ்டி' என்ற சொல் ஒரு சிவில் யுத்தத்துக்கான ஆயுத மாகப் பயன்படுத்தப்படும் பெரும் அவலம் நடந்து வருகிறது.

சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு வருடங்களுக்கு மேலான பாரம்பரியத்தைக்கொண்டதாகக் கூறப்படும் இந்த சமஷ்டிமுறைமை இன்னமும் இலங்கையில் 'உச்சரித்தால் வாய் சுடும்' என்கிற நிலையிலிருக்கிறது.

இலங்கை சுதந்திரமடைய முதல் தொடரும் தமிழரின் இனமுரண்பாட்டுக்கு இன்னமும் எந்த உருப்படியான தீர்வு களையும் அதிகார தரப்புகள் திறந்த மனதுடன் முன்வைக்கவில்லை.

தமிழர்களின் பிரச்சினைக்கு முன்வைக்கப்பட்ட தற்காலிக ஏற்பாடுகள், யோசனைகள், முன்மொழிவுகள் எல்லாமே செயலிழந்தன, செத்துப்போயின.

காலத்துக்குக் காலம் சில ஒப்பந்தங்களை கொண்டு வருவதும் அதன் அதிகாரங்கள் குறித்து கூச்சலிடுவ தோடும் அவை வலுவிழந்து போய்விடுகின்றன.

இவைதான் பண்டா-செல்வா ஒப்பந்தம் என்றும், டட்லி-செல்வா ஒப்பந்தம் என்றும், மாவட்டசபையிலிருந்து மாகாணசபை வரை தமிழர்கள் ஏமாற்றப்பட்ட வரலாறாக தொடர்கிறது.

இந்த ஏமாற்றங்களின் விளைவாக தோன்றிய, தமிழர்களின் ஆயுதப்போரின் வலிமையை உணர்ந்து தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வாக சமஷ்டி முறையிலான ஓர் தீர்வை எட்ட உலகம் தூண்டிவரும் இன்றைய சூழலிலும் அதனை தோற்கடிக்க தென்னிலங்கையில் ஜே.வி.பி. கங்கணம் கட்டி நிற்கிறது.

அனுராதபுரத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க அங்கு ஆற்றிய உரையில் 'நாட்டில் சமஷ்டி முறையிலான தீர்வு ஒன்று ஏற்படுவதை ஜே.வி.பி ஒருபோதும் அனுமதிக்காது' எனத்தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியின் இந்த நிலைப்பாடானது ஒன்றும் புதியதொரு விடயமோ அல்லது அதிர்ச்சி தரும் ஒரு தகவலோ அல்ல, ஆயினும் சமஷ்டி முறையிலான தீர்வுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் இத்தகைய கட்சிகள் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு எத்தகைய தீர்வுகளையும் முன்வைக்கத் தயாரில்லாத நிலையிலேயே செயற்படு கின்றன.

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு என்பது அதிகார பரவலாக்கம் குறித்தோ, ஒப்பந்தங்கள் குறித்தோ பேசுவதற்குள் அடங்கிக்கிடக்கவில்லை. தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு என்பது யாப்பு அரசியலோடு சம்பந்தப்பட்ட விவகாரமாக இன்றும் தொடர்கிறது.

இலங்கையை அழுத்திக்கொண்டிருக்கும் மிகப்பெரிய இந்தப்பிரச்சினைக்கான ஒரு தீர்வாக முன்வைக்கப் பட்டிருக்கும் சமஷ்டி அடிப்படையிலான தீர்வையும், சிங்கள மக்கள் மத்தியில் சூடாக்கி இலாபத்தை தேடிக்கொள்ள ஜே.வி.பி முனைப்புடன் செயற்படுகிறது.

ஜே.வி.பியின் இத்தகைய நிலைப்பாடானது தமிழ் மக்களின் பிரச்சினைக்கு யதார்த்தத்தில் எத்தகைய தீர்வுகளையும் எத்தரப்பும் கொண்டு வரமுடியாது. கொண்டு வரவும் கூடாது என்ற அக்கட்சியின் நிலைப்பாட்டை வலியுறுத்துவதாகவே உள்ளது.

சோசலிச அரசியல் என்றும், பொதுவுடமை சமுதாயம் என்றும் புரட்சிகர அரசியல் என்றும், தம்மை காலத்துக் குக்காலம் மாற்றிக்கொள்ளும் இந்த சிவப்புச்சட்டை தோழர்கள் எப்படி தமக்கென ஒரு நிரந்தரமான அரசியல் கொள்கைகளும், நிலைப்பாடுகளும் இல்லாது தாங்கள் கூறிக்கொள்ளும் அரசியல் சித்தாந்தங்களுக்கு முரணான இனவாதத்தையும், மதவாதத்தையும் பற்றி படர்ந்து சமஷ்டி மூலமான அரசியல் தீர்வுக்கு புதைகுழி தோண்டமுயற்சி செய்கின்றனர்.

இந்த நிலைப்பாடானது இலங்கையின் அரசியல் தலைமையைக் கைப்பற்றிக்கொள்ள நாட்டின் நலனை தீயிட்டுக்கொளுத்தி அதில் இலாபம் தேட முயலும் ஒரு முயற்சியே அன்றி வேறில்லை.

இந்த நிலையில் ஜே.வி.பி. யின் சமஷ்டி முறையிலான தீர்வுக்கு எதிரான நிலைப்பாடு என்பது தமிழ் மக்கள் ஏமாற்றங்களின் இறுதியில் தமது விடுதலைக்காக தேர்ந்தெடுத்த ஆயுதப் போராட்டத்தை இறுதிவரை உறுதி யோடு பின்பற்ற வேண்டுமென்பதையல்லவா வலியுறுத்து கிறது.

# அடுத்த தேர்தல் பயணம் தொடங்குகிறதா...?

**—பு.சத்தியமூர்த்தி—**

இந்தியச் சஞ்சிகை ஒன்றில் சில வருடங்களுக்கு முன்பு ஒரு துணுக்கு வெளியாகியிருந்தது. தனது பாடப்புத்தகத்தை தந்தையிடம் காட்டும் ஒரு பாடசாலைச் சிறுவன். "ஐந்து வருசத்துக்கொருமுறை லோக்சபா (இந்திய நாடாளுமன்றத்தின் பெயர்) வுக்குத் தேர்தல் நடக்குமுன் இந்தப் புத்தகத்தில் தப்பா போட்டிருக்குப்பா" எனத் தனது தந்தைக்கு கூறுவதாக அமைந்திருந்தது. அந்தத் துணுக்கு. தேசியக் கட்சிகளின் செல்வாக்கு வீழ்ச்சியுற்று தொங்கு நாடாளுமன்றமே யதார்த்தமாகிவிட்ட நிலையில் கூட்டணி அரசாங்கங்களும் அவற்றின் உள்ளக குத்து வெட்டுக்களால் அடிக்கடி தேர்தல்கள் நடத்துவதையும் கேலிசெய்யுமுகமாகவே அந்தத் துணுக்கை குறித்து சஞ்சிகை பிரசுரித்திருந்தது.

இன்றைய சிறிலங்காவின் அரசியல் களத்தை அவதானிக்கும்போது அன்றைய இந்திய அரசியல் நிலையும் குறித்த துணுக்குமே மனதில் எழுகின்றன.



இன்னும் சில நாட்களில் சிறிலங்கா வின் 13 ஆவது நாடாளுமன்றத்தின் ஆயுள் இடைநடுவிலேயே முடிவுறுத்தப்படலாமெனப் பரவலாகவும் பலமாகவும் எதிர்பார்க்கப்படு கின்றது. அப்படி நடந்தால் ஐந்து வருடங் களுக்குள் நடக்கும் நான்காவது தேர்தலாக அமையும் சிறப்பை அடுத்த தேர்தல் பெறும்.

சிறிலங்காவின் முதலாவது நிறை வேற்றதிகார சனாதிபதியால் கொண்டுவரப்பட்ட இரண்டாவது குடியரசு யாப்பின் அதிகாரங்களைப் பயன்படுத்தி நான்காவது சனாதிபதி போகின்ற போக்கைப் பார்த்தால்; அவர் பதவியில் இருக்கும் வரை அல்லது இந்த யாப்பு அமுலில் இருக்கின்ற வரை சிறிலங்காவின் நாடாளுமன்றத்திற்கான ஆயுள் ஒரு வருடமும் மேலும் சில நாட்களோ மாதங்களோ மட்டுமாகத் தான் இருக்கமுடியும் போலிருக்கிறது.

ஏனெனில் தற்போதைய 2 ஆவது குடியரசு யாப்பின் படி "நாடாளுமன்றம் தெரிவு செய்யப்பட்டு ஒரு வருடத்துக்குள் சனாதிபதியால் அதனைக் கலைக்க முடியாது" அதன்படி 13 ஆவது நாடாளுமன்றம் தெரிவு செய்யப்பட்ட 2004 ஏப்ரல் 2 ஆம் திகதியிலிருந்து பார்க்கையில் இம் மாதம் 1 ஆம் திகதியுடன் அந்தக் கருணை காலம்" அல்லது "வாக்குறுதியளிக்கப்பட்ட தயவு காலம்" முடிவடைந்து விட்டது. சிறிலங்காவின் நாடாளுமன்றத்தின் தலை மீது 'கலைப்பு' என்ற கத்தி மிகக் கூர்மையுடன் தொங்கிக்கொண்டிருக்கின்றது. இரவில் நித்திரைக்குப் போகும் நாடாளுமன்ற உறுப்பி னர்கள் காலையில் துயிலெழும் போது "முன்னாள் உறுப்பினர்கள்" என்ற சிறப்பை பெற்று விட்டிருக்கக் கூடிய அளவில்தான் இன்றைய நிலை காணப்படுகிறது.

ஏன் இந்த நிலை? அம்மையார் ஏன் இந்தப் பிடி பிடிக்கிறார்? அவரது தனிப்பட்ட அரசியல் கணக்குகள் அவரது கட்சி நலன்கள் என்பவற்றுக்கப்பால் இதற்கான பதில்களெதுவும் கிடையாது. அப்படியாயின் நாட்டின் தேசிய நலனையும் மக்களின் சமூக, பொருண்மிய அசைவியக்கத்தையும் கடுமையாகப் பாதிக்கக் கூடிய இந்தத் தீமானங்களை ஒரு தலைவர் எடுப்பது சரியானதா? இப்படியான கேள்விகளைக் கேட்டு நேரத்தை விரயமாக் கிக் கொள்ளத் தேவையில்லை. அரசியல் வாதிகளைப் பொறுத்தவரை, அதிலும் குறிப்பாக சந்திரிகா அம்மையாரைப் பொறுத்தவரை "தேசிய நலனாவது கத்தரிக்காயாவது" என்பதே அவரது நிலைப்பாடு. தற்போ தைய அரசியலமைப்பின் படி ஒருவர் சனாதிபதிப் பதவி யில் இரண்டு தடவை மட்டுமே இருக்க முடியும். அதன் படி இரண்டு பதவிக் காலங்களைப் பூர்த்தி செய்யும் தறுவாயிலுள்ள அம்மையாருக்கு இத்துடன் தனது அரசியல் வாழ்வைப் பூர்த்தி செய்துவிட மனமில்லை. எனவேதான் எவ்வகையிலாவது நாட்டின் தலைமைப் பதவியைத் தொடர்ந்தும் கைப்பற்றி வைத்திருப்பதற்கு ஆடாத ஆட்டமெல்லாம் ஆடுகிறார் அம்மையார். அதற்காக என்னென்ன செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்கிறார்.

இந்தச் சித்து வேலைகளைச் செம்மையாகச் செய்வதற்கு அறுதிப் பெரும்பான்மையுள்ள ஒரு நாடாளுமன்றம் அவருக்குத் தேவைப்படுகிறது. அத்தோடு அட்டையாக ஒட்டிக்கொண்டுள்ள ஜே.வி.பியினரின் பணயக் கைதியாக இருக்கும் நிலையிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்பதுவும் அவருக்கான அவசரத் தேவையாக இருக்கிறது.

ஆனால் அம்மையாரின் கணக்குகள் பலிக்குமா?

யதார்த்தம் அவரது கனவுகளை ஏற்குமா? அனுமதிக்குமா?

அவரது சகாக்கள் அவருக்கு எந்தளவுக்கு ஒத்துழைப்பார்கள்?

இன்றைய கள நிலவரப்படி சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பி யும் இணைந்து அமைத்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அடுத்த தேர்தலிலும் அதே வடிவத்தில் தேர்தலில் போட்டியிடுமா? என்பது இன்றுள்ள மிக முக்கிய கேள்வியாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடிக்க ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இரண்டு பங்காளிகளுக்குமே தனியே முடியாது என்ற கணிப்பே அவர்களுக்குள் இருக்கிறது. எனவே தான் தமது பொருந்தா கூட்டை இன்னும் உதறி விட்டு தனி வழி போகாதிருக்கிறார்கள்.

அதிலும் குறிப்பாக அம்மையாரின் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கோ தனித்துத் தேர்தலில் நிற்கும் வலு அறவே கிடையாது என்றே பலரும் கணிப்பிடுகிறார்கள். அம்மையாரது கட்சியின் வலுவின் கணிசமான பகுதியை உறிஞ்சிக் கொழுத்திருக்கிறது ஜே.வி.பி.

ஒப்பீட்டளவில் கூட்டணியிலிருந்து வெளியேறுவது ஜே.வி.பிக்கு இலாபமானது. ஏனெனில் தற்போதைய அரசாங்கம் சாதித்தவை யெல்லாவற்றுக்கும் உரிமை கோரியபடியே அதன் பாதிப்புகளுக்கெல்லாம் அம்மையாரையும் சகாக்களையும் நோக்கிக் கையைக் காட்டி விட்டு மீண்டும் போஸ்ரர் ஒட்டப் புறப்பட்டு விடலாம். ஆனால் ஜே.வி.பியின் நிகழ்ச்சி நிரலின் பல விடயங்களை அது இன்னமும் சாதிக்க வேண்டியிருக்கிறது. அது வரை அது தற்போதைய கூட்டணியில் ஒட்டிக்கொண்டிருக்க வேண்டிய தேவையிருக்கிறது. ஆனால் இந்த ஒட்டிக் கொண்டிருத்தல் என்பது ஜே.வி.பி யைப் பொறுத்தவரை கையைக் கட்டிக் கொண்டும் வாயை மூடிக்கொண்டு மிருத்தல் என அர்த்தப்படாது. கூடாரத்தில் புகுந்த ஒட்டகமாக சண்டித்தனம் செய்து கொண்டு தான் ஜே.வி.பி இருக்கிறது. (எனவேதான் அவர்களை விட்டு ஒதுங்க வேண்டுமென்ற தேவை சந்திரிகாவுக்கு எழுந்திருக்கிறது)

அத்தோடு பதவிச் சுகமென்று ஜே.வி.பியை பற்றிக்கொண்டுவிட்டது. ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான கைத்தொலை பேசியுடன் சிவப்பு சில்க் சட்டையணிந்து அமெரிக்க முன்னாள் அதிபர்கள் வழங்கிய விருந்துபசாரத்துக்கு விமல் வீரவன்ச செல்கிறார். உலகத் தலைவர்களின் கையெழுத்து சேகரிக்கும் தனது மகனின் பொழுது போக்கிற்காக கிளின்ரன், புஷ் ஆகியோரை சோமவன்ச அமரசிங்க சந்திக்கப்போகிறார்.

இவையெல்லாம் "ஆட்சிப் பங்காளிகள்" என்பதன் பதவிதானே? அது அவர்களைப் பற்றிப் பிடித்துக் கொண்டு விட்டது.

அத்தோடு தாம் செய்யவேண்டிய பலவற்றை அரசியல் அதிகாரத்தை வைத்து செய்துகொள்ள வேண்டிய தேவையும் ஜே.வி.பிக்கு இன்றுமிருக்கிறது.

எனவேதான் அது இன்னமும் கூட்டை உடைத்து வெளியேறாமலிருக்கிறது.

அப்படியென்றால் இந்தக் கூட்டணியிலேயே தேர்தலைச் சந்தித்தால் அடுத்த நாடாளுமன்றிலும் ஜே.வி.பியின் தொல்லைக்கு எப்படி முகங்கொடுக்க முடியும்? இது சந்திரிகாவின் இன்றைய பிரச்சினை.

ஆனால் ஐ.தே.கட்சியினைப் பிளந்து மீண்பிடிப் பது ஜாதிக ஹெல உறுமயவுக்கு இல்லாமற் போயிருக் கும் செல்வாக்கை தாம் கைப்பற்றுவது, தொண்டமான் மற்றும் முஸ்லிம் அரசியல் வாதிகளின் ஆதரவு என்பவற் றின் மூலம் ஜே.வி.பி என்ற தடையைத் தடியூன்றித் தாண்ட முடியுமா? என்பதே அம்மையாரது எதிர்பார்ப்பு.

எது எப்படியோ அடுத்த நாடாளுமன்றமும் தொங்கு நாடாளுமன்றமாகவே அமையப் போகிறது. அம்மையார் 2005 இறுதியுடன் தனது சனாதிபதி பதவியை விட்டு விலகித் தேர்தலை நடத்தாது விட்டால் ஐ.தே.கட்சி சன்னதமாடப்போகிறது.

எனவே தென்னிலங்கையின் அரசியல் களத்தில் அமைதி நிலைக்கு தற்போதைக்கு வாய்ப்பிருப்பதாகப் படவில்லை. மாறாக ஒரு சிவில் யுத்தம் தோன்றினால் அது அவ்வளவு ஆச்சரியப்படக் கூடிய ஒன்றாக இருக்காது.


# சுனாமி பங்கீட்டு முத்திரையும் மக்களின் குழப்பமும்

**சங்கரன்**

சுனாமி நிவாரண பங்கீட்டு அட்டையில் வாரம் ஒன்றிற்கு தலை ஒன்றிற்கு 375 ரூபா என தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆனால் அப்படி புள்ளி ஒன்றிற்கு 375 ரூபா வாரத்தில் வழங்கப்படமாட்டாது என முல்லைத்தீவு மாவட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது. இதனால் மக்கள் குழம்பிப் போய் உள்ளனர்.

இரு புள்ளிகள் வெட்டப்பட்டு 375 ரூபா வழங்கப்படுகின்றது. இதனால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் குழப்பமடைந்துள்ளார்கள். எங்கேயோ மோசடி இடம்பெறுவதாகவும் யாரோ சுனாமி முத்திரை நிவாரணத்தை சுருட்டுவதாகவும் குழம்பியுள்ளனர்.ஆனால் இங்கு




மோசடி அல்லது வெட்டு எதுவும் இடம்பெறவில்லை. இது தொடர்பாக மக்களுக்கு விளக்கமின்மையே காரணமாக கூறப்படுகிறது. விளங்கப்படுத்தாமை அதிகாரிகளின் தவறா? அல்லது விளங்கிக்கொள்ளாமை மக்களின் தவறா? என்பது ஒரு புறமிருக்க

இதுதொடர்பாக உரியவர்கள் எமக்குக் கூறியபடி இம்முத்திரைகளில் உள்ள ஒற்றை எண்கள் அதாவது 1,3,5,... ஆகியன 175ரூபா பெறுமதிக்கு உலக உணவுத்திட்ட பொருட்களை வழங்குகின்றது. அடுத்து முத்திரையில் இருக்கின்ற இரட்டை எண்கள் அதாவது 2,4,6,... ஆகியன 200 ரூபா பெறுமதிக்கு நிவாரணம் மற்றும் நல்லிணக்கத்திற்கான அமைச்சினாலும் வழங்கப்படுகிறது. எனவே இதன்படி ஒரு வாரத்திற்கு 175ரூபா பெறுமதியான ஒற்றை எண் புள்ளி ஒன்றையும், 200 ரூபா பெறும தியான இரட்டை எண் புள்ளி ஒன்றையும் வெட்டினால்தான் 375 ரூபா தொகை கிடைக்கும். இதன் படியே நிவாரணம் வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு வாரத்திற்கும் ஒற்றை எண்ணைக்கொண்ட புள்ளி ஒன்றையும் இரட்டை எண்ணைக் கொண்ட புள்ளி ஒன்றையும் வெட்டுதல் வேண்டும். இங்கு வெட்டப்படும் ஒற்றை எண் புள்ளி பாதிக்கப்பட்டவருக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது என்பதற்கு அத்தாட்சியாக உலக உணவுத்தாபனத்திற்கும் வெட்டப்படுகின்ற இரட்டை எண் புள்ளி பாதிக்கப்பட்டவருக்கு நிவாரணம் வழங்கப்பட்டமைக்கு அத்தாட்சியாக நிவாரணம் மற்றும் நல்லிணக்க அமைச்சுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. இதுவே இதன் நடைமுறை என்கிறார்கள் அதிகாரிகள்.

இந்த நிலையில் 1 புள்ளி 375 ரூபா என்ற நிலை மாற்றி இரண்டு புள்ளி வெட்டப்பட்டு 375 ரூபா என்ற நிலையில் 200+175 = 375 என்ற அடிப்படையில் உணவுப் பொருட்கள் வழங்கப்படுகிறது.

இம் முத்திரைகளில் ஒற்றை எண் புள்ளிகள் உலக உணவுத்திட்டத்தின் கீழ் வாரத்திற்கு ஒருவருக்கு 175 ரூபா பெறு மதியான திட்டமிட்டபடி உணவுப் பொருட்களும் இரட்டை எண் புள்ளி களுக்கான முத்திரை நிவாரணம் மற்றும் நல்லிணக்கத்திற்கான அமைச்சினால் 200 ரூபா பெறுமதியான விரும்பிய பொருட்களுக்கும் உரித்துடையதாகும். எனவே ஒரு வாரத்திற்கு 2 புள்ளிகள் வீதம் வெட்டப்பட்டு கணக்கு முடிக்கப்படும் இதன் அடிப்படையில் 16 வாரங்களில் புள்ளிகள் யாவும் வெட்டப்பட்டு நிவாரணம் வழங்கி முடிக்கப்படும் என முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார். இவ்விடயம் அரசாங்கத்தினால்தான் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. என அவர் பிரதேச செயலகங்களுக்கும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்று நிருபத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது..

இதன் படி சனவரி 17 இல் இருந்து 4 மாதத்திற்கே உணவு முத்திரை பொருள் அட்டையின் படி வழங்கப்படும்.

இது ஒரு புறம் இருக்க சுனாமி நிவாரண முத்திரையில் இன்னுமொரு பெரும் பிரச்சினை மக்கள் மத்தியில் குழப்பத்தையும் சீற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

அதாவது உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்படும் உணவுப் பொருட்களின் விலையில் பாரிய வித்தியாசம் ஏற்பட்டிருக்கின்றது.

175 ரூபாவுக்கு பெறுமதியான பணத்திற்கு உணவுப்பொருள் வழங்கப்படவில்லை. 46 ரூபா வரையிலான பணத்திற்கு உணவுப் பொருள் வழங்கப்படவில்லை. பொருட்களின் விலை ஏற்றம் காணப்படுகின்றது. இதன்படி வழமையான விலை இல்லை 175 ரூபா பெறுமதிக்கு (வாரம் ஒன்றிற்கு)

| உணவு | நாள் | வாரம் |
|---|---|---|
| அரிசி | 400x7 | 2800g |
| கோதுமை மா | | |
| பருப்பு | 60x7 | 420g |
| சீனி | 20x7 | 140g |
| எண்ணெய் | 20x7 | 140g |

ஆகியன வழங்கப்படுகின்றன. இது சாதாரண சங்க விலையில் கூட பாரிய வித்தியாசம் ஏற்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக ப.நோ. கூட்டுறவுச் சங்க அதிகாரியைக் கேட்ட போது இலங்கை அரசாங்கத்தின் சுற்று நிருபத்தின் படியும் உலக உணவுத் திட்ட நிறுவனத்தின் சுற்றறிக்கையின் படியும்தான் வழங்கப்படுகின்றது. இதில் மோசடியோ, போக்குவரத்து விநியோகச் செலவோ எதுவும் இணைக்கப்படவில்லை.

இவ்வளவு பொருட்கள் வழங்கும்படிதான் தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. விலை குறிப்பிடப் படவில்லை.

இதில் பிரச்சினை என்னவென்றால் பன்னாட்டுச் சந்தையில் கொள்வனவு செய்யப்பட்ட உணவுப் பொருட்களை உலக உணவுத் திட்டம் இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளது. அது இங்குள்ள விலைக்கும் அங்குள்ள விலைக்கும் நிறைய வித்தியாசம் காணப்படுகின்றது.

உதாரணமாக முல்லைத்தீவில் அரிசி 25 ரூபா விற்க கொழும்பில் 40 ரூபா விற்கப்படுகின்றது. இதுதான் பிரச்சினை. இதனை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார்.


இக் குழப்பத்திற்கு வலுவூட்டும் வகையில் இலங்கை அரச ஊடகமும் சில விசமிகள் மூலம் குழப்பமான செய்திகளை வெளியிட்டு வருகின்றன. இதனை சரியாக ஆராயாமல் பாமரமக்களின் தவறான எண்ணத்தை வெளியிடுவது நல்லது அல்ல.

இதனால் மக்கள் மேலும் குழப்பமடைந்துள்ளனர்.

உணவு முத்திரை தவறான முறையில் அச்சடிக்கப்பட்டு விட்டது இதனால் மக்கள் குழம்பிப் போய் உள்ளனர். இது எட்டு மாதத்தில் வழங்கப்பட வேண்டியதுதான் ஆனால் நாலு மாதத்தில் நிறைவடைகின்றது. இதுதான் குழப்பம்.

இதில் எதுவித மோசடியும் சுவீகரிப்பும் இடம்பெறவில்லை. அரசாங்கத்தினால் இப்படியே வழங்கும்படி அரசாங்க அதிபருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதில் மக்கள் குழப்பமடையத்தேவையில்லை. எல்லாம் அரசாங்கத்தின் ஏற்பாடாகவேயுள்ளது. நிர்வாக ரீதியிலான நடைமுறையே மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. நிர்வாக ரீதியிலான நடைமுறையே மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. குழப்பமான ஒரு நடைமுறையை அரச நிர்வாகம் ஏன் நடைமுறைப் படுத்தியது என்பது தெளிவாயில்லை. இது பல சந்தேகங்களையும் தோற்றுவித்துள்ளது.

முல்லைத்தீவில் இன்னுமொரு பிரச்சினை அதாவது சுற்று நிருபம் வருமுன் தனியே 4 புள்ளிகள் மட்டும் வெட்டப்பட்டு 375x4 என உணவுப் பொருள் வழங்கப்பட்டு விட்டது. இனி 4 வார முத்திரை வெட்டப்பட்டு உணவுப்பொருள் வழங்கப்படமாட்டாது என புதுக்குடியிருப்புப் பிரதேச பல நோக்குக் கூட்டுறவுச் சங்க அதிகாரி அறிவித்துள்ளார். இதுவே யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு நிலை எனவும் சுட்டிக் காட்டினார். இதனாலும் மக்கள் குழப்பமடைய வேண்டாம் என கேட்டுக்கொள்கின்றார்.


PUTHUKKUDIYIRUPPU M.P.C.S. LTD
01 APR 2005
Regd. No.M/ 47 of 24.04.1987

எமது இல: MU/RA/I/TSUNAMI/FR
கச்சேரி,
முல்லைத்தீவு,
29.03.2005.

உதவி அரசாங்க அதிபர்,
உதவி அரசாங்க அதிபர் பணிமனை,
கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், துணுக்காய்.

"சுனாமி" முத்திரை வழங்கல்:

மேற்படி முத்திரையானது 32வாரங்களுக்கென ஒரு வாரத்திற்கு 375/- பெறுமதியினைக் கொண்டதாக வழங்கப்பட்டுள்ளது.

இம்முத்திரைகளின் ஒற்றை எண் புள்ளிகள், உலகஉணவுத்திட்டத்தின் 175/- பெறுமதிக்கும், இரட்டை எண் புள்ளிகள், நிவாரணம் மற்றும் நல்லிணக்கத்திற்கான அமைச்சின் 200/- பெறுமதிக்கும் உரித்துடையதாகும். எனவே, ஒரு வாரத்தில் இரு புள்ளிகள் வீதம் வெட்டப்பட்டு கணக்கு முடிக்கப்படடல் வேண்டும். இதனடிப்படையில் 16வாரத்தில் புள்ளிகள் யாவும் வெட்டப்பட்டு, நிவாரணம் வழங்கி முடிக்கப்படும். அதன்பின்னர் மக்களுக்கான புதிய முத்திரைகள் வழங்கப்படும்.

எனவே, இவ்விடயம் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தி, நிவாரண வேலைகள் நடைபெறுவதைக் கண்காணிப்பதோடு, உரிய ப.நோ.கூ.சங்கங்கள், கிராமசேவையாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கும் உரிய அறிவுறுத்தல்களை வழங்கி, மக்களுக்கு சரியான விளக்கத்தினை அளிக்கவும் ஏற்பாடுகளை செய்யுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்விடயம் தொடர்பாக நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்கத்திற்கான அமைச்சின் [illegible] அவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரதி தங்களின் தகவலுக்கு [illegible] நடவடிக்கைக்[illegible] அனுப்பி வைக்கப்படுகின்றது.

# செவிமடுக்கப்படாத தொண்டராசிரியர்களின் குரல்கள்

**கம்ஷிகா சுகுமார்**

பாடசாலைகளில் மாணவர்களின் கல்விப்பசியை பூர்த்தி செய்துகொண்டிருந்த தொண்டராசிரியர்கள் இன்று தமது வயிற்றுப் பசிக்காக வீதியில் இறங்கிப் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.


இந்த அவல நிலைமையின் ஓர் எடுத்துக்காட்டுத்தான் ஒரு சில நாட்களின் முன்னர் புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற தொண்டராசிரியர் ஆர்ப்பாட்டப் பேரணி ஆகும்.

தமக்கு அரசாங்கம் நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்று கோரியே அவர்கள் இந்தப் பேரணியினை நடத்தி உள்ளனர். இப் பேரணியில் தொண்டராசிரியர்கள் மட்டுமல்லாது மாணவர்களும், கல்விச் சமூகமும் நலன் விரும்பிகளும் கலந்து கொண்டுள்ளனர்.

இந்தப் போராட்டத்தினை இவர்கள் மேற்கொள்ள வேண்டியதற்கான காரணம் என்ன? இவர்களை ஏமாற்றியவர்கள் யார்? இன்று யாரிடம் இவர்கள் கோரிக்கை விடுத்துக் கையேந்தி நிற்கின்றனர்? இவர்கள் செய்த அளப்பரிய சேவை எத்தகையது? என்ற பல்வேறு கேள்விகள் தற்போது எழுந்துள்ளன.

வடகிழக்குப் பகுதி உட்பட நாட்டின் ஏனைய மாகாணங்களிலும் கூட பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்கள் உள்வாங்கப்பட்டு அவர்களின் அளப்பரிய பணி மூலம் சிறந்த கல்விச் சமூகம் உருவாக்கப் பட்டுக்கொண்டிருக்கின்றது.

இப்பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் நிலவும் பாரிய அளவிலான ஆசிரியர் பற்றாக்குறையை ஈடுசெய்து கல்விப் போதனை செய்ய வேண்டிய கட்டாயதேவை கல்விச்



சமூகத்தினருக்கு ஏற்பட்டதன் காரணத்தினால்தான் இந்தத் தொண்டர் ஆசிரியர்கள் பாடசாலைகளுக்குள் உள்வாங்கப்பட்டனர்.

கற்பிப்பதற்கு அடிப்படைத் தகைமை உள்ளவர்களே இவ்வாறு உள்வாங்கப்பட்டு அவர்களுக்குப் பொருத்தமான வகுப்புக்கள் வழங்கப் பட்டுள்ளன.

போரும், இறுக்கமான பொருளாதார நெருக்கடியும் நிலவிய சமாதான காலத்திற்கு முற்பட்ட பகுதியில் இவர்களின் பணி மேலானதாக இருந்தது. அப்போது அவ்வாறான பணியில் ஈடுபட்ட அடிப்படை தகுதியுடைய ஆசிரியர்கள் ஆசிரிய சேவையினுள் உள்வாங்கப்பட்டுவிட்டனர்.

ஆயினும் பாடசாலைகளில் நிலவிய ஆசிரியர் பற்றாக்குறையினை ஈடுகட்ட முடியவில்லை. இதனாலேயே மேலும் தொண்டர் ஆசிரியர்கள் பாடசாலைகளில் உள்வாங்கப்பட்டனர்.

இவர்களது விடயத்தில் பாடசாலை அதிபர்களோ, வலயக் கல்விப் பணிமனையோ, மாகாணக் கல்வி அமைச்சோ, அமைச்சர்களோ, மத்திய கல்வி அமைச்சோ அரசாங்கமோ தீவிர கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை.

ஏனெனில் இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்கின்ற அறிவிப்புக்கள் அவ்வப்போது ஊடகங்களில் வெளிவரும். பின்னர் சிறிது காலத்திற்கு அவ்வாறான அறிவிப்புக்கள் எவையும் வெளிவராது.

(21ஆம் பக்கம் பார்க்க)

# ஆசியாவைப் பிரித்து வைக்கவே மேற்குலகம் விரும்புகிறது

உலக அரசியலில் கடந்த வாரத்தில் இரண்டு விடயங்கள் சர்ச்சைமிக்கவையாக விளங்கின. இரண்டுமே ஆசியாவுக்குள் ஏற்பட்ட குழப்பங்களாகவே காணப்பட்டன. இரண்டு விடயங்க





காப்புப் பொறுத்துநெருக்கடிக்குள் தள்ளும் விடயமாக உள்ளது. இதனால் இந்திய-பாகிஸ்தான் உறவில் உள்ள நெருக்கம் குறைந்து படிப்படியாக விரிசல் ஆரம்பித்துள்ளது. இதனை பாகிஸ்தான் கடந்தவாரம் நிகழ்ந்த தினவிழாவில் பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் வெளிப்படுத்தியிருந்தார். அவர் அவ் விழாவில் உரையாற்றும் போது காஷ்மீரின் சுதந்திரத்திற்காகவும், பிராந்திய அமைதிக்காகவும் பாகிஸ்தான் உழைக்கும் எனத் தெரிவித்ததுடன் காஷ்மீர் இந்தியாவுக்குரியதான பிரதேசம் என்பதை நிராகரித்து கருத்துக் கூறினார். இந்தியாவின் பஸ் போக்குவரத்து மற்றும் பேச்சுக்கள் எல்லாமே இந்திய பாகிஸ்தான் உறவு சார்ந்ததேயன்றி காஷ்மீர் பொறுத்து எதனையும் இந்தியா இழக்கவோ பிரயோகிக்கவோ தயாரில்லாத நிலைமை காணப்படுகின்றது என்றார். மேலும் ஆப்கானிஸ்தான் சனாதிபதியை அவ் விழாவின் சிறப்பு விருந்தினராக அழைத்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். எவ்வளவுக்கு

வதே நோக்கமாக உள்ளது. இந்தியா அமைதியாக பொருளாதாரத்திலும், தொழில் நுட்பத்திலும் வளர்ந்துவருகின்றது. மறுபுறத்தில் அயல் நாடான சீனாவுடன் கொண்டிருக்கும் நெருக்கம் இரு நாடுகளது சுமூகமான உறவை மட்டும் கொண்டிருப்பதாக அமெரிக்கா கருதவில்லை. மாறாக இரண்டின் வளர்ச்சியும் மிக நேர்த்தியாக போய்விடுமா என்ற குழப்பத்துக்குள் இந்தியா பற்றிய அமெரிக்கக் கொள்கைகளில் தற்காலிக மாறுதல் தென்படுகிறது. ஏற்கனவே சீனாவைக் கையாளத் திட்டமிட்டதனால் இந்தியாவுடன் கொண்டிருந்த நெருக்கம் விரிசலடைய ஆரம்பித்ததுடன் கொண்டலீசா ரைஸ் மிகத்தெளிவான போக்கை அமெரிக்கா கொண்டிருக்க முயற்சிக்கின்றார் என்பது தெளிவாகத் தென்படும் விடயமாகும். அதாவது சீனாவை பனிப்போர் காலத்தில் வளர்த்து



### சீனா - தாய்வான் முறுகல்

தாய்வானின் சுதந்திரப் பிரகடனத்தை நிராகரித்து சீன நாடாளுமன்றத்தில் சட்டம் உருவாக்கப்பட்டதை அடுத்து தாய்வான் எங்கும் மக்கள் போராட்டம் ஆரம்பமாகியுள்ளது. மக்களின் ஆர்ப்பாட்டங்களும், திரட்சியான போராட்டமும் உலகத்தை தமது பக்கம் திருப்பியதுடன் சீனாவின் ஆத்மாவில் கைவைத்துள்ளதென்பதாகவே தெரிகிறது. மிகவும் ஆபத்தான கட்டத்துக்குள் சீன் வளைகுடா அகப்பட்டுள்ளது.

ஒருபுறம் சீனா இராணுவ நடவடிக்கைக்குத் தயாராகி வருகின்றமை மறுபக்கத்தில் தாய்வானின் சுதந்திரத்தை நிறுவுவதென்ற அணுகுமுறையும் போரை உருவாக்கும் முயற்சியாகவே அமையும். போர் ஒன்று ஏற்பட்டால் சீனா வென்றுவிடும் என்பதில் அதிகம் சந்தேகம் கொள்ளத்தேவையில்லை. என்றாலும் அதிலும் சீனா தனது பிரதான எதிரிகளை ஒன்றிணைக்கவும், அதிக

வடிக்கையை எடுக்க யோசிக்கலாம். ஏன் இவ்வாறு கருத்து முன்வைக்கப்படுகிறதென யாரும் அதிர்ச்சியடையலாம். சீனா அமெரிக்காவுக்கு ஓரளவேனும் எதிர்ப்பினைக்காட்டக்கூடிய அரசு தூரத்திலேனும் ஒரு மாறுதல் சாத்தியப்படுமென கருதக்கூடிய ஓரரசு அமெரிக்காவைவிட அதிகமான எதையும் சீனா சாத்தியப்படுத்தப் போவதில்லை ஆனால் கீழைத்தேசத்திற்கும், கீழைத்தேசத்தின் சார்பிலுமுள்ள அரசு சீனா.

தாய்வானின் சுதந்திரக் கோரிக்கை நியாயமானது அதனை சீனா மட்டுமல்ல எந்த சக்தியும் நிராகரிக்கமுடியாது. ஆனால் தாய்வான் அமெரிக்காவின் அடிமையாக செயல்பட்டுக்கொண்டு சுதந்திரக் கோரிக்கையை முன்வைப் பதுதான் ஏற்றுக்கொள்ளமுடியாதது. யதார்த்தமாகவே தனித்து விடுதலைக்கான போராட்டத்தை தாய்வான் நடத்தியிருந்தால் உலக சக்திகள் அனைத்துமே ஏற்றிருக்கும். சீனாவை அழிக்கவிரும்பும் சக்திகளுக்கு கையாலாக செயல்படுவதையே ஏற்றுக்கொள்ளமுடியாது. தாய்வானின் சுதந்திரப் பிரகடன மும் அமெரிக்க-தாய்வான் உறவுக்கும் அதிகமான தொடர்பு உண்டு. ஒரு பக்கம் சுதந்திரம் மறுபக்கம் அடிமைநிலை. அமெரிக்காவின் பொருளாதார இராணுவ



ளையும் கையாளும் சக்தியாக அமெரிக்காவே காணப்பட்டது. ஐரோப்பிய அரசுகள் போன்ற ஒரு பொதுக்கட்டமைப்புக்குட்பட்ட அரசியலையோ அல்லது சமூக-பொருளாதார கட்டுமானத்தையோ ஆசியாவுக்குள் காணமுடியாததென்பதுடன் அப்படியான சூழல் ஏற்பட்டுவிடக்கூடாதென்பதில் அமெரிக்காவும் அதன் சக சக்திகளும் தொழிற்பட்டு வருகின்றன. இதனைக் கையாளும் திறன் ஆசிய அரசியல் தலையிடம் இல்லை என்பதுடன் அதனை ஊக்குவிக்கும் அரசியல் கலாசாரம் ஆசிய மக்களிடம் வளரவில்லை. இவ்விரு சம்பவங்களையும் பரிசீலனைக்கு உட்படுத்துவோம்.

### இந்திய-பாகிஸ்தான் முறுகல

இந்தியாவும் பாகிஸ்தானும் பரஸ்பரம் நெருக்கமான உறவை பேணுகின்ற நிலை கடந்த ஒரு வருடமாக நிகழ்ந்து வருகிறது. குறிப்பாக காங்கிரஸ் தலைமையிலான ஆட்சி மத்தியில் வந்த பிற்பாடு முழுமையான ஒத்துழைப்புக்கான உறவு விரிவடைந்து வருகிறது. இதில் ஏற்பட்ட முன்னேற்றம் தென்னாசியப் பிராந்தியத்திற்குள் அமைதியை அதிகம் சாத்தியப்படுத்தியது. ஆனால் தற்போது அமெரிக்காவின் F-16 விமானங்களை பாகிஸ்தானுக்கு வழங்குவது தொடர்பாக அமெரிக்காவுக்கும், பாகிஸ்தானுக்குமான முன்னேற்றம் இந்தியாவை பாது

அமெரிக்க நெருக்கத்தை பாகிஸ்தான் கொண்டிருக்கிறது என்பதை முஷாரப் வெளிப்படுத்தியிருந்தார்.

F-16 விமானங்களை பாகிஸ்தானுக்கு வழங்குவதை பலதடவை எதிர்த்து இந்தியா அறிக்கைகளையும், உரையாடல்களையும் மேற்கொண்டது. ஆனால் அமெரிக்க வெளிவிவகாரச் செயலர் கொண்டலீசா ரைஸ்ன் வருகைக்குப் பின்பு அவ்வாறான உரையாடலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக அமைந்தது. உண்மையில் ரைஸ்ன் விஜயம் இந்தியாவை குழப்புவதோடு இந்திய-பாகிஸ்தான் நெருக்கத்தை சீரழிப்பதற்கான நடவடிக்கையாகவும் அமைந்தது.

இரு நாடுகளுக்குமான அமைதிப் போக்கானது இந்தியாவுக்கும் அதிக இலாபமானது என அமெரிக்கா கருதுகிறது. ரைஸ்ன் வருகைக்குப் பின்னர் இரண்டு நாடுகளையும் அமைதியாக இருக்க விடுவதில்லை என்ற எண்ணப்பாட்டை அமெரிக்கா இந்தியா-பாகிஸ்தான் பொறுத்து எடுத்துள்ளது. அதனடிப்படையில் பாகிஸ்தானுக்கு F-16 ரக விமானங்களை வழங்குகின்ற நடைமுறை சனாதிபதி றேகன் காலத்திலிருந்தே ஆரம்பிக்கப்பட்ட விவகாரத்தை புஷ் நிர்வாகம் முற்றுப்புள்ளி வைக்க எடுக்கும் முயற்சியானது இந்திய-பாகிஸ்தான் அமைதி நிலையை குழப்புவதுடன் இந்தியாவின் இயல்பான வளர்ச்சியை குழப்பு

விட்ட அமெரிக்கா தற்போது எதிர்கொள்ளமுடியாது திணறுகின்றது. இவ்வாறு எதிர்காலத்தில் இந்தியாவின் போக்கும் அமைந்துவிடும் என்ற அச்சுறுத்தலுக்குள் அமெரிக்க வெளிவிவகாரத்துறை அகப்பட்டுள்ளது. ஏற்கனவே பனிப்போர் காலத்திற்குப் பின்பு கடந்த இரண்டு தசாப்தங்களாகவே இந்தியாவின் வளர்ச்சிச் சுதந்திரத்திற்குப் பின்பு அதிகரித்துள்ளது. பொருளாதாரம், இராணுவம், தொழில்நுட்பம் என்ற தளங்களில் மிக நேர்த்தியாக இந்தியா செயற்பட்டு வருகின்றது. எனவே இத்தகைய சாதகமான போக்கு அமெரிக்காவின் எதிர்காலத்துக்கு ஆபத்தாக அமைந்துவிடும் என்பதையே முன் கூட்டித்திட்டமிட்டு செயற்படத் தொடங்கியுள்ளது.

**— ஐங்கரன் —**

இந்தியப் பிரதமரோடு உரையாடிய அமெரிக்க சனாதிபதி F-16 ஐ வழங்குவதை நிறுத்தமுடியாது. வேண்டுமாயின் கு-18 ரக விமானங்களை இந்தியாவுக்கு அமெரிக்கா தரத் தயாராக உள்ளதெனக்கூறினார். அப்படியாயின் ஒரு ஆயுதப் போட்டியை மறைமுகமாக அமெரிக்க சனாதிபதியே ஏற்படுத்தியுள்ளார். ஒரு புறம் ஆயுதத்தளபாடத்திற்கான சந்தையை ஏற்படுத்தியிருப்பதுடன் ஆயுதப் போட்டியை ஊக்குவித்துள்ளார். இதனால் சீன பக்கமாக எழுந்துள்ள அரசியல் சூறாவளியைக் கருத்திற் கொண்டதாகவும் அமையலாம்.



அழிவுகளை சந்திக்கவும் உதவியாக அமைந்துவிடும் அல்லவா. இரண்டாம் உலக யுத்தமே ரஷ்யாவின் வீழ்ச்சிக்கு ஒரு காரணமெனக் கூறுகின்றமையை சீனா அனுபவமாக எடுத்தல் வேண்டும்.

சீனாவை நேரடிப்போரில் இழுத்துவிடவேண்டுமென அமெரிக்கா விரும்புகிறது. அதற்கு வாய்ப்பாக சீன-தாய்வான் போர் அமைந்துவிடும். இதனை அரசியலுக்கூடாகவும், உளவியலுக்கூடாகவும் நகர்த்துவதே சீனாவுக்கு அதிக இலாபமாகும். படிப்படியாக தாய்வானை வென்றெடுப்பதே தற்போதைய உலக ஒழுங்குக்கு பொருத்தமானது. அது தவறுமாயின் அமெரிக்கா மீண்டுமொரு பிராந்தியத்தில் போரை நிகழ்த்திக்கொண்டிருக்கும் போது தாய்வான் விடயத்தில் சீனா இராணுவ நட

ஒத்துழைப்புக்களை நம்பியே தாய்வான் செயற்படுகின்றது. இதனால் தாய்வானின் சுதந்திரக் கோரிக்கை என்பது அமெரிக்காமயவாதலின் அல்லது அடிமையாதலின் வெளிப்பாடாகவே அமையும். அதனைவிட சீனாவின் பிடிக்குள்ளும் அடிமைக்குள்ளும் தாய்வானியர்கள் வாழலாம்.

எனவே இரண்டு அரசியல் நிகழ்வுகளுக்குள்ளும் மறைந்திருக்கும் அமெரிக்க கரங்களும் நோக்கங்களும் ஒன்றாகவே உள்ளன. இதில் பிராந்திய ஒருமைப்பாடு, ஐக்கியம் என்பன வற்றுக்கு அப்பால் கீழைத்தேசத்தின் அரசியல் பிரக்ஞை ஒன்று உருவாக்கப்படவேண்டும். அப்போது மட்டுமே மேற்குலக ஆதிக்கம் நெருக் கடிக்கோ அல்லது முடிவுக்கோ வரும்.

# உடன் செயற்படுவதே முக்கியம்

சுனாமிப் பேரலையால் தாக்கப்பட்ட மக்களின் புனரமைப்புக்கான வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பொதுக்கட்டமைப்பு ஒன்று விரைவில் உருவாக்கப்படும் என்று சிறிலங்கா அரசதரப்பு அடிக்கடி கூறிவருகின்றது. முக்கியமாகச் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் பல தடவைகள் கூறிவிட்டனர்.

ஆனால் சுனாமிப் பேரலைகள் ஏற்பட்டு மூன்று மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இவ்வாறு மட்டும் கூறிக்கொண்டிருப்பது என்ன



பயனை விளைவிக்கப்போகிறது? அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இது எப்பொழுது உருவாக்கப்படும் என்று கூற மறுத்துவிட்டார். சனாதிபதி சந்திரிகாவோ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்கள் தலைமையிலான குழுவினர் நாடு திரும்பியதும் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும் என்று கூறியிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

ஆனால் இது குறித்து நம்பிக்கை கொள்ளும் நிலையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் இல்லை என்றுதான் கூறவேண்டும். ஏனெனில் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான பேச்சுவார்த்தைகளும் விரைவில் ஆரம்பமாகும் என சுமார் எட்டு மாதங்களாக அரசாங்கம் கூறி வந்தது. ஆனால் சுனாமியுடன் அது குறித்த பேச்சு இப்போதைக்கு இல்லை என்றாகிவிட்டது.

இப்பொழுது சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் கிட்டவேண்டும். அவர்களின் வாழ்க்கை மீளக்கட்டமைக்கப்பட வேண்டும் என்ற ரீதியில் அதற்கான உதவிகளை வழங்க சர்வதேச நாடுகள் தயாராகவே உள்ளன. ஆனால் அவை சரியான முறையில் செயற்படுத்தப்படவேண்டும் என்பதே அவற்றின் நோக்கமாகும். அதற்கு வசதியாகவே ஒரு பொதுக்கட்டமைப்பை விடுதலைப்புலிகளுடன் இணைந்து அமைக்குமாறு வலியுறுத்திவருகின்றன. எனவே இவ்வாறான கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதில் அரசாங்கம் காட்டிவரும் தாமதம். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேலும் பாதிப்புக்களை ஏற்படுத்துவதாகவே உள்ளது.

உதாரணமாக கடந்தவார இறுதியில் பெய்ய ஆரம்பித்த மழையினால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். தற்காலிக தங்குமிடங்கள் மழை வெள்ளத்தினால் சூழப்பட்டதன் காரணமாக இங்கே தங்கியிருந்த மக்கள் பெரும் துன்பங்களுக்கு உள்ளாகி இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. குறிப்பாக கிழக்கில் அவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு மற்றும் பாவனைப் பொருட்கள் கூட மழை காரணமாக பயனற்றுப் போகும் நிலை ஏற்பட்டது.

இவ்வாறான சூழ்நிலை மீண்டும் ஏற்படாது என்றும் கூறிவிடமுடியாது. எனவே இம் மக்கள் மீண்டும் மீண்டும் சிரமம் அனுபவிக்கவேண்டியநிலை ஏற்படும்.

அதேவேளை தற்காலிக குடியிருப்புக்கள் தற்காலிகமாக மட்டுமே இருக்க வேண்டும். இக்குடியிருப்புக்களிலிருந்து தாம் எப்பொழுது நிரந்தரமான இடங்களுக்குச் செல்வோம், எப்போது தமது நிரந்தர தொழில் வாய்ப்புக்களைப் பெறுவோம். தமது பிள்ளைகள் பாடசாலைக்கு ஒழுங்காகச் சென்று கல்வி கற்பது எப்போது? இயல்பான வாழ்வு நிலைக்குத் திரும்புவது எப்போது? என்ற கேள்விகள் இம் மக்கள் மத்தியில் எழுந்துகொண்டேயிருக்கின்றன.



இன்று இவ்வாறான கேள்விகளை வடக்கு கிழக்கில் வாழும் மக்கள் மட்டுமல்ல இலங்கை முழுவதிலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களும் கேட்டுக்கொண்டேயிருக்கின்றனர். இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும், முகாம்களிலும் வேறு இடங்களிலும் தங்கியிருக்க வேண்டியிருப்பின் அது எத்தகைய துன்பமயமானது என்பது அவர்களுக்குத்தான் தெரியும். இதனை உணர்ந்து அதற்கேற்ப இந்நடவடிக்கைகளை துரிதப்படுத்தவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

தற்காலிக இருப்பிடங்களை அமைத்துக்கொடுக்கும் வரையான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை அரசசார்பற்ற நிறுவனங்களும் ஏனைய பொது அமைப்புக்களும் தமது சக்திக்கு ஏற்றவகையில் செய்து கொண்டுவருகின்றன. ஆனால் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு நிச்சயமாக சர்வதேச உதவிகள் அவசியம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

அத்துடன் அவ் உதவிகளைச் சிறந்த முறையில் பயன்படுத்தி திட்டமிட்டுச் செயற்படுத்துவது என்பது சற்றுக் காலம் எடுக்கும் நடவடிக்கையாகவே அமையும். எனவே அடுத்தகட்டச் செயற்பாட்டுக்கான அடித்தளம் கூட அரசாங்கத்தால் இடப்படாத நிலை தொடர்வது பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவநம்பிக்கை தருவதாகவே இருக்கும்.

இதேவேளை அரசியல் ரீதியாகப் பார்க்கும்போது இவ்வாறானதொரு பொதுக் கட்டமைப்பு உருவாவதற்கான சாத்தியம் பெரியளவில் காணப்படவில்லை. சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் யுத்தத்தால் வடக்குக் கிழக்கில் ஏற்பட்ட அழிவுகளைப் புனரமைப்பது தொடர்பாக அமைக்கப்பட்ட "சிரான்" எனும் அமைப்பிற்கு எவ்வாறு முட்டுக்கட்டைகள் போடப்பட்டன என்பது மிக அண்மைக்கால உதாரணமாகும்.

எனவே வெறும் பேச்சுக்களால் மக்கள் நம்பிக்கை கொள்ளப்போவதில்லை அவற்றால் மக்களுக்குப் பயன் கிட்டிடப் போவதுமில்லை. எனவே பொதுக்கட்டமைப்பு உருவாகப்போகிறது என்று அடிக்கடி கூறுவதைவிட உடனடியாகச் செயற்படுத்துவதன் மூலமே மக்களின் நம்பிக்கையைப் பெறமுடியும்.

**வேலவன்**

## நேர்நோக்கு

# படையினரின் நாசகார நோக்கம்

யாழ் தென்மராட்சிப் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா படையினர் அங்கு பல்வேறு அடாவடித்தனங்களையும் அடக்கு முறைகளையும் அப்பாவி தமிழ் மக்கள் மீது பிரயோகித்து வருகின்றனர்.

அத்தோடு பிரதேச ரீதியாக உள்ள இளைஞர்களிடையே ஏற்படும் குழு மோதல்களுக்கும் மூலகாரணிகளாகவும் செயற்பட்டு வருகின்றனர் அந்த அடிப்படையில் அண்மை நாட்களில் இடம் பெற்ற சம்பவங்களையடுத்து படையினரின் தொடர் ரோந்து நடவடிக்கைகள் சகல பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் மக்கள் மத்தியில் பதட்ட நிலை நிலவி வருகின்றது.

இவை ஒரு புறம் இருக்க இயற்கை வளங்களையும், பயன் தரு மரங்களையும் தொடர்ந்து அழித்து வருகின்றனர். அதாவது தென்மராட்சியின் உஷன், மிருசுவில், கொடிகாமம், மீசாலை, சரசாலை, சாவகச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பனைமரங்கள் தென்னைமரங்கள் படையினரால் அழிக்கப்பட்டு வருகின்றன. இது அப்பிரதேசத்தில் மட்டுமல்ல தமிழர்தாயகப்பகுதிகளில் எங்கு சிறிலங்கா படையினர் நிலை கொண்டுள்ளனரோ அங்கு எல்லாம் இந்தச் செயற்பாடு நடைபெற்று வருகின்றது. கடந்த சில நாட்களாக தென்மராட்சியில் நிலைகொண்டுள்ள படையினர் மாலை வேளைகளில் மக்கள் குடியிருப்புகள் அற்ற பகுதிகளில் அதாவது மக்கள் மீளக் குடியமராத பகுதிகளிற்குச் சென்று பயன் தரு பனைமரங்களையும் தென்னை மரங்களையும் தறித்து தமது காவலரண்களைப் பலப்படுத்தி வருகின்றனர். இவ்வாறு பயன் தரு மரங்களை



படையினர் அழிப்பது தொடர்பாக மக்கள் தமது எதிர்ப்புகளை தெரிவித்து வருகின்றமையை யடுத்து மக்களை அச்சுறுத்தும் வகையிலேயே மாலை நேர ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதேவேளை தென்மராட்சியில் அடிக்கடி குழு மோதல்கள் இடம் பெற்று வருகிறதும் அடிக்கடி பலர் காயங்களுக்குள்ளாவதும் அதிகரித்துள்ளன.

இது தொடர்பாக பொலிசாரிடம் முறைப்பாடு செய்தால் சிறிலங்கா பொலிசார் எதுவும் பெரிதாய் நடவடிக்கை எடுப்பதும் இல்லை. இதனால் விசனமடைந்த மக்கள் தென்மராட்சி தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினரிடம் முறையிட்டனர். இச் சம்பவத்தினை விசாரணை செய்யச் சென்ற தென்மராட்சி அரசியல் துறையினருக்கும் பொலிசாருக்கும் இடையிலான முறுகல் நிலை ஏற்பட்டது.

இது கடந்தமாதம் இடம்பெற்ற சம்பவமாகும். இதன் பின்னணியில் சிறிலங்கா படையினர் செயற்பட்டு வந்துள்ளனர் என்ற உண்மையும் வெளியாகியுள்ளது.

அதாவது பிரதேச ரீதியாக உள்ள ஒருசில இளைஞர் குழுக்களை பயன்படுத்தி அவர்களை கொண்டு இன்னுமொரு இளைஞர் குழுக்கள் மீது ஏவிவிட்டு இக் குழு மோதல்களை ஏற்படுத்துகின்றனர்.

இது ஒரு புறமிருக்க தென்மராட்சியில் அமைந்துள்ள இராணுவ சிற்றுண்டிச்சாலைகளும் அவற்றின் செயற்பாடுகள் பற்றியும் எடுத்துக்கொண்டால் யாழ் புத்தூர் சந்தியில் இருந்த இராணுவத்தினரின் அப்பக் கடை என்று கூறப்படும் சிற்றுண்டிச்சாலை அப்பகுதியில் மக்களால் எரியூட்டப்பட்டுள்ளதை அடுத்து மீசாலை பழைய புகையிரத நிலையப் பகுதியில் உள்ள சிறிலங்கா படையினரின் உயர் பாதுகாப்பு வலய முகாமினுள் அந்த அப்பக்கடை மீண்டும் அமைக்கப்பட்டு அதன் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதாவது சிறிலங்கா படையினரின் கைக் கூலிகளாகச் செயற்படுபவர்கள் அந்த சிற்றுண்டிச் சாலைக்குச் சென்று அங்கு படையினருடன் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

அத்தோடு படையினரும் சிறிலங்கா பொலிசாரும் பொதுமக்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களின் மனங்களை வெல்லுதல் என்ற பெயரில் பல முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் அவை எதுவும் மக்களிடம் பலிக்கவில்லை. அத்தோடு தென்மராட்சியில் உள்ள பொது மக்களின் வீடுகள் பற்றியும் அங்குள்ளவர்கள் பற்றியும் மாவீரர் போராளிகளின் குடும்பங்களின் விபரங்களையும் திரட்டி வருகின்றனர்.

சிறிலங்கா அரசும் சரி அதன் படைகளும் சரி தமிழர் தாயகப் பிரதேசங்களின் கலை கலாச்சாரத்தை சீரழிப்பதில் அன்று முதல் இன்று வரை செயற்பட்டு வருகின்றனர். இப்பொழுது யாழ்ப்பாணத்தில் நடப்பதும் அவைதான். வருங்கால சமூகத்தை இப்போதே மோசமான கலாச்சாரத்திற்குள் தள்ளிவிட்டு விடுவது மட்டுமல்லாமல் தாயக வளங்களையும் அழித்து தமிழர் பிரதேசங்களை ஒட்டுமொத்தமான ஓர் அழிவுக்குக் கொண்டுசெல்வதே அவர்களின் நோக்கமாக உள்ளது.

எனவேதான் இது தொடர்பாக எமது மக்களும், குறிப்பாக இளம் சமூகத்தினரும் இவர்களின் இச் செயற்பாடுகள் தொடர்பாக விழிப்பாக இருக்க வேண்டும் என்பது அனைவரினதும் எதிர்பார்ப்பாக உள்ளது.

**சு.பாஸ்கரன்**



# தமிழர்களின் வாழ்வியல் வரலாறுகளை எமது சிற்பங்கள் வெளிப்படுத்தவேண்டும்

## சிற்பி விக்கினேஸ்வரன்

தமிழீழ போரியல் வரலாறுகளை சிற்பங்களாக வடித்து பலரது பாராட்டுக்களை பெற்றவர் சிற்பக் கலைஞர் செல்லத்துரை விக்னேஸ்வரன். யாழ் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானத்துறையில் பட்டம் (B.Sc-Hons) பெற்ற இவர் இன்று சிறப்பான பல சிற்பங்களை செதுக்கியுள்ளார்.

தமிழர்களது வரலாறுகளையும், தமிழீழ தேசியத் தலைவரின் காலத்தில் இடம்பெற்ற சிறப்பான போரியல் நிகழ்வுகளையும் சிற்பங்களாகச் செதுக்கி ஆவணப்படுத்தி வருகின்றார்.அத்துடன் கிளிநொச்சி நகரில் அமைக்கப்படும் அரும்பொருள் காட்சியகத்திற்கும் தனது பங்களிப்பை வழங்கி வருகிறார்.

அளவையூர் அருட்கவி வினாசித்தம்பி புலவர் அவர்களால் கோயில் சிற்பவேலை ஒன்றுக்காக "சிற்ப ஞானி" கௌரவமும் யாழ். வண்ணார் பண்ணை நாச்சிமார் கோயில் மஞ்சள் சிற்ப வேலைக்காக "சிற்ப கலாநிதி" கௌரவமும் பெற்றிருப்பது இவரது சிறப்புக்கு சான்றாகும். சிற்பக் கலையில் புதியவற்றை புகுத்த வேண்டும் என்ற நோக்கோடு பாரம்பரிய கலை மரபுக்கு அமையவே சிற்பவேலைகளில் ஈடுபட்டுவரும் இவர் தனது வாழ்வில் மகிழ்ச்சியான, மறக்கமுடியாத நாளாக தமிழீழ தேசியத்தலைவர் அவர்கள் அழைத்துப் பாராட்டியதை கூறுகின்றார். சிற்பக்கலை தொடர்பாக நாம் அவரை சந்தித்த போது அவர் எம்மோடு பகிர்ந்துகொண்ட கருத்துக்கள்.

நான் பதினெட்டு வருடங்களாக சிற்ப கலையில் ஈடுபட்டு வருகின்றேன். எங்களுடைய குல தொழில் சிற்பம்தான். ஆனால் நான் செய்வது போன்று சிறப்பான முறையில் என மூதாதையர்கள் இந்தத் தொழிலில் ஈடுபடவில்லை சிற்பத்திற்கு என தனியான ஒரு மரபு இருக்கின்றது. சிலர் அந்த மரபுகளை மீறி செய்கின்றனர் என்னைப் பொறுத்த வரை நான் இந்தியாவுக்குச் சென்று சிற்ப சாஸ்திரங்களை கற்றுவந்தனான். அதாவது மானசரம், காசியபம், சிற்பசெந்தூர் போன்ற நூல்களின் படிதான் நான் சிற்பம் செதுக்குகிறேன். இவ்வாறான சிற்பம் தொடர்பாக பலவற்றை நன்றாகத் தெரிந்துகொண்ட ஒருவராலேயே நன்றாக சிற்பம் வடிக்கமுடியும். அவ்வாறான ஒருவர்தான் நல்ல சிற்பியாகவும் இருக்கமுடியும். மாறாக முழுமையான சிற்பம் தொடர்பாக கற்றறியாத ஒருவர் சாதாரணமாக ஒரு உருவத்தைத்தான் அமைக்க முடி யும். அது சிற்ப கலைநயத்தை வெளிப்படுத்தாது சிற்பத்தை நாம் செதுக்கும்போது சாதாரண மக்களை கவனத்தில் கொண்டு செயல்படக் கூடாது. அவ்வாறு சிற்பத்தினை செதுக்குவோமாயின் அது சாதாரண உருவமாகத்தான் தெரியும்.

சாதாரண மக்களுக்கு அதில் உள்ள உருவம் தான் தெரியும். ஆனால் கலை ஆர்வம் கொண்டவர்கள் அதில் என்ன கலைநயம் மற்றும் பாரம்பரிய வெளிப்பாடுகள் உள்ளனவா என்றே பார்ப்பார்கள். அவர்களது கண்கள் உருவத்தைத் தேடாது அதில் உள்ள கலை நயத்தைத்தான் தேடும். எனவே நாம் சிற்பம் செதுக்கும்போது கலையுலகத்தை கவனத்தில் கொண்டே செதுக்கவேண்டும். அப்போதுதான் அது வெற்றிபெற்ற சிற்பமாக அமையும்.

மேலும் சிற்பங்கள் இரண்டு வகை பாரம்பரியத்தை கொண்டுள்ளன. ஒன்று கிரேக்க பாரம்பரிய சிற்பங்கள் என்பதும் மற்றயது இந்திய பாரம்பரிய சிற்பங்கள் என்றும் கூறலாம். எனது சிற்பத்தின் முக்கியத்துவம் என்னவென்றால் ஈழத் தமிழர்களின் வாழ்க்கை வரலாறுகளை வெளிப்படுத்தவேண்டுமென விரும்புகிறவன். தாயகத்தில் உள்ள சிற்பச் சமூகம் அனைவரும் இந்தியாவின் சிற்பக்கலையை பயின்றவர்கள்தான். ஆனால் இன்று உள்ள சிற்பக் கலைஞர் எதிர்காலத்திற்கு தேவையான நல்ல ஒரு சிற்ப சமூகத்தை உருவாக்கவில்லை என்றே கருதுகிறேன்.



இந்தியப் பாரம்பரிய சிற்பங்கள் பொதுவாக இந்துமதத்தை வெளிப்படுத்தி நின்றாலும் எனது சிற்பங்கள் சிற்பக்கலை மரபுக்கமைய பொதுவான ஓர் வழியில் தமிழர்களின் வாழ்வியல் வரலாறுகளை வெளிப்படுத்த வேண்டும் என்பதுதான் எனது நோக்கம்.

நான் பொதுவாக மரம், யானைத் தந்தம்,கல், சீமெந்து, களி, வார்ப்பு லோகம், சந்தனமரம் போன்றவற்றைப் பயன்படுத்தி சிற்பங்கள் செதுக்குகின்றேன். சிற்பத் துறையில் ஒருவர் உச்ச நிலையை அடைய வேண்டுமாயின் இவ் எல்லா ஊடகத்தையும் பயன்படுத்தி சிற்பம் செதுக்கி இருத்தல் வேண்டும். என்னுடைய சிற்பங்கள் உள்ளதை உள்ளபடி வெளிப படுத்துகின்றன. இதுவும் எனது தனித்தன்மையை எடுத்துக் காட்டும் எனக் கருதுகிறேன். சிற்பிகள் மற்றொருவரை பின் பற்றல் அதாவது கொப்பியடித்தல் என்பது கூடாது என்பது எனது கருத்து.

பெரும்பாலும் சிற்பம் செதுக்குவதற்குரிய விடயத்தினை மனத் தில் நன்றாக உள்வாங்கி செயலில் இறங்கவேண்டும். மனதை நன்றாக ஒரு நிலைப்படுத்தி புறத் தாக்கங்களில் இருந்து விடுபட்டு சிற்பத்தை செதுக்குகின்றபோதுதான் அதில் முழுமையான வெற்றியை பெறமுடியும். எனது முதல் சிற்பம் பதினைந்து வயதில் நயினாதீவு நாகபூசணி அம்மன் சிற்பம் தான் முதலில் செய்தனான். எனது சிற்ப வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவங்கள் நிறைய உண்டு. அவற்றில் முக்கியமானது தமிழீழ தேசியத் தலைவர் அவர்களை சந்தித்தது தான். எனது சிற்பத்திற்கு தேசியத்தலைவர் அவர்களின் ஆதரவு வேர் மாதிரி ஒரு தாவரத்திற்கு வேர் எப்படி முக்கியம் வாய்ந்ததோ அவ்வாறு எனது சிற்பவேலைக்கும் தேசியத் தலைவர் அவர்களின் ஆதரவு முக்கியமான ஒன்று. எனது எதிர்கால இலட்சியம் தமிழீழ வரலாறுகளை முழுமையாக சிற்பங்களாக வடிப்பது தான். தற்போது பெரும்பாலான நிகழ்வுகளை சிறப்பங்களாகச் செதுக்கியுள்ளேன். இன்றும் செதுக்கிக் கொண்டிருக்கின்றேன். நான் செதுக்கியவற்றில் பல என்னையே கவந் துள்ளன. ஆனாலும் அவற்றுள் முக்கியமானது யானைத் தந்தத்தால் செதுக்கிய சிற்பம்தான். தற்போது ஓயாத அலை தொடர்பான சிற்பங்களை செதுக்கிக் கொண்டிருக்கிறேன்.

தமிழர்களின் போராட்ட வரலாறு எதுவரை செல்கிறது அது வரைக்கும் எனது சிற்பப்பயணம் தொடரும். பல்வேறு வேலைகளுடன், தமிழர்களின் விடுதலை தொடர்பாக ஒரு பாரிய பரிய போராட்ட காலத்தில் பலவேலைகளின் மத்தியிலும் ஒரு சிற்பியை சந்தித்து கௌரவித்தது. தேசியத் தலைவர் அவர்களின் எதிர்கால தமிழீழம் தொடர் பான திட்டங்களை கண்டு மிகவும் வியப்படைந்தேன். தலைவர் அவர்கள் என்னை சிற்பியாக சந்தித்திருக்காவிட்டால் சிற்ப உலகில் இருந்து எப்போ நான் வெளியேறி இருப்பன்.

என தனது சிற்ப வாழ்க்கை தொடர்பான கருத்துக்களை சிற்ப ஞானி விக்கினேஸ்வரன் அவர்கள் எம்மோடு பகிர்ந்துகொண்டார். கடினமான ஒரு பணியே சிற்பம் செதுக்குதல் ஆகும். சில சிற்பங்களை செதுக்குகின்றபோது பல மாதங்கள் அல்லது வருடங்கள் கூட எடுக்கலாம். . அவ்வாறான ஒரு நீண்ட பொறுமையை கடைப்பிடித்து இத்தொழிலை செய்கின்ற இவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள் மட்டுமல்ல கௌரவிக்கப்படவேண்டியவர்களும் கூட. இவர்கள் இக்கலையை தங்களோடு முடித்துக்கொள்ளாது இனிவரும் சந்ததியினையும் இதில் வளர்த்துவிட வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பு ஆகும்.

**சுழியன்**

---



## விசுக்விசுக் விசாலாட்சி

கனகாலமாக உந்தக்கதை நடக்குது. எது சோசலிசம், சமஷ்டி, அதிகாரம் பரவலாக்குறது. இன்னுங் கன சுத்துமாத்துக்கள் நடக்குது. எதெண்டாலும் நடக்குமெண்ணுறியளோ. ஹ.... உது இலவுகாத்த கிளியின்ர கதைதான் விட்டுத்தள்ளு சும்மா... அம்மா என்ன அரசியல்ல பெரிய விண்ணியே இல்லக் கேக்கிறன். பொண்டுகள் கூடி இப்ப அரசியல் நடத்த வெளிக்கிட்டிட்டினம் எண்டு தம்பட்டம் அடியாதையுங்கோ. உதெல்லாஞ் சூரன் போரில சூரனுக்குப் பின்னால நிண்டு தலைய ஆட்டுவிப்பார் ஒருத்தர் அது மாதிரி ஆட்டுறதுதான் தெரியுமே... அடுத்த வரியம் முடியக்கிடையில எப்பிடியெண்டாலும் உந்த அதிகாரக்கதிரையில தான் தொடர்ந்துமிருக்கிற வழியத் தேடுறதிலதான் அம்மான்ர வாணாள் போகுது. பின்ன ஜே.வி.பி காறர் நேர கண்டா ஒரு கதை நெத்தியத்திருப்பினா ஒரு கதை தம்பிடேய் பொடியா எங்கட செல்வநாயத்தார் இருக்கயுக்க உந்த சமஷ்டிதான் சரியெண்டு பண்டாரநாயக்கா சொன்ன வரடா? கதிரையில ஏறிக்குந்தினது தான்... ஆளுக்கு அஞ்சுங்கெட்டு அறிவுங்கெட்டு சொன்னதும் மறந்து போச்சடா பின்ன அம்பத்தெட்டுக் குழப்பம் வந்த நேரம் ஆள் அத்தடிப்பட்டுக் கிட்டு ஒப்பந்தம் எழுதெல்லயே. உதெல்லாம் நடந்த நேரம் தமிழரின்ர இனப்பிரச்சினை பூவும் பிஞ்சுமாத்தான்ரா கிடந்தது. உலகமும் அப்பிடித்தான் பார்த்தது. பிறகு பெருத்து வளர்ந்து இப்ப முத்திப் போய்க் கிடக்கு. பின்ன என்னவோ சொல்லுவினமே தானாக்கனியாட்டியும் தடிகொண்டடிச்சாக் கனியுமெண்டு... அ... இப்ப பொடியா நீங்கள் தடியெடுத்தபடியாத்தான் உது பழுத்தது. இனி ஒண்டில் நல்ல பழமா விழோணும். இல்லை அழுகிப் புழுத்து நாசமாப் போயிரும். என்னவோ இப்ப உந்த சிறிலங்காக்காறர் நல்லமாட்டு மாட்டியிருக்கினம். என்ன மீனுக்குவாலும் பாம்புக்குத் தலையுமெண்டு... காட்டி ஒரு சர்வதேச ஒற்றுமையக் காட்டியிருக்கினமெண்டாப் பாருங்கோவன். சீனாவோட சிரிச்சுக்கதைக்கினம். இந்தியாவோட இணைஞ்சு திரியினம். அமெரிக்காவோடயும் அந்த மாதிரி, இஸ்ரேலோடயும் சம்பந்தப்பெட்டிகலக்கினம், பாகிஸ்தானோடயும் பங்காளியாநிக்கினம். அரபு நாடுகளுக்கும் ஆளனுப்பி உழைக்கினம். ஐரோப்பிய நாடுகளுக்கயும் உறவுகள் பிழையில்லை. பின்ன இப்ப இலங்கை தானே. சமரசம் ம்ம்ம்ம் உலா ஆவூம்ம்ம்ம்.. இடமே ஏயேஏஏ உன் வா....ழ்வில் கா....ணா... ஆ ஆ ஆ சமரசம்முலா....வூவூம்... இட... மே...

ச்ச... எனக்கு உந்த சீர்காழியின்ர பாட்டில கனநாளா ஒரு சந்தேகம். உப்பிடியும் ஒருகால மிருந்ததோ எண்டு. பின்ன என்னடா இந்தக் காலத்தில மயானத்தில இருந்த சமரசமும் இல்லாமப் போச்சுதடா... எல்லாங் காலங்கலிரண்டு கத்தரிக்காமூள் பிரண்ட கதை தான் ச்சா.

நான் என்னவோ சொல்ல வந்து எங்கயோ போறன். பொடியா உந்த பொதுக்கட்டமைப்பு பொதுக் கட்டமைப்பெண்டு என்னவோ புதுக் கதையொண்டு உலவுதடா சுனாமியடிச்ச சனத்துக்கு வந்த வாற காசுகளை சாமானுகளை என்னண்டு பகிருறது. எப்பிடிப்பகிருறது. ஆர் பகிருறது எண்டு பலத்த ஆலோசனையள் வாதப்பரதி வாதங்களெண்டு நடக்குது. அது சரி... சொல்லுவினமே, "உள்ளவன் பெட்டிதிறக்கமுதல் இல்லாதவ னுக்குப் பிள்ளை செத்துப் போமெண்டு இவை பங்கிட்டு வரக்கிடையில சுனாமியடியில சுருண்ட சனத்தை பட்டினி கொண்டு போயிரும் பின்னப் பொதுக்கட்டமைப்பு சரிவருமெண்டு சொல்லுறாய்... போடா விசரா... நீ குழந்தைப் பெடியனடா உங்க ஆமியும் பொடியளுமா புரிந்துணர்வுச் சந்திப்புக்களை நட்த்தி என்ன கண்டவை.

(22பக்கம் பார்க்க)




# எப்போது சுனாமி எச்சரிக்கைமையம்?

இப்போதெல்லாம் கடலில் சற்று பெரிய அலையை கண்டால் எமக்கு கடந்த டிசம்பர் 26 சுனாமியையே நினைவுபடுத்துகிறது. இந்துமா கடலில் எழுந்த அந்த அசுர சுனாமி அலை மீது இன்று அல்ல என்றுமே மக்களுக்கு கோபம் தணியாது.

இந்துமா கடற்கரையோரங்களில் வாழ்கின்ற அனைத்து மக்களின் ஏக்கம் என்னவென்றால் பசுபிக் கடலில் ஹவாய்த் தீவில் அமைக்கப்பட்டுள்ள சுனாமி எச்சரிக்கை நிலையம்போன்று இந்துமா கடலிலும் அமைக்க வேண்டும். என்பதே. இவ்வாறான ஒரு நிலயத்தை அமைப்பதற்கு சுமார் 20 மில்லியன் அமெரிக்க டொலர் வரை செலவாகலாம் என கூறப் படுகிறது.



சுனாமியால் பாதிக்கப்பட்ட தெற்காசிய நாடுகள் 2005 சனவரி 6 ஆம் திகதி ஒன்றுகூடி இந்துமா கடலிலும் சுனாமி எச்சரிக்கை நிலையத்தை அமைப்பதற்கு உடன்பட்டுள்ளனர்.

அமெரிக்க நோவா-எம் துணைக்கோள் 2002 மே 21 இல் ஏவப்பட்டு 2003 முதல் 26 பசுபிக் கடற்கரை நாடுகளுக்கு பூகம்பச் சுனாமி எழுச்சிகளை அறிவித்து வருகிறது. புதிதாக அமைக்கப்படவுள்ள இந்து மா கடல் சுனாமி எச்சரிக்கை மிதப்பிகளும் நோவா-எம் துணைக்கோளுடன் இணைக்கப்படலாம் என்று கருதப்படுகிறது.

அடுத்தவாரம் யப்பானில் அனைத்துலக விஞ்ஞானிகளும் கூடி கலந்துரையாடி பூகோள சுனாமி எச்சரிக்கை ஏற்பாடு ஒன்றை ஆரம்பித்து வைக்கப்போவதாக தெரிகின்றது.

ஏற்கனவே பசுபிக் சுனாமி எச்சரிக்கை நிலையம் தவறுகளின்றித் துல்லியமாகக் கண்டுபிடிக்கின்றது.


இதனை அமெரிக்காவின் தேசியக் கடற் சூழ் வெளி உளவு ஆணையகம் வடிவமைதத்துள்ளது.

அந்த கண்காணிப்பு முறையில் சுனாமி உளவுசெய்து சமிக்ஞை அனுப்பும் அடிக்கடல் அதிர்ச்சி உணரும் கருவிகள் அவற்றை நோவா-எம் துணைக் கோளுக்கு மின்னலை மூலம் அறிவிக்கும்.

அமெரிக்காவின் நோவா ஆணையகம் சூழ் வெளித்துணைக் கோள் இணைப்பு பணிக்கு வருடம்தோறும் 800 மில்லியன் டொலர் செலவில் கண்காணிப்பு எச்சரிக்கை பணிகளை மேற்பார்வை செய்து வருகின்றது.

கடலடி அதிர்வுக் கருவிகள் 20000அடி கடல் ஆழத்தில் கப்பல் இயந்திர இறக்கி மூலம் வைக்கப்படுகின்றன. மற்றும் 15 அடி நீளமுள்ள மிதப்பிகள் நீர் மட்டத்துக்கு மேல் 80 அடி உயரத்தில் காணப்படும் கடல் அலை இழுத்துச் செல்லாதபடி மிதப்பிகளை நாண் மூலம் கட்டிக் கடற்தளத்து மேல் ஆப்பிகளாய் வைக்கப்படும். கருவியின் சமிக்ஞைகள் ஒலி அலைகளாய் தாக்கப்பட்டு மிதப்பியில் பற்றிக்கொள்கிறது. அவை பிறகு மின்னலை சமிக்ஞையாக மாற்றமாகி துணைக்கோளுக்கு அனுப்பப் படுகின்றன. இத் தகவல்கள் ஹவாய், அலாஸ்ஹா சுனாமி எச்சரிக்கைத் தளங்களுக்கு துணைக்கோள் தொடர்ந்தும் தகவல் அனுப்பிவருகிறது. இத் தகவல்கள் 26 பசுபிக் கடற்தள நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது.

இந்த ஆழ்கடல் உளவிகளின் அழுத்த மானிகள் (Sea water pressure sensors) கடல் உயரத்தில் ஏற்படும் வேறுபாடுகளை துல்லியமாகக் கணிப்பதால் பொய் அறிவிப்பு ஏதும் நிகழ்வதில்லை.





இதுதான் சுனாமி எச்சரிக்கை நிலைய தொழிற்பாடுகள். இவ்வாறான ஒரு நிலையத்தைத்தான் இந்துமாகடலில் அமைப்பதற்கு ஏற்பாடாகியுள்ளது. எவ்வாறோ இயற்கையில் இருந்து மக்களை பாதுகாக்க அறிவியல் உதவினால் அதுவே நிம்மதியான விடயம்.




பற்களை சிறு வயதிலிருந்தே முறையாக பாதுகாக்க வேண்டும். ஒரு நாளைக்கு ஒரு தடவையில் தேய்த்தால் போதும் எமது கடமை முடிந்து விட்டது என நினைக்கிறார்கள். வார்த்தைகளை சரியாக உச்சரிப்பதில் தொடங்கி இதய வால்வு அடைப்பு வரைக்கும் பற்களும் ஒரு காரணமாக இருக்கின்றன. இவ்வளவு முக்கிய பணிகளைச் செய்யும் பல்லுக்கு ஒரு முறை மட்டும் சேவை செய்தால் மட்டும் போதுமா?

# பற்கள் பலவீனப்பட்டால்...

உணவு சமிபாட்டு வேலை முதலில் வாய்ப் பகுதியிலேயே ஆரம்பித்து விடுகின்றன. குறிப்பாக வெட்டும்பற்கள், கோரைப்பற்கள், அரைக்கும் பற்கள் எல்லாம் சேர்ந்து உணவை சிறு சிறு துண்டுகளாக அரைத்து உமிழ் நீருடன் சேர்த்து வயிற்றுக்கு அனுப்புகின்றன. பற்கள் இல்லாவிட்டால் உணவுகள் முழுமையாக உள்ளே செல்கின்றன. இதனால் இரைப்பைக்கு வேலை அதிகமாகிறது. இதன் காரணமாக வயிற்று எரிச்சல், வயிறு



பருமன், நெஞ்சு எரிச்சல், அஜீரணக் கோளாறுகள் போன்றன ஏற்படுகின்றன.

இதைவிட பற்களில் ஏற்படும் ஈறு நோய்கள், முடக்குவாதம், இதயவால்வு அடைப்பு, சிறுநீரக ஒவ்வாமை, தோல் ஒவ்வாமை, சமிபாட்டு உறுப்புக்களில் கோளாறு என பல்வேறு நோய்கள் ஏற்பட காரணமாகின்றன. எனவே பற்கள் தொடர்பாக அலட்சியம் செய்து விடாமல் மிகுந்த கவனம் எடுப்பது நன்மையே.

மனித உடல்களில் கடினமான பகுதி பற்களில் மேற்புறமாக உள்ள "எனாமல்" என்ற மேற்பூச்சுத்தான். இது தேய்ந்து போனால் மீண்டும் வளர்வதில்லை. சாப்பிட்டு முடிந்த பின் நன்றாக வாய் கொப்பளிக்காமல் விட்டால் பற்களின் மேல் ஒட்டிக்கொள்ளும் உணவுகள் நாட்கள் செல்ல அழுகி கிருமிகளின் உதவியால் அமிலமாகி பின்பு பற்சிதைவுகள் ஏற்படக்காரணமாகின்றன. சரியான முறையில் பல் துலக்காவிட்டாலும் எனாமல் பகுதியில் தேய்வு ஏற்படும். இரவில் பல் கடிப்பது, பற்களை பயன்படுத்தி போத்தல்களின் மூடிகளை திறப்பது, நகம் கடிப்பது போன்ற பழக்கங்கள் உள்ளவர்களுக்கும் எனாமல் தேய்வு ஏற்படுகிறது.

பற்களின் மேல் பகுதியில் உள்ள உணவுகளால் எனாமல் பாதிக்கப்படுவது போன்று பற்களின் ஈறுப்பகுதியில் தங்கும் உணவுகள் அழுகி பற்களின் வேர்ப்பகுதிக்கும் ஈறுப்பகுதிக்கும் இடையில் மஞ்சள் நிறப் படிவமாக படர்ந்து ஈறுகள் வீக்கமடைந்து பற்களை சுற்றியுள்ள எலும்புப் பகுதி சரிந்து பற்களை செயல் இழக்கச் செய்கின்றன. சொக்லேட், சீனி, அரிசி போன்ற பிசுபிசுப்புள்ள உணவுப் பொருட்கள் பல்லில் தங்கும்போது நாளடைவில் அது பல் சொத்தை ஏற்படக் காரணமாகிறது.

பல் ஈறுகளில் இரத்தம் வடிவது பல ஈறு நோய்க்கு அறிகுறி. ஆனால் இதுவே நோய் ஆகாது. புதிய பிரஷ்ஷினால் பல் துலக்குவது, மீன்முள் குத்துவது, குண்டூசி கொண்டு பல் குத்துவது போன்றவற்றாலும் கூட இரத்தம் வடியலாம். உணவுக் குறைபாடு விட்டமின் சி, மற்றும் டீ சத்து குறைபாடு போன்றவற்றாலும் ஈறுகளிலிருந்து இரத்தம் வடியும். பெண்களுக்கு கர்ப்பகாலங்களிலும், மாதவிடாய்க் காலங்களிலும், பருவம் அடையும் போதும், நீரிழிவு நோய் இருந்தாலும் இரத்தம் வடியலாம். மற்றும் முற்றிய வாய்ப் புற்றுநோய்கள் போன்றவற்றாலும் இரத்தச்சோகை காரணமாகவும் ஈறுகளிலிருந்து இரத்தம் வரலாம். எனவே ஈறுகளிலிருந்து இரத்தம் வடிவதை அலட்சியம் செய்யாமல் இருப்பதுநன்று.

புரதம், மாச்சத்து, கொழுப்புச்சத்து, விட்டமின் சத்துக்கள் சார்ந்த உணவுவகைகளை எடுத்துக்கொள்வது அவசியமாகும். ஆறு மாதத்திற்கு ஒரு தடவையாவது பல் வைத்தியரை அணுகி பரிசோதனை செய்து கொள்ளவேண்டும். காலையிலும் இரவிலும் படுக்கைக்குச் செல்லமுன்பு பல் துலக்க வேண்டும். சாப்பிட்ட பின்பு நன்றாக வாய் கொப்பளிக்கவேண்டும். பிசுபிசுப்பான உணவு வகைகளை உண்டால் உடனடியாகச் சுத்தம் செய்யவேண்டும். குண்டுசி, குச்சு போன்றவற்றை பயன்படுத்தக்கூடாது. நகம் கடித்தல் விரல் சூப்புதல், வாயைத் திறந்தவாறு நித்திரை செய்தல், நாக்கை வைத்து பற்களை அழுத்துதல், புகைப்பிடித்தல், வெற்றிலை அல்லது புகையிலை போடுவதும் நல்லதல்ல. இவை புற்றுநோய்க்கு காரணமாகலாம்.

இவற்றையெல்லாம் செய்யவில்லை எனில் பல்நோய் காரணமாக பல்லை எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை. பல்லுப்போனால் சொல்லு மட்டும் போகாது சுகமான வாழ்வும் போய்விடும்.



# ஆஸ்துமாவை நிர்வகித்தல்

## தடுப்பான்கள்-Preventers

தொடர்ந்து உபயோகிக்கப்படும் போது, தடுப்பான்கள் காற்றுவழிகளின் அழற்சியைக் குறைக்கின்றன. ஆஸ்துமாவின் தொக்கி நிற்கும் காரணியாக அழற்சி விளங்குவதனால் இது ஒரு தத்துவவியல் சார்ந்த நோக்கு ஆகும். காற்றுவழிகளின் அழற்சியைக் கட்டுப் படுத்துவதன் மூலம் ஆஸ்துமா நோய்க் குறி அடிக்கடி நிகழாமல் அல்லது முழுமையாக மறைந்து போகலாம்.

தடுப்பான்கள் வீக்கத்தையும், ஆஸ்துமாவின் அழற்சியையும் குறைக்கும் வகையில் தொழிற்படுகின்றது.

தடுப்பான்களில் இரு பிரதான மருந்துகள் உள்ளன.

அவை,

1.கோட்டிசோன் (Cortisone Type) வகையான சிகிச்சை(தெரொயிட்டுக்கள்-**Steroids** எனவும் அறியப்படுகின்றது)

2.சோடியம் குரோமோ கிளைகேட் **(Sodium Cromoglycate)** (இன்டால்-**Intal**) ஆஸ்துமாவின் சிகிச்சைக்கு மிகவும் செயற்றிறனானதாக தெரோயிட்டுக்கள் வளங்குகின்றன. இவை மூச்சு வாங்கிகளாக **(Inhalars)** கிடைக்கின்றன. மருந்து தேவைப்படும் காற்று வழிகளினுள் நேரடியாக சுவாசிப்பதற்கு சிறு அளவிலான மருந்தை மூச்சுவாங்கிகள் அனுமதிப்பதுடன் சிறிதளவே குருதியோட்டத்திற்குள் கலக்கின்றது. இதன் கருத்து என்னவெனில் பக்கவிளைவுகள் மிகவும் குறைவாகவே விளங்கும். தடுப்பான்கள் தமது தாக்கத்தை நிலைநிறுத்த சிறிது நேரத்தை எடுக்கும். அத்துடன் நாளொன்றுக்கு ஆகக்குறைந்தது ஒன்று அல்லது இரண்டு தடவைகள் எடுக்கப்பட வேண்டும். சில வேளைகளில் வாய் மூலமான தெரோயிட்டுக்களும் (பிரெட்னிஸோன்-**Prebnislone** போன்ற மாத்திரைகளும்) அவசியப்படும்.

ஆஸ்துமா தாக்கம் வரும் வரை தடுப்பான்களை உபயோகிப்பதற்கு காத்திருப்பதென்றால் தடுப்பான்களால் ஆஸ்துமாத் தாக்கத்தை தடுக்க முடியாது. எனவே ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் உங்கள் தடுப்பானை கிரமமாக உபயோகிப்பதே சிறந்ததாகும்.

இங்கு சில உபயோகத்திலுள்ள தடுப்பான்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவையாவன:-

1. சைகுளோசோன் **(Cyclozone)**

2. பெக்கோடைட்-பெக்லோமெதசோன் டைபுரோப்பியோனேட் **(Becotide) (Beclomethasone Dipropionate)**


3. **'Becloforte)** பெக்லோபோர்ட் (பெக்லோமெதஸோன்) (டைபுரோப்பியோனேட்) **'Flixotide''** (பிலிக்ஸோடைட்) **Fluticasone propionate** (புளுக்காஸான் புரொப்பியோனேட்)

இந்த மூச்சுவாங்கி தெரோயிட்டுக்கள் சிறுவர்களிலும் வயது வந்தவர்களிலும் உபயோகிக்கப்படுகின்றன. (இன்டால் சோடியம் குரோமோகிளைகேட்) **(Intal Sodiam Cromoglycate)** இன்னொரு தடுப்பானாகும். இது குறைவான தன்மையிலான ஆஸ்துமாவைக் கொண்டுள்ள சிறுவர்களுக்காகப் பெரும்பாலும் உபயோகிக்கப்படுகின்றது.

(தொடரும்)

# விடுதலை அமைப்புக்களிடம் விமானங்கள்?

**சென்றவாரத் தொடர்ச்சி.**



கடந்த பாகத்தில் விடுதலை அமைப்புக்களிடம் இருக்க வேண்டிய அல்லது இருக்கக்கூடிய விமான வகைகள் என்று மூன்று விமான வகைகளைக் குறிப்பிட்டிருந்தோம்.

இவை போல கிட்டத்தட்ட 40 வேறு வேறு விமான ரகங்கள் இன்று உலகெங்கிலும் தயாரிப்பில் இருக்கின்றன அல்லது உபயோகத்தில் இருக்கின்றன. ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதமான உபயோகம் அல்லது தொழில் நுட்பம் இருக்கின்றது. ஒவ்வொரு ரகமும் ஒவ்வொரு விதமான விலை.

இதில் நாங்கள் ஒவ்வொன்றாகத் தட்டித் தட்டி மூன்று ரக விமானங்களைத் தேர்ந்தெடுத்திருந்தோம். (அதில் இரண்டு அமெரிக்கத் தயாரிப்பு. ஒன்று சுவிஸ் தயாரிப்பு.)

எப்படி இந்த மூன்று ரகங்களுக்கு வந்து சேர்ந்தோம் என்றால், விடுதலை அமைப்புக்களுக்கு இருக்கக்கூடிய தேவைகளை 80 சதவீதமும், விமானத்தின் விலையை 20 சதவீதமும் மனதில் வைத்துத்தான்.

ஒரு நாடு தனது விமானப்படைக்காக விமானங்கள் வாங்கும்போது கருத்தில் எடுக்கப்பட வேண்டிய விஷயங்கள் வேறு. ஒரு விடுதலை அமைப்பு விமானம் வாங்கும்போது கருத்திலெடுக்கும் விஷயங்கள் வேறு. அதை வைத்துத்தான் எந்த ரக விமானங்கள் வாங்கப்பட வேண்டும் என்ற முடிவு எடுக்கப்படுகின்றது.

உதாரணமாக ஒரு நாட்டின் விமானப்படைக்கான விமானத் தேவைகளின் போது, பயிற்சி விமானங்கள் வேறாக இருக்கும். நிஜமான யுத்தத்தில் உபயோகிக்கப்படும் விமானங்கள் வேறாக இருக்கும். அவற்றின் flight operating pattern கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக இருக்கும்.

இதுதான் நடைமுறையில் அருமையான செட்டப்.

ஆனால் விடுதலை அமைப்புக்கள் அப்படியான செட்டப்பில் விமானங்களை வைத்திருப்பதில் இரண்டு சிக்கல்கள் இருக்கின்றன.

ஒன்று விலைபற்றிய concernம் விமானங்களை மறைத்து வைக்க வேண்டிய அவசியமும். இந்தக் காரணத்தால் பயிற்சிக்கு ஒன்று, பயன்பாட்டுக்கு ஒன்று என்ற ரீதியில் வேறு வேறு விமானங்களை வாங்கினால் தேவைக்கு அதிகமான பணத்தை அதில் கொண்டு போய் முடக்க வேண்டியிருக்கும். அத்துடன் மறைத்து வைக்கப்பட வேண்டிய விமானங்களின் எண்ணிக்கை double ஆகிவிடும்.

அது சிக்கல்!

இரண்டாவது காரணம், விடுதலை அமைப்புகளுக்கு முற்று முழுதான விமானப் பயிற்சிக்கு அவர்களது இயங்கு தளத்தில் பெரிதாக சந்தர்ப்பம் கிடைக்காது.

விமானப்படை பயிற்சி விமானங்களின் பயிற்சிகளின் போது ஒரு குறிப்பிட்ட வான்பகுதி (Air space) முழுவதையும் சீல் பண்ணிவிடுகிறார்கள். இவர்கள் நிர்ணயிக்கும் வான் எல்லைக்குள் குறிப்பிட்ட நேரத்தில் எந்த வகை விமானப் போக்குவரத்தும் நடைபெறாதபடி பார்த்துக் கொள்கிறார்கள். அதன் பின்னர் பயிற்சி விமானங்கள் பறக்கத் தொடங்குகின்றன.

விடுதலை அமைப்புக்களால் இதைச் செய்ய முடியாது.

அவர்கள் பயன்படுத்தும் வான்பரப்புக்குக் கீழேயுள்ள நிலம் அவர்களது கட்டுப்பாட்டில் இருந்தாலும், வானில் நடைபெறும் விமான நகர்வுகளை அவர்களது கட்டுப்பாட்டில் இல்லாத நிலப்பகுதிகளில் இருந்து கண்காணிக்கும்படியான கருவிகள் இருக்கின்றன. அவை விடுதலை அமைப்புகளுக்கு எதிராக இருக்கும் ராணுவத்தினரின் கைகளில் அநேகமாக இருக்கும்!

இதிலிருந்து தப்பிப்பதற்கு சில உத்திகளைத்தான் கையாள வேண்டும். அதாவது எதிரி ராடர்களின் திரையில் அகப்படாமல் பறக்கும் உத்திகள்.

அதைப் பற்றி இங்கே எழுதப் போய் நாங்கள் வில்லங்கத்தை விலைக்கு வாங்கக்க கூடாது என்பதால் ஒரேயொரு விஷயத்தை மாத்திரம் சொல்கிறோம். விடுதலை அமைப்புக்களிடம் இருக்கும் விமானங்கள் பயிற்சிக்காக மாத்திரம் என்று வடிவமைக்கப்பட்ட விமானங்களாக இல்லாமல், பயிற்சிக்கும் இலக்கத்திற்கும் என்ற கூட்டு இயங்குதிறன் உடைய விமானங்களாக இருக்க வேண்டும். இருக்கும்!

இந்த இரண்டு அளவு கோல்களையும் மனதில் வைத்துத்தான் சுமார் 40 விமான வகைளில் மூன்றே மூன்று விமான வகைகளைக் கொண்டே விமான வகைகளைத் தேர்ந்தெடுத்து குறிப்பிட்டிருந்தோம்.

அவற்றின் விபரங்களை கடந்த வார இதழில் மீண்டுமொருமுறை பார்த்துக் கொள்ளங்கள். நாங்கள் எங்கே வருகிறோம் என்பது புரியும்.

இதுவரை நாங்கள் குறிப்பிட்ட ரகங்கள் எல்லாமே MAV எனப்படும் Manned Aerial Vehicles, அதாவது இவற்றைச் செலுத்தவும், தாக்குதல் நடத்தவும் குறைந்த பட்சம் ஒரு விமானியாவது தேவை.

இதில் என்ன minus point என்றால் அந்த விமானம் எதிரியின் firing rangeக்குள் வந்துவிடும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் விமானம் அழிக்கப்படுவது மாத்திரமல்ல, கூடவே விமானியும் அழிக்கப்பட்டு விடுவார்.

அந்த விமானியின் திறமை, அவருக்குக் கொடுக்கப்பட்ட பயிற்சிகள் எல்லாமே வீணாகப் போய்விடும். அழிந்த விமானத்தை வேண்டுமானால் மீண்டும் வாங்கலாம். ஆனால் விமானியை மீண்டும் கொண்டுவர முடியாது.

இதற்கு என்ன செய்யலாம்?

இந்த இடத்தில்தான் வருகின்றன UAVகள். அதாவது Unmanned Aerial Vehicles. விமானியில்லாமல் பறக்கும் விமானங்கள்.

இவைதான் விடுதலை அமைப்புக்களைப் பொறுத்த வரை #1 Priortyயில் இருக்கக்கூடியவை.

இதில் மற்றுமோர் விஷயத்தையும் சொல்ல வேண்டும். ஒரு விடுதலை அமைப்பால் விமானங்களை வாங்க முடியுமென்றால் அவர்கள் வாங்கும் முதலாவது விமானம் இந்த UAVயாக இருக்கக்கூடாது.

மற்றைய ரகமான, விமானிகளால் இயக்கப்படும் விமானத்தில் குறைந்தபட்சம் ஒன்றாவது வாங்கி அதன் பின்னர் தான் UAVகளை வாங்க வேண்டும்.

இதற்கு ஒரு காரணமும் இருக்கிறது!

விடுதலை அமைப்புக்களின் தாக்குதல்களில் விமானங்கள் பய்னபடுத்தப்படுவதென்பது கொஞ்சம் trickyயான விஷயம். ஒவ்வொரு நாட்டுக்கும், ஒவ்வொரு பிரதேச அமைப்புக்கும், ஒவ்வொரு விதமான எதிரியை எதிர்க்கவும், விமானங்களை ஒவ்வொரு விதமாக பயன்படுத்த வேண்டியிருக்கும்.

எல்லா விமானங்களும் எல்லாப் போர்முனைகளிலும் ஒரேமாதிரியான பலத்தையும் கொடுக்காது-எப்போதும் பலனையும் தராது. சில சந்தர்ப்பங்களில் ஒரு குறிப்பிட்ட வகை விமானங்களை உபயோகிப்பது அதை உபயோகிப்பவர்களுக்கே பாதகத்தைக் கொடுத்துவிடும்.

இதனால், விடுதலையமைப்புக்கள் தங்களது பிரதேச அமைப்புக்கும், போர்முறைக்கும் ஏற்ப விமான ரகங்களை தேர்ந்தெடுத்து, ஒரு operation patternஐ முதலில்



நிர்ணயிக்க வேண்டியிருக்கும். அதற்கு UAVக்கள் சரியான choice அல்ல. விமானிகளால் இயக்கப்படும் விமானங்கள்தான் தேவை.

இதை flight pattern trial run என்று சொல்வார்கள்.

அதாவது முதலில் விமான ரீதியிலான ஒரு வரைமுறையைத் திட்டமிடுதல். அந்த வரைமுறையை நிர்ணயிப்பதற்கும் உறுதிப்படுத்துவதற்கும் விமானம் வானில் பறக்கவும் வேண்டும்- அதற்குள் ஒரு விமானி இருக்கவும் வேண்டும்.

அப்போதுதான் வேறு வேறு நடைமுறைகளை try பண்ணிப் பண்ணி, ஒரு குறிப்பிட்ட நடைமுறையை fix பண்ண முடியும்.

அந்த initial aerial procedure முடிவாகி விட்டதால், அதன்பின்னர் UAV உதவுவது போல அண்ணன் தம்பி கூட உதவமாட்டார்கள்!

MAV விமானத்தையும் விமானியையும், பிற்கால உபயோகத்திற்காக stand byயாக வைத்துக் கொண்டு UAV விமானங்களை உபயோகிக்கத் தொடங்கலாம். அதற்கான வேளை வரும்போது.

சரி இந்த UAVக்கள் என்றால் என்ன?

அவை எப்படி, எதற்காக, எப்போது உபயோகிக்கப்படுகின்றன. அவற்றையும் தெரிந்து கொள்ளுங்கள்.

இன்றைய திகதியில் உலகிலுள்ள அநேக நாட்டு ராணுவங்கள் அதி முக்கியத்துவம் கொடுத்து உபயோகிப்பது இவற்றைத்தான். சாதாரண போர் விமானங்களால் இலேசில் செய்யமுடியாத பல காரியங்களை இவை simpleஆக முடித்துக் கொடுத்துவிடும்.

ஒரு சம்பிரதாயமான யுத்தமென்று வரும்போது ராணுவத் தலைமை போடும் போர்த்திட்டத்தை நீங்கள் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தால், அதில் RIST என்ற ஒரு சொல்லுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுவதைப் பார்க்க முடியும்.

RIST என்றால் என்ன?

Reconnaissance, Intelligence, Surveillance and Target Acquisition.


தாக்குதலுக்கு முன்னர் போடப்படும் போர்த்திட்டத்திற்குத் தேவையான உளவு திரட்டல், இலக்கு வைத்தல், இலக்குத் திட்டமிடல், இரண்டாம் நிலைத் தாக்குதல் வடிவமைப்பு, வியூகம் என்ற எல்லாவற்றின் ஆரம்ப வடிவம் ஓரளவுக்கு இந்த RISTAவுக்குள் அடங்கிவிடும்.


இது மாத்திரம் சரியாக இருந்தால் மிகுதித் தாக்குதல் piece of cake!

ஆனால் இது ஒரு ஆரம்ப நிலைதான்.

RISTAவுக்கு அமெரிக்க ராணுவம் பயன்படுத்துவது முக்கியமாக UAVக்களைத்தான்.






அமெரிக்கர்கள் மாத்திரமல்ல, இப்போது மற்றய நாட்டு ராணுவங்களும் கொஞ்சம் கொஞ்சமாக இந்தத் திசையை நோக்கியே நகர்கின்றன-பல ஆசிய நாடுகள் உட்பட.(நீங்கள் நினைக்கும் நாடும் இதை இப்போது உபயோகிக்கிறார்கள்)

போர்த் திட்டத்தில் RISTA தயாராகிவிட்டால், அடுத்த இடத்தில் வருபவை 5 விஷயங்கள்.

1. IPB (Intelligence Preparation of the Battle field)
போர்க்களத்தின் விபரங்கள் பற்றிய உளவுத் தயாரிப்பு.

2. SDP (Situation Development Plan)
போர்க்கள நிலைமை முன்னேற்றத் திட்டமிடல்.

3. BM (Battle Management)
போர்க்கள முகாமைத்துவம்.

4. BDA- Battle Damage Assesment
யுத்தகள சேதவிபரச் சேகரிப்பு.

5. RAS- Rear Area Security
தாக்குதல் படைப்பின்னிலைப் பாதுகாப்பு.

## கனடாவில் இருந்து ரிஷி

இந்த 5 முக்கிய கட்டங்களிலும் கை கொடுக்கக்கூடிய ஒரேயொரு அட்டகாசமான உபகரணம் இந்த UAVக்கள் தான்.

அதுதான் இவற்றிற்கு இவ்வளவு முக்கியத்துவம்!

UAVயின் தொழில்நுட்பமும், உபகரணங்களும் புதியவை. ஆனால் இதன் அடிப்படைச் சித்தாந்தம் மிகப் பழையது.

முதலாம் உலகமகா யுத்தத்தில் அமெரிக்கா நுழையு முன்னரே அமெரிக்கக் கடற்படை ஒரு Seaplane ஐ வடிவமைப்பதில் வெற்றிபெற்றிருந்தது. அந்த Seaplane இல் என்ன விஷேசமென்றால் அது விமானி இல்லாமல் இயங்கக் கூடிய விமானம்.

1920 களிலும் 1930 களிலும் இந்த அடிப்படைச் சித்தாந்தத்தை [illegible] ஏராளமான பரிசோதனைகளை அமெரிக்கா செய்தது. எக்கச்சக்கமான பணத்தை இந்தப் பரிசோதனைகளில் கொண்டுபோய் முடக்கியது.

அமெரிக்க்க கடற்படை ஆரம்பத்தில் இதில் வெற்றிபெற்றாலும் இதை முறையாக உபயோகித்தது அமெரிக்க விமானப்படைதான்.

இவர்கள் ஆரம்பத்தில் செய்தது எப்படியென்றால் அமெரிக்க விமானப்படையின் பழைய (ஆனால் பறக்கக்கூடிய) B-17 விமானங்களுக்குள் எக்கச்சக்கமாக வெடிமருந்துகளை ஏற்றினார்கள். அதை ஒரு விமானி இயக்க அத்துடன் வேறு ஒரு B-17 விமானத்தையும் பறக்க விட்டார்கள். முதலாவது விமானம் உயரக்கிளம்பி போதுமான உயரத்தையும் திசையையும் அடைந்தவுடன் அதைச் செலுத்திய விமானி விமானத்தை விட்டு கீழே பரசூட் மூலமாகக் குதித்துவிடுவார்.

இரண்டாவது விமானத்திலுள்ளவர்கள் மூலம் முதல் விமானத்தை இலக்கை நோக்கிச் செலுத்தி இலக்கின் மீது போய் மோதி வெடிக்கச் செய்வார்கள்.

இதுதான் ஆரம்பம்.

இரண்டாம் உலகமகா யுத்தத்தின் பின்னர் இந்த உத்தி அமெரிக்கர்களால் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது.

அமெரிக்கர்களின் அணுகுண்டு வெடிப்புப் பரிசோதனைகளின் போது South Pacificல் இப்படி விமானியில்லாத B-17 விமானங்களே உபயோகிக்கப்பட்டன.

1950களின் இறுதியில் Fort Huachucaவில் இந்த விமானங்களில் கமெராக்களைப் பொருத்தி, பறக்கும் போது புகைப்படங்களை எடுத்துப் பார்த்தார்கள். அவை கீழேயுள்ள இலக்குகளைப் புகைப்படங்கள் எடுத்து வந்து கொடுத்தன. அதன் பின்னர் சில வருடங்களில் அந்த கமெராக்களை அகற்றிவிட்டு television system ஒன்றைப் பொருத்தி இலக்குகளின் அசையும் தன்மைகளைப் படம் பிடித்தார்கள்.


1960களின் நடுவிலிருந்து வியட்னாம் யுத்தம் முடிவுக்கு வரும்வரை அமெரிக்க ராணுவம் சுமார் 3000 தடவைகள் விமானியில்லாமல் விமானங்களை வியட்னாமுக்கும் சீனாவுக்கும் மேலாக பறக்க விட்டிருக்கிறது.

1980களின் நடுப்பகுதியில்தான் இப்போது நடைமுறையிலிருக்கும் UAVக்களின் தொழில் நுட்பத்தின் ஆரம்பகால Developments ஆரம்பமாகின. இன்றயை UAVக்களின் பயன்பாடு மிக அற்புதமாக உபயோகிக்கப்பட்ட முதலாவது யுத்தமுனை Operation desert storm. இன்று அமெரிக்காவைப் பின்பற்றி உலகிலுள்ள அநேக ராணுவ நடவடிக்கை நாடுகள் UAVகளை உபயோகிக்கத் தொடங்கி விட்டன.

UAVக்களை அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சு அவர்களது UAV master planல் 3 classகளாகப் பிரித்து வைத்திருக்கிறார்கள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான உபயோகத்திற்கு.




UAVஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இவை. இடம்-ஆப்கானிஸ்தான். அமெரிக்கப் படைகள் நாட்டுக்குள் நுளையுமுன்னர் ஆப்கான் வான்பரப்புக்குள் அமெரிக்க விமானப்படை தனது விமானியற்ற UAV ஒன்றை அனுப்பி புகைப்படங்களை எடுத்தது. அவற்றில் இரு புகைப்படங்கள்தான் இவை. படத்தில் ஒரு வர்த்தக விமானம் இறங்குவதும் தெரிகிறது பாருங்கள்.



1. UAV- CR (Close Range)
இதன் இயங்கு தூரம் கிட்டத்தட்ட 50km.

2. UAV- ST ( Short Range)
இவை எதிரியின் வான்பரப்பில் 8 இலிருந்து 10 மணிநேரம் வரை பறக்கக் கூடியவை. சுமார் 200 கி.மீ. தூரம் வரை Data Linkமூலம் இயக்கப்படக் கூடியவை.

3. UAV- E (Endurance)
குறைந்த பட்சம் 24 மணிநேரம் வரை இயக்கப்படக் கூடியவை. பலவிதமான multiple missionகளை remort control மூலம் செய்யப்படக் கூடியவை.

இவை விமானியில்லாமல் பறக்கும்போது எடுத்துச் செல்லும் பொருட்களையும், பறப்பதற்கு தேவையான எரிபொருளின் நிறையையம் சேர்த்து payload என்று சொல்லுவார்கள். ஒவ்வொரு வகை UAVயின் payloadம் modelக்கு model வேறுபடும். Payload கூடக் கூட விசேஷம். அதி விஷேசம்.

UAV Payload Requirements விடுதலை அமைப்புக்களைப் பொறுத்தவரை எப்படியிருக்க வேண்டும்-எப்படியிருந்தால் பயனுண்டு?

எந்தவகை UAVக்கள் விடுதலை அமைப்புக்களுக்கு பயனுடையவை அல்லது எந்தவகை UAVக்களை விடுதலை அமைப்புக்கள் ஏற்கனவே கையில் வைத்திருக்க சந்தர்ப்பமுண்டு?

அது அடுத்த வாரத்தில்- அடுத்த பாகத்தில்




# வாழாத வாழ்க்கை

**நெடுந்தீவு மகேஷ்**

என் நிழலே என்னைத் துரத்தி வந்தது. நான் ஓடினேன். ஓய்ந்திருக்க வகையறியாது, ஓடினேன். என் எண்ணம் என்னைக் கலைத்தது.

உள்ளம் சோர்ந்தது. கண்கள் இருண்டன.

உச்சிமுதல் உள்ளங்கால் வரை தீமூட்டினாற்போல் எரிந்தது.

வாழ்வா? சாவா? இதில் என்னோடு இன்று உறவாடி நிற்பது எது? மயங்கிய எண்ணங்களோடு துவண்ட இதயத்தோடு படுக்கையிற் சாய்ந்து கிடக்கிறேன்.

பயம் இன்னமும் என்னை விட்டு அகலவில்லை. எனது வாழ்வும் பயணத்தின் எல்லையில், என் உயிரை இழக்கத் தயங்கியபடி நான்.

இதயம் பலமாகத் துடித்துக் கொள்ளுகிறது. கண்களை இறுக மூடிக் கொள்ளுகிறேன்.

இந்த எழிலான பூமியில் வாழ்வதற்காக எனது வாழ்வின் வசந்தங்களுக்காக நான் செய்தவைகள் எல்லாமே திரைப்படமாக மனக்கண் முன்னே நீண்டு நகர்கிறது.

பொருளுக்காக, புகழுக்காக நான் நடத்திய வாழ்க்கை நாடகங்கள் என் விரிந்த மனமேடையில் அரங்கேறின.

நாடகங்களின் காட்சிகள் எத்தனை என்று கணக்கிட்டுப் பார்க்கும் எண்ணம் எனக்கு இப்பொழுது இல்லவே இல்லை. என்னையும், என் பொருள் புகழையும் காத்துக்கொள்ள அடுத்தவன், அயலவன் துன்பத்தை அலட்சியம் செய்த நாட்கள் மகர தோரணங்களாய் நீண்டு தொங்கின.

நான், நான் நானென்றே நிமிர்ந்து எழுந்து உலவித் திரிந்த சுயநலப் போக்கின் சோடனைகள் எல்லாமே உருமயங்கிக் கலைந்து கொண்டிருந்தன.

சிந்தனைக்குதிரை நொண்டி நொண்டி நடந்தது. அதனை விரைவுபடுத்தும் ஆற்றல் இப்பொழுது என்னிடம் இல்லை.

என் அங்கங்களின் அசைவுகளில் ஒருவகைச் சோர்வை உணருகிறேன்.

நான் வாழவேண்டும் என்ற ஆசையின் வேகம் இன்னமும் தணியவில்லை.

என் கடந்தகால உறவுகளின் தோற்றங்கள் யாவுமே கலைந்தழியும் முகிற் கூட்டங்களாய் உதிர்ந்து செல்லும் காட்சிகளாயின.

ஆனால், ராகவனின் முகம் அவனது தோற்றம் எனது நினைவில் மீண்டும் பளிச்சிட்டது.

நான் அவனைக் கடைசியாகப் பார்த்தபோது அவனது முகத்தில் ஜொலித்த உறுதியின் முத்திரை அப்படியே இப்பொழுதும் என் மனக்காட்சியில் தெரிகிறது.

அச்சம் கொண்டு அடங்கிப் போகாத அவனது துணிவின் தோற்றம் என்னை ஏளனம் செய்கிறது. அவனை என்னால் மறக்கவே முடியவில்லை.

நான் வாழ்ந்தேன்!

ஆனால் ஏன் வாழ்ந்தேன் என்பதை இன்னமும் புரிந்துகொள்ளமுடியவில்லை.

இலட்சியமற்ற வாழ்க்கை வாழ்வின் அர்த்தம் புரியாத வாழ்க்கை.

என்னால் ஜீரணிக்க முடியவில்லை.

எத்தனை ஆயிரம் மாவீரர்கள்! எம் இனத்தின் விடுதலைக்காக! எங்கள் வாழ்வின் சுதந்திரத் திற்காக!

என் னால் ஜீரணிக்க முடிய வில்லை.

என் உடல் கனத்தது. நினைவுக் குதிரை சோர்ந்து பயணம் செய்த பாதையை மெல்ல மெல்லத் திரும்பிப் பார்த்தது.

அந்த நாட்கள்.

மலையகத்தின் எழில் பூத் துச் சிரிக்கும் தெரணியகலை நகரம் றப்பர் மரங்களின் அணி வகுப்பும் தேயிலைச் செடிக ளின் நிரைகோர்த்த தலைய லங்காரமும் அந்த மண்வளம் முழுவதும் பச்சை விரித் தாற் போல் பரவிக்கிடந்தன.

நிர்மலமான நினைவுகளுக் குள் கலா வடிவங்கள் கோலமிட்ட காலம்.

இளைஞனாய் வேலையற்றலைந்த எனக்கு அந்தத் தேயிலைத் தோட்டத்திலே வேலை கிடைத்தது.

ஓய்வின்றி உழைக்கும் தோட்டத் தொழிலாளரின் நாட்கூலியைக் கணக்கிடும் "செக்றோல்" கிளாக்கர் என்ற பெயரோடு நான் சிறந்திருந்தேன்.

விடியுமுன் எழுந்து மலையகம் விளங்க உழைக்கும் பாட்டாளிகளின் வியர்வையால் பசுமையானவை அந்தத் தோட்டங்கள் மாத்திர மல்ல. தோட்ட முதலாளிகளின் சுக வாழ்வுந்தான்.

நாட் கூலிக்காய் பாடுபடும் ஏழைகளின் சம்பளத்தைக் கணக்கிடும் ஒவ்வொரு மாதமும் அதற்குள் ஒளிந்து கிடக்கும் சுரண்டற் கணக்குகளின் வண்ணங்களோ ஏராளம்.

கங்காணி, கணக்குப் பிள்ளை இவர்களோடு பெரிய துரை சின்னத் துரை, கண்டாக்கையா என்று பதவி பெற்ற அத்தனை பேருமே, ஏன் இந்த ஏழைகளைச் சுரண்டி வாழ்கிறார்கள்.

ஒரு வருடம் எப்படியோ ஓடிக் கழிந்தது.

ஓய்வு நாட்களில் தெரணிய கலை நகரத்தில் எனது பொழுதுகள் கடந்தன. கனகம் முதலாளி கடையின் முன்னால் கால்களைப் பதித்தால், அவர் எம்மை வர வேற்று உபசரிக்கும் வண்ணம். என் எண்ணத்தில் இனிமை படர்ந்தது.

புஞ்சி சிங்கோ புடவைக் கடையில் முதலாளியின் தீஞ்சுவை மழ லைத் தமிழுக்காய் பல மணிநேரம் பக்கத்திலிருந்து கதை பேசிக் களித்த நாள்கள் இன்றுவரை என் நினைவுகளில் நிழற்படங்களாய் நிலைத்தன.

பாலரத்தினம் ஐயா, பண்டா மாத்தையா, சித்தீக் நானா எல்லோருமே என் மனத்திரையில் ஒருவர்பின் ஒருவராய் உலா வந்தனர்.

மலையகத்தோடு மகிழ்ந் திருந்தேன்.

பிறப்பு, இறப்பு அனைத் தையும் மறந்து உலக வாழ்வின் சௌந்தரி யத்திற் குள் ஒன்றிக் கிடந்த காலங்கள்.

கலாநயம் விரிக்கும் காட்சிகள் கவிவளம் பெருகும் சிந்தனைகளாகச் சிலிர்த்திருந் தேன்.

திடீரென எங்கிருந்து? எது தோன்றியது?

எவருக்குமே புரிய வில்லை.

அரசியல், ஆட்சி, நாடு, மொழி, நான், நீ என்று பேதங் கள் விரிய விடிந்த அந்த நாட்கள்.

எங்கும் கொலைகளும், கொள்ளைகளும், புயலென எழுந்து பயங்கரத்தாண்டவமாடித் தெரணியகலை நகரத்தையே சிதறடித்தது. இனக்கலவரம். தமிழினம் படுகொலை செய் யப்பட்டது.

எனது நண்பர்கள் உறவி னர் என்று எவருமே நகருக் குள் இல்லையென்றான போது உள்ளம் துணுக் குற்றது.

தனியாளான நான், ராகவனின் குடும்பத்துடன் அந்தச் சிறிய வீட்டில் தங்கி இருந்தேன்.

ராகவன், அவன் மனைவி சந்திரா, மகள் கார்த்திகா, அவர்களின் வாடகை வீட்டில் நானும் ஒருவனாய் உறைந்து கிடந்தேன்.

வெளியே செல்லும் மார்க் கம் தெரியவில்லை.

இதயம் பலமாக அடித்துக் கொண்டது.

ஆங்காங்கே நிகழும் பயங்கரங்கள் செய்திகளாகி என் காதுகளுக்குள் தீ மூட் டின. என்ன செய்யலாம்?

எப்படியாவது அங்கிருந்து தப்பிச் சென்றுவிடவேண்டும் என்ற வேகம் என்னுள் வளர்ந் தது.

திடீரென அமைதியைக் குலைத்துக்கொண்டு அங்கு சூழ்ந்த பயங்கரத்தை மீட்டுப்பார்க்கும் போதெல்லாம் என் உடலம் நடுங்குகிறது.

கத்திகள், பொல்லுகளோடு இரண்டு காடையர்கள் எமது வீட்டைச் சூழ்ந்தனர். கதவை உடைத்துத் திறந்துகொண்டு எமது வீட்டுக்குள் நுழைய எடுக்கும் முயற்சிகளைத் தடுத்துவிட ராகவன் செயற்பட்ட வேகம் எனக்குள் தோன்றவே இல்லை.

அறையின் மூலையில் கிடந்த அந்தக் கருங்காலிப் பொல்லும் கோடரியும் ராகவனின் கவனத்தில் முன்னரே பதிந்துவிட்டன.

தம்மைக் காத்துக்கொள் ளும் முயற்சிக்கு அவை உத வும் என்ற நம்பிக்கை அவன் மனதில் உறுதியாயிற்று.

கோடரியைக் கையில் எடுத்துக்கொண்டான்.

அந்த உயிரற்ற கட்டைகள் மீது அவனுக்குப் பிறந்த நம்பிக்கையை அவன் என்மீது ஏற்படுத்திக்கொள்ளும் வகையில் நான் இல்லை. பயம், சுயநலம் என்னுள் பரவியது.

ராகவனின் மனைவியும் மகள் கார்த்திகாவும் அச்சமும் துயரமும் கனக்கச் செய்வதறியாது திகைத்து நின்றனர்.

ஓயாது தட்டப்படும் கதவு உடைக்கப்படும் ஓசை என் உயிரை உசுப்பியது. ராகவன், மனைவி பிள்ளையோடு இணைந்து கொலை காரரை எதிர்த்துப் போராட எனது சுயநலம் என்னை விடவில்லை.

என் உயிரின் மீதும் என் வாழ்வின் மீதும் எனக்கிருந்த ஆசையினால் அவர்களை ஆபத்தில் தவிக்கவிட்டு தனியாளாய்த் தப்பிவந்தேன்.

ஏன் வந்தேன்? ஏன் வாழ்ந்தேன்?

அன்று ராகவனோடு இணைந்து நின்று அந்தக் காடையரை எதிர்த்துப் போராடியிருந்தால் அவனது குடும்பத்தையும், காப்பாற்றி வாழ வைத்திருக்கலாம்.

நான் தனித்துவாழ ஏன் ஆசைப்பட்டேன்?

என் வாழ்வின் அர்த்தம் புரியவில்லை.

நான் ஓடி ஓடிக் காத்திருந்த உயிரின் இருப்பு. இன்று என்னையும் என் விருப்பையும் விலக்கித்தானே பிரிந்து செல்லும் இயற்கையின் நடப்புக்களாகி உலக வாழ்வின் உண்மையை விளக்கி நிற்கிறது.

ராகவனின் தாக்குதலால் ஒரு காடையன் வீழ்ந்து கிடப்பதைக் காணுகிறேன். தீமையை எதிர்த்து நிற்கும் துணிவு. எனக்கும் அது இருந்திருந் தால்.

ராகவனின் குடும்பம் காப்பாற்றப்பட்டிருக்கும்.

மரணம் நிச்சயம் என்றா கிப்போன வாழ்வில் மரணத் திற்குப் பயந்து ஓடி ஓடிக் கண்டடைந்த நன்மைகள் யாவை?

அயலவனை வாழவைக்கத் துணிவற்ற உறவுகளைக் காப்பாற்றத் திராணியற்ற வாழ்க்கையின் அர்த்தமென்ன?

ஏன் வாழ்ந்தேன்?

ஏன் வாழ்கின்றேன்?

எதனையும் என்னால் இன்ன மும் தீர்மானிக்க முடியவில்லை. இப்பொழுதும் சாவுக்குப் பயந்து சங்கடப்படும் மனித வாழ்வின் தேவைகளும் ஆசைகளும் அர்த்த மற்றுப் போய்விட்டதாக உணரு கிறேன்.


எனது அயலவனின் துயரை நீக்கத் துணியாத எனது வாழ்வின் வெறுமையோ என்னை ஏளனம் செய்கிறது.


நான் வாழ்ந்தேன் என்பதற்கு அடையாளமாக உறுதியின் உறைவிடமாக நான் விட்டுச்செல்லும் எதனையும் இன்று என்னால் நினைவுபடுத்த முடியவில்லை.

அயலவனுக்குப் பயனற்றுப் போன இந்த உடலும் உயிரும் எதற்காக வாழ்ந்தது.

வாழ்ந்தேன் என்பதற்கு எந்த அடையாளமும், தியாக மும் இல்லையென்றான போது "நான் சாகிறேன்" என்பது எவ்வளவு உண்மை யானது.

என் நினைவுகளில் கட்டெறும்புகள் மொய்த்தன. மௌனம் நிறைந்த ஒரு சூனியத்தை நோக்கி நகர்கி றேன். நான் வாழ்ந்தேனா?






# இளைய நாதம்

# ஆமைகள்

ஊர்வன உயிரினத்தில் மேலோடு உள்ள ஒரே உயிரினம் ஆமைகள் தான். இவற்றில் கடலில் வாழ்பவை, நன்னீர் நிலைகளில் வாழ்பவை, நிலத்தில் வாழ்பவை என்று பன்னிரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 200 இனங்களே இன்று உள்ளன. இவை உடல் முழுவதும் கடினமான ஓட்டினால் போத்தப் பட்டிருக்கும். தலை, கால், வால் மட்டுமே வெளியே தெரியும். ஆபத்தென்றால் அந்த உறுப்புக்களை உடலினுள் இழுத்துக்கொள்ளும். இவற்றிற்குப் பற்கள் கிடையாது. ஆமைகளில் மிகச் சிறியது மண்ஆமை, மிகப்பெரியது தோல்முதுகு பெரிய ஆமை. இவை அனைத்தும்



கெலோனியா வரிசையைச் சேர்ந்தவை.

ஆமைகளின் மண்டையோடு மிக வலுவானது இவற்றின் உடல் ஓடு என்று குறிப்பிடப்படும் எலும்புத் தகட்டினாலான கூட்டினுள் பொதிந்திருக்கும்.

இது இரு பிரிவுகளை உடையது. முதுகுப் புறத்திற்குக் காப் பாக அமைந்திருக்கும் கேடகத்திற்கு காரப்பேஸ் என்றும் வயிற்றுப் புறத்திற் குக் காப்பாக அமைந்திருக்கும் கேடகத் திற்குப் பிளாஜட்ரான் என்றும் பெயர். இவற்றின் உள்ளுறை எலும்பினாலும், மேலுறை கொம்புப்பொருளினாலுமானது. இவை சிறு சிறு துண்டுகளாக ஓடுகள் போல் வேய்ந்திருக்கும். உள்ளுறை எலும்பு உறைக்குத் தகடுகள் என்றும், வெளிப்புறக் கொம்பு உறைக்கு கேடகம் என்றும் பெயர். மேல் மூடியான காரப்பேசும் கீழ் மூடியான பிளாஸ்ட்டிரானும் விலாப் பகுதியில் பந்தகம் அல்லது எலும்பினால் பிணைக் கப்பட்டிருக்கும்.

இம் மாதிரி பிணைக்கப்பட்டிருப்பதால் மார்புப் பகுதி விரிந்து சுருங்க முடியாது. எனவே இதன் சுவாசித்தல் முன் பின் இழுவை முறையில் நடைபெறுகிறது. ஒருவிதத் தசை உள்ளுறுப்புகளை பின்னோக்கி இழுக்கும்போது காற்று நுரையீரல்களில் நிரம்புகிறது. மற்றொரு வகைத் தசை



கோபாலராஜ் சனி, தரம்-9, கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி.

உள்ளுறுப்புகளை முன்னோக்கித் தள்ளும்போது காற்று வெளியேறுகிறது. நீர் வாழ் ஆமை உட்பட அனைத்து ஆமைகளும் நுரையீரல்கள் மூலம்தான் சுவாசிக்கின்றன.

ஆண் ஆமைக்கும் பெண் ஆமைக்குமிடையே உடல், வால், தலை அளவு பிளாஸ்ட்ரான் வடிவமைப்பு, நிறப் பாங்கு ஆகியவற்றில் வேறுபாடு இருக்கும். நில ஆமை, கடல் ஆமை, நன்னீர் ஆமைக்குமிடையே வேறுபாடுகள் உண்டு. நில ஆமையின் வயிற்றுக் காப்புக் கேடகமான பிளாஸ்ட்ரான் பெரியதாகவும் கனமாகவும் வலுவாகவும் இருக்கும். இவை மிக மெதுவாக ஊர்ந்து செல்லும். பொதுவாக இவை தாவர உண்ணிகள், கடல் ஆமைகள், நன்னீர் ஆமைகளின் ஓடுகள் இலேசாகவும் சிறியதாகவும் இருக்கும். நீரில் நீந்துவதற்கு வசதியாக கால் விரலிடை சவ்வு துடுப்பு போல் அமைந் திருக்கும். பொது வாக இவை ஊனுண்ணிகள்.

எதிரிகளைக் கண்டால் ஆமைகள் தங்கள் தலையையும் வாலையும் கால்களையும் ஓட்டினுள் இழுத்துக்கொள்கின்றன. வட அமெரிக்காவிலுள்ள பெட்டக ஆமையின் பிளாஸ்ட்ரானில் கீல் போன்ற அமைப்பு உள்ளது. இதுதான் தலை, வால், கால்களை ஓட்டினுள் இழுத்துக்கொள்ளும் போது இந்தக் கீல் முதுகுக்காப்புக் கேடகமான காரப்பேசுடன் இறுக்கமாகப் பிணைந்து பெட்டி போலாகிவிடுகிறது. ஆபிரிக்காவிலுள்ள ஆப்பு ஆமையின் ஓடு சிறியது. எதிரிகளிடமிருந்து தப்பிக்க இது பாறை இடுக்கில் புகுந்து கொண்டு உடலை உப்பிப் பெருக்கவைத்துக்கொள்ளும். நன்னீர் நிலைகளில் காணப்படும் பாம்பு கழுத்து ஆமை தன் கழுத்தை பக்கவாட்டில் சுருட்டி வைத்துக்கொள்ளும்.

இவற்றின் ஆயுட்காலம் 50முதல் 130 ஆண்டுகள்வரை. இவை தாவரங்கள், ஊண் ஆகிய இரண்டையுமே உண்ணக்கூடியவை. இவற்றிற்குப் பற்கள் கிடையாது. தாடைகளின் ஓரத்திலுள்ள கூர்மையான கொம்பு அலகினால் இரையைக் குத்திக் கிழித்துண்ணுகிறது. ஒருமுறை வயிறார உண்டு விட்டால் ஒரு வருடம் வரைகூட இரை இல்லாமல் இவற்றால் இருக்கமுடியும். இவற்றுக்கு நுகர் உணர்வு, கேளுணர்வு,பார்வை உணர்வு, தொடுஉணர்வு ஆகிய உணர்வுகள் உண்டு.

## சொற்சிலம்பம் - 81

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ண | ப் | ர | சி | ன் | லை | தீ |
| டு | கு | நீ | பா | ந் | மி | வு |
| தி | லா | தி | கோ | னி | ணி | ன் |
| து | அ | பி | ரி | ரோ | சீ | ச் |
| மே | ட் | தா | ஷ் | ர் | ரி | றி |
| ர் | ப் | யா | சா | ஸ் | ரு | லி |
| அ | ல் | ரே | ஓ | கி | த் | ரா |

கட்டங்களில் காணப் படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் -79 இன் விடைகள்

01. கிறீன்லாந்து

02. சச்சின் டெண்டுல்கர்

## சொற்சிலம்பம் - 79 இன் பரிசுக்குரியவர்

செ.நிசாந்,
தரம்-4B,
பாண்டியன்குளம் ம.வி.

## சொற்சிலம்பம் - 79 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. ம.நிறோஜன், தரம்-4, யா/தாளையடி, றோ.க.வித்தியாலயம்.
02. க.தருபன், தரம்-5C, மு.ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை, புதுக்குடியிருப்பு
03. மனோ கிஷாலினி, பிரதானவீதி, புதுக்குடியிருப்பு.
04. சு.நிரோசன், இல-55,D-8 உருத்திரபுரம்.
05. கு.மயூதரன், சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.
06. ப.பாமேஸ்வரி, அச்சுவேலி, யாழ்ப்பாணம்.
07. பா.பிரதீபன், 76/1,மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.
08. வ.சுவேதன், வவுனிக்குளம், மல்லாவி.

01. சொற்களை அகர வரிசைப்படி தொகுத்துக் கூறும் நூல்?
01) ..................................

02. விக்டோரியா பாலை நிலம் காணப்படும் நாடு?
01) ..................................

பெயர் :- ..................................

முகவரி :-..................................

..................................

சொற்சிலம்பம்-81
ஈழநாதம்,
யாழ்சாலை,
கிளிநொச்சி.

# ஆமையாரின் இனிப்புச் சுவை

## பகுதி-09






# கி.மு. 1000 ஆண்டுகளுக்கு முன்னதான பெருங்கற்கால பண்பாடு

கி.மு 1000 ஆண்டுகளுக்கு முன் பெருங்கற்கால பண்பாடு எமது மண்ணில் நிலவியது என்பதை கடந்த வாரங்களில் சான்றுகள் மூலம் தந்தோம். மேலும் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டன. 3000 ஆண்டுகளின் முன் நாகரிகமான மக்கள் வாழ்ந்தார்கள் என்ற சான்றுகளைத் தந்த நாம், சிங்கள பௌத்த பேரினவாதிகள் தம் வரலாறு எனப் புனைந்த கதையான மகாவம்சம் என்ன கூறுகின்றது என்பதையும் அது எத்துணை பொய்களை கூறுகின்றது என்பதையும் பார்ப்போம்.

கலிங்க தேசத்தினை ஆண்ட மன்னனின் மகளான இளவரசி லாலா நாட்டில் பல்லக்கில் சென்று கொண்டிருந்த போது சிங்கமொன்று அவர்களை தாக்கியது. சிங்கம் அங்கிருந்து இளவரசியைக் கொண்டு சென்று அவள் மீது காதல் கொண்டது. சிங்கம் அவளை தன் முதுகில் ஏற்றி தனது குகைக்குக் கொண்டு சென்றது. சிங்கம் அவளுடன் உறவு கொண்டது. அதன் விளைவாக அவர்களுக்கு ஒரு மகளும், மகனும் பிறந்தனர். மகனின் கைகளும்,கால்களும் சிங்கத்தை போலிருந்தன. இதனால் அவனுக்கு சிங்கபாகு என பெயரிடப்பட்டது. மகள் சிகசீவலி என்ற பெயரைப் பெற்றாள். மகன் 16 வயதினை எட்டிய போது அவன் சிங்கம் தூரம் சென்ற போது குகையிலிருந்து தாய் மற்றும், தங்கையுடன் தப்பியோடினான். அவன் தன் வங்க மன்னனான மாமனால் எல்லைக் கிராமமொன்றை அரசாண்டான். குகை வந்த சிங்கம் இவர்களைக் காணாது அட்டகாசம் செய்தது. அதனைக் கொன்ற சிங்கபாகு தனது சகோதரியை கொண்டு ஆட்சியேறினான். புதிய நகரத்தைக் காட்டினான். அதற்கு சிகபுர எனப் பெயரிட்டான். தனது சகோதரியான சிகசீவலியை சிகபுர ராணியாக்கினான். அவர்களுக்கு 16 தடவைகள் இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. அதில் முத்தவனுக்கு இடப்பட்ட பெயர் விஜயன். இரண்டாமவனுக்கான பெயர் சுமித்த. மொத்தம் 22 பிள்ளைகள் அவர்கள். சிகபாகு- விஜயனை இளவரசனாக்கினான்.

விஜயன் அவனது சகோதரர்கள் ஒழுக்கமற்றவர்களாக, வன்முறையாளர்களாக விளங்கினர். இதனால் துன்பமடைந்த மக்கள் அவன் சிங்கபாகுவிடம் முறையிட்டனர்.



அரசன் விஜயனை குற்றவாளியாக்கினான். ஆனால் அவன் திருந்தவில்லை. கோபமடைந்த மக்கள் அவனை கொல்லுமாறு அரசனை வேண்டினர். அரசன் அவனைக் கொல்லாது, அவனையும் அவனுடன் இணைந்த 700 தோழர்களையும் தலையை அரைவாசி மொட்டையடித்து கப்பல் ஒன்றில் ஏற்றி அரசன் நடுக்கடலில் விடச்செய்தான். இவர்களுடன் அவர்களது மனைவி பிள்ளைகளும் அனுப்பப்பட்டனர். பிள்ளைகள் நக்கதீப என்ற தீவில் இறக்கப்பட்டனர். நக்கதீப எனப்படுவது சிறுவரின் தீவு எனப்படுகின்றதாக மகாவம்ச ஆங்கில மொழி பெயர்ப்பாளர் சைகர் கூறுகிறார்.

பெண்கள் மகிழுபாக என்ற தீவில் இறக்கப்பட்டனர். அத்தீவு பெண்களின் தீவு என சைகர் குறிப்பிடுகிறார். விஜயனும் 700 பேரும் சுப்பராகா என்ற இடத்தில் தரை தட்டின.

சுப்பராகா என்ற இடம் இந்தியாவின் மேற்கு கரையில் வட பம்பாயில் தனா மாவட்டத்தில் உள்ள சோபாரா என சைகர் குறிப்பிடுகிறார். அங்கும் இவர்களின் வன் முறை தொடர அவர்கள் மீண்டும் கப்பலேற்றப்படுகின்றனர். அவர்கள் இலங்கையில் தரையிறங்கினர்.

அவர்கள் தரையிறங்கிய இடம் தம்பபன்னி எனப்படுகின்றது. இது இலங்கைக்கான விஜயனின் வருகை என மகாவம்சத்தால் கூறப்படும் பகுதி இதுவரையான இந்த விஜயனின் கதையில் எத்துணை உண்மையிருக்கிறது. சிங்கத்துக்கும், மனிதனுக்கும் பிறந்த வம்சம் என்பது இயற்கையில் உண்மையில்லாத பெரும் புனைவு என்பதை நாம் அறியலாம்.

மேலும் விஜயனின் வருகையின் பின்னரான சம்பவங்கள்- இலங்கைத்தீவில் தமிழரின் பெருங்கற்கால பண்பாட்டை நிராகரிக்கும் வகையில் கூறப்பட்டுள்ளன. விஜயனின் வருகைக்காலம் கி.மு 483 ஆம் ஆண்டுக்கும் 445 ஆம் ஆண்டுக்கும் இடையிலானது. இலங்கையில் பெருங்கற்கால பண்பாடு கி.மு 1000 ஆண்டுகளுக்கு முன்பானதாக குறிப்பிடப்படுகின்றது.

குரலோன்

---

# கஸ்பியன் கடலுக்கு ஆபத்து

உலகில் நிலப்பரப்பில் அமைந்துள்ள மிகப் பெரிய கடல் கஸ்பியன் கடல். இது மத்திய ஆசியாவிற்கும் கிழக்கு ஐரோப்பாவிற்கும் இடையில் அமைந்துள்ளது. இக்கடலில் வால்கா நதி உட்பட பல நதிகள் கலக்கின்றன. இந்நதிக் கலப்பின் ஊடாக இக்கடலில்



பெருமளவான கழிவுப் பொருட்கள் கலக்கின்றபடியால் அவற்றிலுள்ள இராசாயனப் பொருட்களால் இக்கடல் மாசடைகிறது.

உலகில் மத்திய கிழக்கிற்கு அடுத்தபடியாக இப் பகுதி இருப்பதால் இவ் இராசாயனக்கலப்பு மூலம் இக் கடலில் வாழும் உயிரினங்கள் அழிவை எதிர்நோக்கி உள்ளன.

ரஷ்யா, ஈரான், அஸர் பைஜான், கஸகஸ்தான், துருக் மெனிஸ்தான் போன்ற நாடுகள் கஸ்பியன் கடலின் எல்லையாக உள்ளன. ரஷ்யாவின் தொழிற்சாலைக் கழிவுகள் தான் வால்கா நதி ஊடாக கூடுதலாக கஸ்பியன் கடலில் கலக்கின்றன.

வடகஸ்பியனில் செப்பு, நாகம், முதலான உலோகங்கள் அவற்றிற்கான அங்கீகரிக்கப்பட்ட அளவைவிட 3.9 மடங்கு அதிகமாக உள்ளன. செப்பு, நாகம் போன்றன அதிகமாக உணவில் சேரும்போது உயிரினங்களின் அழிவுக்கு வழிவகுக்கின்றன.

இக்கடல் மாசடைவதால் மீன்கள். மற்றும் உணவுக்கு பயன்படுத்தப்படும் விலங்குகள் மிகவும் குறைவடையும். இவ்வாறாக எண்ணெய் கைத் தொழில்கள் மூலம் கஸ்பியன் கடல் மாசடைவை எதிர் கொள்கிறது. இதனால் உயிரினங்கள் அழிவடைவதன் மூலம் கஸ்பியன் கடல் உயிரினங்கள் வாழ்விற்கு ஏற்ற கடலாக அமையாது மற்றொரு சாக்கடலாக மாற வாய்ப்புள்ளது. இந்நிலை தொடருமானால் உப்புச் செறிவு அதிகமாக உள்ள ஸோர்தானின் சாக்கடல் (ஏரல்கடல்) போன்று கஸ்பியன் கடல் தவிர்க்க முடியாததாகி விடும்.

க.கஜிகா

---

அடுத்தடுத்த நாட்கள் அவர்களுக்கு அழுத்தம் கடற்படையால் கொடுக்கப்பட்டது. வலம்புரியை கொண்டு வரவேணும். பார்த்துவிட்டு விடுகிறோம் என அழுத்தமாக கடற்படையினர் சொல்லினர்.வலம்புரியின் உண்மை நிலையை கடற்படைக்கு அவர்களின் உளவாளிகளாக இருந்து தமிழர்கள் சிலர் சொல்லிக்கொடுத்துவிட்டனர்.ஒரு வார காலத்துக்கு மேல் தாக்காட்டமுடியாத நிலையில் வலம்புரியை கொண்டு செல்ல முடிவு எடுக்கப்பட்டது பயணிகளுடன் சென்றால் படகை விட்டுவிடுவார்கள் என்று பயணிகள் வலம்புரியில் ஏற்றிச் செல்லப்பட்டனர். நயினாதீவுக்கு வலம்புரி கொண்டு செல்லப்பட்டு இறங்கு துறையுடன் அணைக்கப்பட்டது.

அவதி அவதியாக கடற்படையினர் அங்கு குவிந்தனர். அவர்களுடன் நயினாதீவின் விகாரையில் இருந்த பௌத்த பிக்கு ஒருவரும் நின்றிருந்தார். வல்பரியிலிருந்து மக்களை வெளியே வருமாறு கடற்படையினர் மிரட்டினர். பயத்துடன் மக்கள் வெளியில்வந்தனர்.

கடற்படையினர் வல்புரிக்குள் ஆவலுடன் சென்று பார்த்தனர். பிறகு வெளியில் வந்தனர்.அதிகாரிகள் தரத்தில் ஒருவர் வந்தார்.படகுப்




## ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்...

பணியாளரிடம் வலம்புரியின் திறப்பைத் தருமாறு கேட்டனர்.

'ஏன்' என்று அவர்கள் கேட்டனர். 'அதனை நாம் பொறுப் பேற்கிறோம்' என்றார் கடற்படையின் அதிகாரி.

அதனை நாங்கள்செய்யமுடியாது. 'எமது அதிகாரிகள்தான் அதனை தீர்மானிக்கவேண்டும்' என்றனர் அவர்கள்.

'அதனை ஏற்கமுடியாது.திறப்பைத் தாருங்கள். கடற்படை இதனை பொறுப்பேற்கிறது' என தெரிவித்து கடற்படையினர் திறப்பை பறித்து விட்டனர். நயினாதீவிலிருந்த படகு ஒன்றில் மக்கள் நெடுந்தீவுக்கு அனுப்பப்பட்டனர்.

இந்த காலம் தொட்டு நெடுந்தீவு பயணிகள் படகுகள் நயினாதீவுக்கு வந்து செல்ல வேண்டும் என்று சொல்லப்பட்டது. இதேபோல் அனலைதீவு, எழுவைதீவு பயணிகள் படகுகளும் நயினாதீவு வந்துதான் குறிகாட்டுவான் செல்லவேண்டும் என கடற்படையினரால் கட்டளையிடப்பட்டது.

வலம்புரி பறிகொடுக்கப்பட்டது. சில நாட்களில் அது காரை நகருக்கு கடற்படையினரால் கொண்டு செல்லப்பட்டது. இனி அடுத்த இலக்கு என்ன?

அடுத்ததாக நெடுந்தீவு பயணிகள் படகான குமுதினி இலக்கானது.

குமுதினி போக்குவரவில் ஈடுபட வேண்டிய நிலை ஏற்பட்டது. இரண்டாம் ஈழப்போர் தொடங்கி ஒரு வாரமளவானது.

குமுதினி பயணிகளை ஏற்றி குறிகாட்டுவான் நோக்கிப் புறப்பட்டது.

ஆழ்கடல் கடந்து குறிகாட்டுவான் போக முன் சோதனை களுக்காக குமுதினி நயினாதீவு கடற்படை இறங்கு துறைக்குச் சென்றது. அங்கு வழமைபோல் எதுவும் சொல்லாமல் சோதனையை படையினர் செய்தனர். இதன் மர்மம் குமுதினி ஓட்டிகளுக்கு புரிந்தது. குமுதினி பறிக்கப்படத்தான் போகிறது என்பது. குறிகாட்டுவானில் பயணிகளை இறக்கிவிட்டு குமுதினி நெடுந்தீவுக்கு பயணிகளை ஏற்றிப்புறப்பட்டது. சோதனைக்காக நயினாதீவு கடற்படைத்துறைக்கு அது சென்றது. இறங்குதுறையுடன் குமுதினி அணைக்கப்பட்டது.

அதிலிருந்து பயணிகள் சோதனைகளுக்காக இறங்கினர்.

கடற்படையினர் சாமான் மூட்டைகளையும் இறக்கச் சொல்லினர். சோதனைக்காக்கும் என நினைத்து மக்கள் பொருட்களை இறக்கினர். இறக்கப்பட்டதும் நயினாதீவிலிருந்து ஒரு பயணிகள் படகை கடற் படையினர் வரவழைத்தனர். அதில் ஏறி நெடுந்தீவுக்குப்போங்கள். பாது காப்புக்காரணங்களுக்காக குமுதினியை கடற்படை பொறுப்பேற்கின்றது என கடற்படையினர் சொல்லிவிட்டு அதனை தமது கட்டுப்பாட்டில் எடுத்தனர்.அப்போதும் நயினாதீவு விகாரையைச் சேர்ந்த பிக்கு ஒருவர் வெறித்தனமாக நின்றிருந்தார். 1990 யூனில் வலம்புரியுடன் குமுதினியும் பறிபோனது.துயரத்துடன் மக்கள் சென்றனர்.வலம்புரியை விட் அவர்கள் குமுதினி மீது உயிரைப்போன்ற பற்றை வைத்திருந்தனர்.

அவர்களின் உறவுகளின் உயிர்களின் ஆத்மா உலாவும் இல்லமாக அவர்கள் குமுதினியைக் கருதியிருந்தனர்.


அந்த குமுதினி பறிபோன போது மக்கள் அழுதனர்.

பறிக்கப்பட்ட குமுதினியும் வலம்புரியும் சிறிலங்கா கடற்படை யால் திருகோணமலை சீனன்குடா சிறிலங்கா கடற்படைத்தளத்துக்கு கொண்டு செல்லப்பட்டன. அங்கு அவற்றுக்கு சிறிலங்கா கடற்படையின் கடற்கலங்களுக்குரிய சாம்பல் கடும் நீல வண்ணங்கள் பெயின்ற் பூசப்பட்டது.ஆம் தமிழ் மக்களின் இன அழிப்புக்கு வலம்புரியும் குமுதினி யும் சிறிலங்கா கடற்படையால் தயார் செய்யப்பட்டன.

1990 ஓகஸ்டில் தீவகம் ஊர்காவற்றுறையில் இருந்து-மண்டை தீவுக்கு நகர்ந்து சிறிலங்கா படைகள் மக்களை படுகொலை செய்த திரிவிடபலய இராணுவ நடவடிக்கைக்கு இராணுவத்தினரை தரையிறக்க குமுதினியும் வலம்புரியும் கடற்படையால் பயன்படுத்தப்பட்டன.இதனை எழுவைதீவிலிருந்து மக்கள் பார்த்துள்ளனர்.

அடுத்ததாக ஆனையிறவு இராணுவ முகாமை விடுதலைப்புலிகள் 1991 தாக்கிய ஆகாய- கடல்- வெளி நடவடிக்கையின்போது சிறிலங்கா இராணுவத்தினர் வடமராட்சி கிழக்கில் வெற்றிலைக்கேணியில் கடற்படை தரையிறக்கக்கப்பலிலும் குமுதினியில் கொண்டு வந்து தரையிறக்கப் பட்டனர். இதன் பின்னர் படையினரின் போக்குவரவுப்படகாக குமுதினியும் வலம்புரியும் படையினரால் பயன்படுத்தப்பட்டன.

துருவன்




# சந்தேகத்தை விலக்கி மகிழ்ச்சியை நோக்கி பயணியுங்கள்

மகிழ்ச்சி என்பது எல்லோர் வாழ்விலும் சங்கமிக்க வேண்டும். மகிழ்ச்சிகள் எல்லா வகையிலும் வருவதொன்று. மகிழ்ச்சிகளை தொலைத்து சாவா? வாழ்வா? என தவிப்பவர்களுமுண்டு. நாம் ஒருவரோடு எவ்வாறு அன்பாய் பழகிக் கொள்கின்றோமோ அதனை அவர் எவ்வாறு ஏற்றுக்கொண்டு நடக்கின்றாரோ. அதனைப் பார்க்கும் போது இருவருக்குமிடையில் ஓர் மகிழ்ச்சியான உணர்வு தோன்றுகின்றது. சின்ன வயதிலிருந்த மகிழ்ச்சி நம் வாழ்வில் இப்போது இல்லேயே என நம்மில் பலர் நினைப்பதுண்டு. நாம் விருத்தறியா வயதில் எமக்கு நல்லது கெட்டது ஏதும் தெரிவதில்லை. வளர்ந்து பெரியவர்களாகின்ற போதுதான் நாம் ஓர் குடும்பச் சுமைக்குள் தள்ளப்படுகின்றோம். இதனால் மகிழ்ச்சிகளை தொலைத்துவிட்டோம் என நினைத்துக் கொள்ளாதீர்கள்.

வாழ்க்கையில் மகிழ்ச்சிகளை தேடுவதாயின் உங்கள் வாழ்க்1கயோடு போராடுங்கள். எங்களால் மற்றவரை எவ்வளவு மகிழ்ச்சிப் படுத்த முடியுமோ அவ்வாறு மகிழ்ச்சிப்படுபவரை பார்த்து நாம் இரட்டிப்பான மகிழ்ச்சி அடைய முடியும். பள்ளிப் பருவத்திலிருந்த மகிழ்ச்சி எல்லோர் வாழ்விலும் மறக்க முடியாத தொன்று. சிலர் பள்ளி வாழ்க்கையினை கூட அனுபவிக்க முடியாமல் போனவையுமுண்டு. இதற்கு முக்கியமாக குடும்ப கஷ்டம் தான் காரணமாயுள்ளது. இதற்காய் மனதில் கவலையினை வளர்த்துக் கொள்ளாதீர்கள். மனச்சிறையினை உடைத்து மகிழ்ச்சியை நோக்கிப் பயணியுங்கள்.

அன்பான வார்த்தைகளை வரவழையுங்கள் அனைவரோடும் ஆதரவாய் பழகுங்கள். இதனையிட்டு உங்கள் வாழ்வில் மகிழ்ச்சி கொள்ளுங்கள். ஒரு கஷ்டமான நிலைக்குள் தள்ளப்படுகின்ற போது எங்கள் முகங்களில் மகிழ்ச்சி காண்பது என்பது பெரிய கஷ்டமானதாய்த்தான் இருக்கின்றது. இது இயல்பாய் எம்மில் இருக்கின்ற போதும் இதனை மாற்றியமைக்க முடியாதா? சில மகிழ்ச்சியை தொலைத்த பின்னர் தாம் மற்றவர்களோடு பழகும் போது காட்டிக்கொள்ளாமல் தங்கள் மனதிற்குள் துடிப்பார்கள். உங்கள் மனதிலிருக்கும் மனக் கவலைகளை உங்களோடு உயிருக்குயிராய் இருப்பவர்களுக்கு சொல்லி ஆறுதலடையுங்கள். இதனால் கூட ஓர் மகிழ்ச்சியான உணர்வு உங்களிற்கு தோன்றும். இல்லற வாழ்வில் இன்பதுன்பம் எதுவென்றாலும் உங்கள் இருவரோடும் இருத்தல் வேண்டும். எதனையும் நாம் சரிவர ஏற்று நடக்கின்ற மனநிலைக்குள் நம்மை வைத்திருக்க வேண்டும். வீட்டில் நடைபெறும் சின்னச் சின்ன சண்டைகளையெல்லாம் மற்றவர்களிற்குச் சொல்வது சரியானதொன்றா? இதனால் என்ன நன்மை பெறுவீகள். நீங்கள் சொல்வதை கேட்டுக் கொண்டு இன்னும் சிலருக்கு சொல்வார்கள். இது எவ்வாறு இருக்கும் என சிந்தித்துப் பாருங்கள். முடியுமான வரையும் உங்கள் பிரச்சினையினை வீட்டிற்கு வெளியில் விடாமல் முடியுங்கள். ஒருவர் மீது ஒருவர் சந்தேகவுணர்வு கொள்வதை தவிர்த்துக் கொள்ளுங்கள். இது தான் உங்கள் வாழ்வில் ஒரு பிரிவினையினை ஏற்படுத்தும். சந்தேகம் வந்தால் வாழ்க்கையில் இனிமையாய் இருக்க முடியாது.



பிறர் சொல் கேட்டு சந்தேகத்தினை ஏற்படுத்திக் கொள்ளாதீர். திருமண வாழ்க்கையில் எவ்வாறு மகிழ்ச்சியை பெற்றீகளோ. அதனை தொடர்ந்து இருக்க வழிசமையுங்கள். உங்கள் சந்தேகத்தன்மையால் நீங்கள் பிரிந்து வாழ்கின்றபோது உங்கள் பிள்ளைகளை கூட நாளை பாதிக்க நிறைய வாய்ப்புண்டு. உங்கள் வாழ்கையில் சந்தேகம் வேண்டாம். தினம் மகிழ்ச்சியாய் வாழ நீங்கள் சந்தேகத்தினை கைவிட்டு மகிழ்ச்சியை தேடுங்கள்.

**சி.மதீஸ்**

# குடும்பம் தான் கோயில்

குடும்பம் என்பது ஒரு கோயிலாக எப்பொழுதுமே இருக்க வேண்டும். அப்போதுதான் அவர்களின் எதிர் கால வாழ்க்கையை தாமாகவே தீர் மானித்துக்கொள்ள முடியும். சில திருமணம் காதலித்து நிச்சயிக்கப் படுகின்றது. சில திருமணம் பெற்றோர்களின் ஆசீர் வாதத்துடன் நடைபெறுகின்றது. இதில் இரண்டிற்கும் இடையில் என்ன வித்தியாசம் இருக்கின்றது. காதலித்துத் திருமணம் முடிப்பவர்கள் சிலர் இடையில் பிரிகின்றனர். பெரியோர்களின் ஆசீர் வாதத்துடன் நடக்கும் திருமணமும் இடையில் பிரிந்து விடுகின்றது. ஆனால் காதலிப்பது தப்பு என்பது இல்லை தப்பு என்பது புரிந்துணர்வு இல்லாத மனிதர்கள் இடத்தில்தான் தங்கள் குடும்பம் சீரழிகின்றது. எந்த ஒரு மனிதர்களும் கணவன் மனைவியாக மாறிவிட்டால் அவர்கள் ஒருவர் மேல் ஒருவர் நல்ல நம்பிக்கையும் புரிந்துணர்வுடனும் நடந்து கொள்ள வேண்டும்.



ஒரு குடும்பமாக மாறிவிட்டால் கணவன் மனைவி இருவரும் இன்பத்தையும் துன்பத்தையும் சகித்து வாழக்கூடிய தன்மை கொண்டவர்களாக இருக்க வேண்டும். ஒவ்வொரு குடும்பமும் தங்கள் மனசில் இருக்கும் குறிக்கோள்களை இருவருமாக பேசித்தீர்மானித்து நல்ல முடிவினை எடுக்க வேண்டும். அப்போதுதான் அங்கே குடும்பத்தில் பாசப்பிணைப்பு ஏற்படுகின்றது. ஆனால், கணவன் நினைத்த படியும், மனைவி நினைத்த படியும் மாறாக நடந்து கொண்டால் அங்கு மேலும் மேலும் குடும்பத்தில் பிரச்சினை வளர்கிறது.

கணவன் மனைவி இரண்டு பேருமே எந்த இடத்திலும் எந்தெந்த விடயத்திற்கு தாம் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவராக எப்பவுமே இருக்க வேண்டும்.

குடும்பம் என்று இருந்தால் சந்தேகம் என்பது இருக்கக் கூடாது. இந்த சந்தேகம் என்ற சொல்லை வைத்துக்கொண்டு சிலர் தங்கள் குடும்பத்தினை சீரழிக்கின்றனர். இந்த சந்தேகத்தின் பேரால் கணவன் மனைவி பாதிக்கப்பட்டு குடும்பம் இரண்டாகப் பிரிக்கப்படுகின்றது. இதில் இருவரும் தனித் தனியாக தங்கள் வாழ்க்கையை கொண்டு செல்கிறார்கள். இதற்குக் காரணமாக இருப்பது இருவர் இடத்திலும் புரிந்துணர்வு அற்று சந்தேகம் என்ற பெயரை வைத்து கபட நாடகம் ஆடுகின்றார்கள். நல்லதோர் குடும்பமாக வாழ வேண்டும் என்றால் சந்தேகம் என்ற பெயரை மாற்றி விட வேண்டும்.

கணவன் மனைவி எப்பவும் ஒருவர் மனசை ஒருவர் புரிந்து கொண்டு வாழ்வது தான் வாழ்க்கை. அப்போது தான் குடும்பம் ஒரு கோயிலாக மாறும்.

**வ.லலிதா**

## பயனுள்ள வீட்டுக் குறிப்புகள்

*எலுமிச்சை சாறு சேர்க்கும் பதார்த்தங்களின் ருசியை அதிகப்படுத்த அத்துடன் மிளகாய்த்தூள், மிளகாய் வற்றலுக்கு பதில் பச்சை மிளகாயைச் சேர்க்கவும்*

* * *

*சூடான பதார்த்தம், ரசம் ஆகியவற்றில் எலுமிச்சை சாறு சேர்க்கும் முன் சிறிது ஆற விடவும். கொதிக்கும் உணவில் எலுமிச்சை சாறு சேர்த்தால் உணவு கசந்து போய் விடும்.*

* * *

*எலுமிச்சையை வெந்நீரில் சிறிதுநேரம் ஊற வைத்தபின் சாறு பிழிந்தால் அதிகப்படியான சாறு கிடைக்கும். சுலபமாகப் பிழியவும் வரும்.*

* * *

*எலுமிச்சை ஜுஸில் சீனிக்கு பதில் சிறிதளவு உப்பு சேர்த்துப் பருகினால் ருசியும் அதிகமாக்கும், தாகமும் தணியும், எடையும் கூடாது.*

*காய்கறிகளை வேக வைக்கும்போது சில துளிகள எலுமிச்சை சாறு சேர்க்கவும். காய்கறிகளின் நிறம் பளீர் என்று இருக்கும்.*

* * *

*எண்ணெய் காயும்போது பொங்காமல் இருக்க அதில் ஒரு வாழைப் பழத் தோலையோ ஒரு சிறு உருண்டை புளியையோ போட்டுக் காயவிடவும். காய்ந்த பின் இதை எடுத்துவிட்டு தேவைப்பட்டதைப் பொரித்தெடுக்கவும்.*

* * *

*மிகுதியாக இருக்கும் இட்டிலியை உதிர்த்து உப்பு, காரம் சேர்த்து தாளித்துக் கொட்டிக் கலந்து வதக்கிய வெங்காயத்துடன் கலந்தால் இட்லி உப்புமாவாக சுவைக்கலாம்.*

* * *

*பால் காய்ச்சும் முன் பால்பாத்திரத்தை தண்ணீரால் அலம்பி விட்டு அதில் பாலை ஊற்றிக் காய்ச்யசவும். அடிப் பிடிக்காது.*

## மஞ்சட் சோறு



சமையல் குறிப்பு

தேவையான பொருட்கள்:-

| | |
|---|---|
| சம்பா அரிசி | -1 சுண்டு |
| மஞ்சட்தூள் | -1 தேக்கரண்டி |
| பட்டர் | -1 மேசைக்கரண்டி |
| வெங்காயம் | - 25கிராம் |
| பச்சைமிளகாய் | -4 |
| ஏலப்பொடி | -1/2 தேக்கரண்டி |
| கராம்பு | -4 |
| கறுவா | -அளவாக |
| தேங்காய்ப்பால் | - 21/2 டம்ளர் |
| உப்பு | -அளவாக |

செய்முறை:-

* தேங்காய்ப்பாலைக் கொதிக்க வைத்து அரிசி, மஞ்சட்தூள் சேர்த்துப் பதமாக வேக வைத்து உவித்து எடுக்கவும். மஞ்சட்தூளைச் சுத்தமான வெள்ளைத்துணியிற் போட்டு தளர்ந்த பொட்டளமாகக் கட்டிப் போடவும்.
* பொட்டளத்தை அரிசியுடன் சேர்த்து வேகவிட்டு தேவையான நிறம் வந்ததும் பொட்டளத்தை எடுத்துக் கொள்ளவும்.
* பச்சைமிளகாய் வெங்காயத்தை குறுணலாக வெட்டவும்.
* பட்டரில் வெங்காயம், மிளகாய், ஏலம், கராம்பு, கறுவா இவற்றைப் பொன்னிறமாகப் பொரித்து அதனுடன் சாதத்தைச்சேர்த்துக் கலந்து கொள்ளவும்.

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




குமரகுரு புடவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

குமரகுரு பரிசுத்திட்டம்—42

பெயர்:........................................

முகவரி:........................................

........................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.



## உறவு

என்றோவொரு பொழுது
தொலைந்து போனாள்
அவள்.

துவண்டு, துயரமுற்று
தூக்கம் தொலைத்து...
பின்னர்
ஒருபொழுது திடங்கொண்டு
தீர்க்கமாய் சொன்னான்
அவன்.

“உனதும் எனதுமான
உறவென்பது
அலையும் ‘நடைபிணம்’
ஒன்றின் முடிகையில்
நீ.....

திரும்பி வருவதென்பது
திண்ணம்” என....
தொலைந்தவள்
என்ன சொன்னாள்

“அந்த வெறுமை வெளியில்
எனதும்
உனதுமான பயணம்
ஆரம்பமான போது...

மனம்தொட்ட
பக்கங்கள்...
மாற்றங்கள் கருதிய
புரிதல்....
உனது போக்குகளுக்கு அமைவான
எனது நெகிழ்ச்சி.

பின்னர்
எப்போது இந்த வெற்றிடம்

உனது சந்தேகக் கோடரி
கொத்திப் பிழந்த
விறகுத்துண்டமாய்
இப்போது நான்.

எந்தப் பொழுதுகளின்
‘நிகழ்தகவு’ என்பது
எனதும்
உனதுமான பிளவின்
முடிவாகும்” என...

கானகன்

## நீண்ட காத்திருப்பு

விம்பங்கள் என் முன்
பிரத்தியட்சமாகி
என் ரூபத்தையே எனக்கு
அந்நியமாக்கின
விம்பங்களின் பின்னலுக்குள்
நான் “நொய்ந்து” போன
வரலாறு மட்டுமே
வடிக்கப்படப் போகிறது.
சுதாகரித்து நான் நிமிர்ந்து
எனை வெளியிழுக்க முடியாதளவுக்கு
ஏதோவோர் கட்டென்னுள் விழுந்துள்ளது.
“யாவையும்” உடைத்தெறியும்
உத்வேகம் நொருங்கிப்போன
இருட்டுச் சூழலில்
ஒரு சிறுபொறி வெளிச்சத்துக்கான
எனது காத்திருப்பு நீண்டு விரிகிறது.

காத்திருத்தல்
“கானலென்ற” உண்மையைக்
கணங்கள் ஒவ்வொன்றும்
கதை கதையாய்ச் சொன்னாலும்
நம்பிக்கை மட்டும் சிதையாது தேங்கிற்று.

நம்பிக்கை நிரப்பி
நீண்ட பொழுதுகளாய்
எந்தன் தவமிருத்தல் நீள்கிறது.

த. அஜந்தகுமார்

# மூன்று கதைகள்

## மனிதம்

தெருவில் அமளி. நாய் பிடிகாரர் வந்து விட்டார்கள் பிரதேச சபை பெயர் பொறித்த ரைக்ரர் வேறு யமனின் தூதுவர்கள் போல சுருக்குக் கயிறுகளை நாய்களுக்கு வீசி நாய் பிடிகாரர்கள் செய்த அட்டகாசத்தால் நெஞ்சு வலித்தது. முற்றத்தில் சுருண்டு படுத்திருந்த “ரோசி” என்ற பெட்டை நாய்க் குட்டி



வாலை சுருட்டி வைத்தபடி வள்.. வள் என்றது “ரோசியையும் கண்டு விடுவார்களோ யமதூதர்கள் என்று பயந்தபடி அதனை இழுத்துக் கொண்டு போய் வீட்டுக் கோடியில் ஒளித்து வைத்தது நேற்று.

இன்று காலை அது திறந்திருந்த கதவினூடாக குசினிக்குள் நுழைந்து கறிச் சட்டியை பதம் பார்த்தது.

பொத்துக்கொண்டு வந்த கோபத்தால் அகப்பட்ட தடியால் அடித்தபடி.

“சனியன் இதனை நேற்று அவங்களிட்டை பிடித்துக் கொடுத்திருக்கலாம்” என்றது மனம்.

## படைப்பு



கஷ்டப்பட்டுத்தான் அதனைச் செய்தான். எத்தனையோ நாட்கள் விழித்திருக்கும் போதும் வேறு வேலைகள் செய்யும் போதும் அதே சிந்தனையாகத் தான் இருந்தான்.

பிறகும் பலவிதமான சிரமங்களின் மத்தியில் தான் அவனால் அதனை உருவாக்க முடிந்தது.

செய்து முடித்த பின்னரும் திருப்திப்படாமல் பலதடவை புரட்டிப் புரட்டிப் பார்த்து திருத்தங்கள் செய்து தன்னளவில் திருப்திப்பட்டு வெளியே கொண்டு வந்தான்.

விடுப்புப் பார்க்க பல பேர் வந்தார்கள்.

“என்ன இது” என்றார்கள்.

அவன் பதில் சொன்னான்.

“அப்படியா இது அவர் செய்தது போல இல்லையே” என்றார் தலை நரைத்த ஒருவர்.


“அது அவர் செய்தது- இது நான் செய்தது” என்றான் பதிலுக்கு அவன்.

## விமர்சனம்

முகம் சிவந்த புது மனைவி குளித்து முடித்து அலங்காரம் செய்ய அறைக்குள் போய்விட்டாள். விருந்துக்காக நண்பரின் வீட்டுக்குப் போக வேண்டும்.

ஒரு புத்தகத்தை எடுத்து படிக்க ஆரம்பித்தான். நேரம் போனது தெரியவில்லை.

தொன்னூறாவது பக்கத்தை புரட்டியபோது அறைக் கதவைத் திறந்தபடி அவள் வந்தாள். உச்சி அலங்காரம் புதிய சேலை அவளை ஆர்வமாகப் பார்த்தான்.



அதில் ஒரு கேள்வி இருந்தது. இவன் அதனை புரிந்து கொள்ளாமலே இருக்க அவள் கேட்டே விட்டாள்.

“எப்பிடி நான் வடிவாய் இருக்கிறேனா? இவன் புரியாத பாடம் படிக்கும் மாணவன் போல சிறிது பொழுது மௌனம் காத்து

“இந்தச் சேலை எங்கை வாங்கினது என்று கேட்டான்.”

இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

# குறுங்கதை

# நல்லமுடிவு

அது அமாவாசைக்கு முன்னையநாள் இரவு துரையண்ணையின் வீட்டுப் படலை திறக்கப்படும் ஓசை கேட்டு துரையண்ணை விழித்துக் கொண்டார். அந்த ‘கச’ இருட்டில் இரு உருவங்களின் அசைவு நிதானமாக உள்வருவதை துரை அண்ணையது கண்கள் அமைதியாக விழுங்கிக் கொண்டிருந்தன. ‘இந்த நேரத்தில வாறதெண்டா அது நிச்சயமா ரகுவும் துசியுமாத்தான் இருக்கவேணும். இல்லாட்டி வேறயாராய் இருக்கும்...’ என்ற சந்தேக இளையங்கள் அசைந்ததால் தனது ‘ரோச்’ லைட்டை எடுத்துக்கொண்டு மெதுவாகப்படுக்கையில் எழுந்து அமர்ந்து கொண்டார்.

“துரையப்பா... துரையப்பா...”

“ஓம்...” என்றபோதே அவருக்கு இருவரும் யார் என்பது உறுதியா கிவிட்டது.

“வாருங்கோ தம்பியாக்கள்...” என்றவாறு பாயில் பரந்துகிடந்த ‘பெட்சீற்றை’ ஒதுக்கிக்கொண்டு தானும் சற்று தள்ளி அமர்ந்து கொண்டார்.

“சாப்பிட்டியளே பெடியள்”

“இல்லையப்பா” என்று ஒரு மித்த குரல்களாய் அவர் முன் வந்து விழுந்தன.

“பொறுங்கோ, நீங்கள் இண் டைக்கு வருவியளெண்டு அம்மா பிள்ளையளுக்கு பிட்டும், முட்டையும் பொரிச்சு உறியில வைச்சவ...” என்ற வர், படலைக்கு வந்த தன், தன்னு டைய பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொண்டு சாப்பாட்டை உறியிலிருந்து இறக்க கமலமும் எழுந்துகொண்டாள்.

“என்னப்பா இரண்டுபேரும் வந்திட்டாங்களே”

“ஓமப்பா பசியோடதான் வந்திருக்கிறாங்கள். நீர் வேகமாகத் தண்ணிகொண்டுவாரும். டக்கெண்டு சாப்பாட்டக்குடுத்து அனுப்பல்லே வேணும். அதுக்குள்ள ஆமி வந்தா...” என இழுத்தவாறு சாப்பாட்டுப் பாத்திரத்தை இருவர் முன்னாலும் வைக்க,

“என்னமோன ரெண்டு நாளா கொம்மாவப்பாக்க வராம இருந்திட்டி யள். நான் என்ன பாடுபட்டனெண்டு தெரியுமோ உங்களுக்கு”

“அம்மா நேற்றும் முந்தநாளும் ஒரே ‘ரவுண்டப்’ தானே அதுதான் அம்மாவரமுடியேல்ல” என்றான் துசி.

இவர்கள் இங்கே கதைத்துக் கொண்டிருக்க படலையில் காவல் காத்த துரையண்ணை உடல் வெடுவெடுக்க ஓடிவந்து,

“தம்பி ஆரோகனபேர் வாறமாதிரி இருக்கு, கதைச்சும் கேட்குது. உடனே வெளிக்கிடுங்கோ” என்றது தான் தாமதம் இருவரது கைகளைப் பற்றியவாறு விடைபெற்றுக்கொள்ள எச்சரிக்கையா துரையண்ணை சாப்பாட்டுத்தடயம் எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு படுக்கையில்சாய டுமீல்... டுமீல்... டுமீல்... டுமீல்...” அவரது நெஞ்சு படபடக்கத் தொடங்கி யிருந்தது. ‘கடவுளே என்ர இரு செல்வங்களையும் காப்பாற்றிப்போடு, காப்பாத்தினா நூறு தேங்காய் உடைப்பன்” என நல்லூர் கந்தனை வேண்டியவாறு மெதுவாகக் கமலத்துக்குத் தெரியாமல் மதிலருகில் வந்து நின்று வீதியை அவதானித்தார். அவர் ஒரு கணம் வெடித்துச் சிதறும் வெடிகுண்டு போல உடைந்துபோனார். அந்த இராணுவத்தின் வாகன ஒளியின்



முன்னால் அதே கறுப்புத் தொப்பி அதே வெள்ளை, நீல சேட்டுக்கள், கை நழுவிய துப்பாக்கிகள் அதைச் சுற்றி அயல்வீட்டு மணியுடன் இராணுவமும் நின்றிருந்தார்கள். மணிக்கு கைகொடுத்த இராணுவக் கொமாண்டர் அந்த இரு போராளிகளினது உடல்களை வாகனத்திற்குள் இழுத்துப்போட்டுக்கொண்டு புறப்பட, மணி படலையைத் திறந்துகொண்டு உள்ளே நுழைவதை பார்த்துக்கொண்டே நின்ற துரையண்ணைக்கு ஆத்திரம் தலைக்கேறி அவரை ஆவேசம் கொள்ளவைத்திருந்தது.

திரும்பிச் சென்ற வேகத்திலேயே வீட்டு மூலையில் மறைத்து வைத்திருந்த தோட்டாபோட்டுச்சுடும் ‘சொட்கண்’ துப்பாக்கியில் ஒரு ரவையை ஏற்றிக்கொண்டு மணியின் வீட்டுப்படலையைத் திறந்து அண்ணே...மணி அண்ணே... மணி” என குரல் மாற்றிக் கூப்பிட வந்து படலையைத் திறக்க “டுமீல்” என ஒரு ஓசை உயர்ந்து அமைதியாகி யது. அவரும் வீட்டில் வந்து ஒன்றும் புரியாதவர் போலபடுத்துக்கொண்டார். அதிகாலையில் வழமையான பரபரப்புகள் எழுந்திருந்தன.

வி. தேவபாணு



# மறக்க முடியாத செயல் வீரன் வான்மீகி

**க.மிரேசு**

தம்பி நீங்கள் போன கிழமையல்லோ இஞ்சயிருந்து போனனீங்கள். இது ஒரு போராளி மருத்துவத்தாதியின் குரல்.

டேய் மச்சான் சொன்னா கேட்டனீயே. போக வேண்டாமடா என்று சொல்ல நக்கலா அடித் திட்டு போனாய் இதுவும் காணாது இன்னும் உனக்கு வேணுமடா... இது காயமடைந்து சிகிச்சை பெறும் போராளி ஒருவன் சீண்டும் குரல்.

இது வான்மீகியல்லோ, போனகிழமைதானே காயம் சுகமாகிவிட்டுது என்று போக வேண்டாமென்று சொல்லவும் அடம் பிடித்துக் கொண்டு போனான். இப்ப இப்படி கடுமையாகக் காயமடைந் திருக்கிறான், போன மாதமும் தலையிலும் கையிலும் காயப் பட்டிருந்தான்.... இது ஒரு போராளி வைத்தியரின் அங்கலாய்ப்பு. இவன் என்னடா வருசம் முழுவதும் காயப்படுகிறான் இவனுக்கென்றே ஆமி ரவையும், செல்லும் அடிக்கிறான் போல இது சக தோழர்களின் குரல்.

இது வெறும் கற்பனைக் கதையல்ல என்பதனை கப்டன் வான்மீகியுடன் இருந்தவர் களுக்கும் களமாடியவர்களுக்கும் வழி நடத்திய பொறுப்பாளர்கள், தளபதிகளுக்கும், மருத்துவம் செய்த மருத்துவர்களுக்கும் தெரியும். அந்தளவிற்கு அந்தப் போராளி காயமடைந்திருக்கிறான். இப்படியாக பெரும்பாலான சண்டைகளில் காயமடைந்த அந்தப் போராளி எத்தனை களங்களை சந்தித்திருக்கிறான் என்பதை வாசகர்கள் ஊகித்துத் தெரிந்து கொள்ளலாம்.

சிறு வயதிலிருந்தே விடு தலையின்பால் ஆர்வமாய் இருந்து சிங்கள கொடூரனின் நாசகார வேலைகளையும் கொடுமைகளை யும் கண்ணுற்ற அந்தப்போராளி நேரம் வரும்போது தன்னை போராட்டத்தில் இணைத்துக் கொள்ள வேண்டும் என்பதில் ஆர்வமாக இருந்தான் அவன் நினைத்தது போலவே போராட்ட தேவை வந்தபோது தன்னை தாயக விடுதலைப் போரில் இணைத்துக் கொண்டான்.

கப்டன் வான்மீகி (யோகநாதன் செந்தூரன்) யாழ்ப்பாணம் என்ற அந்தப் போராளி இயல்பிலேயே மிகுந்த துடியாட்டம் கொண்டவன். போராட்டத்தில் இணைந்து கொண்ட நாள் முதலாய் அந்தப் போராளியில் ஓர் அபூர்வம் காணப்பட்டது. தனக்குத் தரப்படு கின்ற எல்லா வேலைகளையும் மிகவும் சிறப்பாகச் செய்து முடிக்கவேண்டும் என்பதில் தெளிவாகவும் உறுதியாகவும் இருப்பான்.

வேவு நடவடிக்கையில் சிறப்பாகச் செயல்படும் ஆற்றல் அவனுக்கே உரியதாகும். சிறு வயதினன் என்றாலும் அவனது சண்டைகள் மிக நுணுக்கமாக திட்டமிடப்பட்டு செய்யப்படுவதும் வேகமான களச்செயற்பாடும் எல்லோரையும் கவர்ந்த விடயமே.

ஜெயசிக்குறு சண்டை யில் தன்னை இணைத்துக் கொண்ட கப்டன் வான்மீகி முதல் களத்திலேயே சிங்கள இராணுவத் திற்கு எதிராகச் சண்டையை திறம்படச் செய்த பெருமைமிகுந்த வீரனாவான். புதிய போராளி என்பது மட்டுமல்ல, ஒரு பெரிய யுத்த களத்தில் முதன் முதல் சண்டை செய்யும்போது எந்தளவு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டும். ஆனால் அவைகளைக் கடந்து தனித்துணி வுடன் போராடினான். அந்தச் சண்டையில் நின்ற பெரும்பாலான தளபதிகள், பொறுப்பாளர்கள் வான்மீகியை போற்றினர்.

அந்தப் புதுப் போராளி பயமில்லாமல் சண்டை பிடிச்சான் பார்த்தனீங்களா.

மச்சான் அந்த வெள்ளை யன், கட்டையன் யாரடா பார்த்தா புதுப் போராளியாய் கிடக்குது. ஆனால் சண்டை செய்தத பார்த்தனியா?

என்று எல்லோருமே சொல்லி அவன் எதிர்காலத்தில் சிறந்ததொரு வீரனாக வருவான் என்று வாழ்த்தினர். அதேபோலவே கப்டன் வான்மீகி சிறந்த போராளியாக சிறந்த வீரனாக, சிறப்பான சண்டைக்காரனாக, சிறப்பான வேவு வீரனாக, சிறந்த களநிர்வாகியாக போராட்ட பணி களைச் செய்தான். வான்மீகி என்ற அந்த மாவீரன் சிறப்பானவன் என்பதில் ஐயம் ஏதும் இருக்காது.

மச்சான் வான்மீகி தூரத்தில ஏதோ சத்தம் கேட்குது ஒருக்கா போய் பார்த்தால் நல்லது என்று சொன்னால் சரி உடன் அந்த இடத்திற்கு நிதானமாக மதிநுட்பத்துடன் நடந்து அங்கு என்ன நடக்கிறது என்பதை அவதானித்து அங்கு நடப்பவை களை தெளிவாகச் சொல்வான்.

எந்தவொரு நேரத்திலும், எந்த இக்கட்டான நிலையிலும் வான்மீகி எதற்கும் பின்வாங்க மாட்டான். வேவு நடவடிக்கையின் போது தன்னுடன் செல்பவர்களை பாதுகாப்பிற்கும், உதவிச் சூட்டிற் கும் வைத்து விட்டு தானே முன் சென்று வேவுத் தரவுகளை எடுத்து வருவான். இப்படியாக வேவுக்கென சென்றபோது ஓர் நாள் ஊரியானில் எதிரியின் முன்னரங்குப் பகுதியில் வான்மீகியின் அணி சிக்குண்டு சண்டை தொடங்கிவிட்டது.

கப்டன் வான்மீகிக்குத் தான் அடி விழுகிறது என்பது எல்லோருக்கும் தெரிந்துவிட பதற்றத்துடன் எல்லோரும் பார்த்து நிற்க சில நிமிடங்களில் முதல் தாக்குதல் நடந்த இடத்தைக் கடந்து பக்கவாட்டாக எமது தரப்பி னரின் சத்தம் கேட்டது. வான்மீகி யின் தொடர்பு கிடைத்தது பிரச்சினை ஒன்றுமில்லை. உவங்க ளுக்கு ஒரு விளையாட்டைக் காட்டிவிட்டு வருகிறேன் என்று சொல்லிய சில நிமிடங்களில் எமது இடத்திற்கு வந்துவிட்டான்.

வான்மீகி என்ன மச்சான் நடந்தது என்று கேட்க நல்லா கட்ட போயிட்டன். என்னை அவன் காணேல்ல. பின்னுக்கு வந்த வர்களை கண்டிருக்க வேணும். அவர்களை கண்டிட்டு அடித்தான் எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. நிலைமை மோசமாகிவிடுமென நினைத்து பக்கத்தில நின்று அடித்துக் கொண்டிருந்தவனுக்கு குண்டை கழற்றி எறிந்துவிட்டு அது வெடித்த அவகாசத்தில ஓடி வந்திட்டன் என்றான்.

இதைப்போலவே கப்டன் வான்மீகி எல்லாச் சண்டை களிலும் மிகவும் சிறப்பாகச் செயற் பட்டான். ஓயாத அலைகள் 02, 03 இன் தொடர் தாக்குதல் அனைத்திலும் பங்கேற்றதுடன், பரந்தன் பகல் சண்டையிலும், எதிரியை தடுத்து நிறுத்திய காவலரண் தொடர் சண்டைகளாக ஜெயசிக்குறு, சுட்டதீவு, ஊரியான், முகாவில், முகமாலை காவலரண் தொடர்களில் தொடர்ந்து நடந்த சண்டைக்களங்களில் பங்கு பற்றினான். இந்தச் சண்டைக் களங்களில் பல முறை காயமடைந்தும் இருக்கிறான். அவன் சண்டைக்கு வந்து காயமடை வான் பின் காயமடைந்து மருத்துவமனை சென்று காயத்தை சுகமாக்கியவுடன் ஓய்வு எடுக்காமல் நேரே மீண்டும் களத்திற்குள் வருவான். மீண்டும் காயமடைவான் இப்படியாக வான்மீகி காயமடைவதும் அதை சுகப்படுத்திவிட்டு மீண்டும் களம் வருவதுமாக இருந்தவனின் நிலையைப்பார்த்து நிர்வாக வேலைத் திட்டத்தினை கொடுத்த போது நிர்வாகத்தின் சில வேலைத்திட்டத்திற்கென களம் வந்த வேளையில் ஓர் நாள் காயமடைந்து மருத்துவமனை சென்றான்.

எனவே அடிக்கடி காயமடைந்த வான்மீகிக்கு எல்லோரும் கூறிடும் ஆசீர்வாதம் வான்மீகி நீ அடிக்கடி காயப்படுவதால் சாகமாட்டாய் என்பது தான். ஆனால் எல்லோரின தும் வாக்கு பொய்ப்பித்துப் போனது.

2001-04-25 அன்று பல ஆயிரம் கணக்கான எதிரிப்படைகளுடன் எதிரி முகமாலை முன்னரங்கை நோக்கி நகரத்தொடங்கிவிட்டான். தீச்சுவாலை களம் விரியத் தொடங்கிட பல்லாயிரம் எதிரிப்படைகள் தாக்குதலை தொடுத்து முன்னேற எதிரியின் ஆட்லறி ஏவு தளங்கள் மழையெனவே எறிகணைகளை பொழியத்தொடங்கின. கவச வாகனங்கள் அனல் நாக்குடன் தீப்பிளம்பை கக்கின. ரவைகள் புயலாய் எழுந்தடிக்கத் தொடங்கின. எதிரியின் கடுமையான தாக்குதலை முறியடிக்க தீச்சுவாலை எதிர்ச்சமர் தொடங்கியது. இந்தச் சமர் உக்கிரமாக ஆரம்பித்த போதே கப்டன் வான்மீகி வழமையான சுறுசுறுப்புடன் இயங்கத் தொடங்கினான்.

5.4..... வான்மீகி... எனக்கு முன்னதாகவும் வலம் இடமாகக் குவியல் குவியலாக வருகிறான். கிட்டவரட்டும் அடிக்கிறன் என்கிறான்.

வான்மீகி விடாத மச்சான் விடாம அடி என்றதும் சடசடப்பு கேட்கிறது. ராங்கோ 31,32,33 நிலைக்கு பக்கமாக உக்கிரச் சமர் நடக்கிறது. வான்மீகி தனது நிலையிலிருந்து தனது அணியினருக்கு கட்டளை கொடுத்தவாறே சண்டையை உக்கிரமாகச் செய்துகொண்டிருக்க எதிரிக்கு கடும் இழப்பு ஏற்படுகிறது. அந்த இழப்பை குறைப்பதற்கு அல்லது மறைப்பதற்காக எதிரி வான்மீகியின் நிலைக்கு இரசாயன ஆயுதத்தை பயன்படுத்துகிறான். எதிரியின் நாசகார வேலையினால் கப்டன் வான்மீகி அந்த இடத்திலேயே வீரச்சாவடைகிறான். என்றாலும் அவனுக்கு முன் பல எதிரிகள் பிணங்களாகக் கிடக்கின்றனர். எதிரியின் இழப்பே வான்மீகியின் வீரத்தை சுட்டி நின்றது.



# எங்கட மத்தியில புதுப்பார்வை உருவாக வேணும்

"வணக்கம் பிள்ளையள் எல்லாருக்கும் ! ஏதோ மனமெல்லாம் ஒருமாதிரியாய் கிடக்கிது. விமானம் வெளிக்கிட முன்னம் உலாத்தை நினைச்சு மனம் சந்தோசமாய்த்தான் இருந்தது. ஆனால், இப்ப மேல ஏறஏற என்ன இருந்தாலும் எங்கட தீவை விட்டுப் பிரியிறமெண்டு மனம் ஏதோ செய்யிது. முந்தியெப்பையோ ஒரு தம்பி எழுதின கவிதையொண்டு இப்பதான் வடிவாய் விளங்கிது, 'இரும்புப்பறவை தானே, இதயம் எங்கே இருக்கப்போகிறது! என் உள்ளின் வேதனை அறியாமல் உலகின் அங்குமிங்குமாய் பிரித்தலைக்கிறது!'. ஆனாலும் பாருங்கோ! நான் ஞாபகார்த்தமா கூடவே ஒரு பொருளும் கொண்டுபோறன். சொன்னால் நீங்கள் சிரிப்பியள். ஆனாலும், அதுக்காக நான் பொய் சொல்லமாட்டன். புதிசா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிற சூழலோடை உக்கி அழிஞ்சுபோகக் கூடிய எங்கட பொலித்தீன்-பை தான் அது. எப்பையோ ஒரு காலத்திலை எங்கட ஒட்டுமொத்த சுற்றாடலையும் கழுத்தறுக்கக்கூடிய பிளாஸ்ரிக்குகளுக்கு மாற்றீடா இப்பிடியான ஒண்டு வந்தது எனக்குப் பெரிய புழுகம். ஏதோ 15 சதம் கூடினாலும் அதின்ரை நீண்டகாலப் பெறுமதியை உணர்ந்து புறுபுறுக்காமல் நீங்கள் பாவிப்பியள் எண்டெனக்குத் தெரியும். அதுக்காக கடதாசிப்பையளை ஒரேயடியாய் விட்டுவிடாங்கோ! அது இன்னும் திறம். ஆனால் பலப்புத்தான் இல்லை. ஏதோ ஒரு பழைய கண்டுபிடிப்பின்ரை நஞ்சில இருந்து தப்பிறதுக்கு புதுக்கண்டுபிடிப்பொன்றை நாடியிருக்கிறோம். வீட்டுக்கொடியில வெய்யில் படக்கூடின மாதிரி நாலைஞ்சிடத்தில கட்டிப்போட்டுத்தான் வெளிக்கிட்டனான். பயணங்களை முடிச்சுக்கொண்டுபோய் பார்ப்பம், என்ன அளவில இருக்கிதெண்டு. ஆனால் உப்பிடியான பரிசோதனையளை வேறவேற அலுவல்களிலையும் பார்க்கோணும் போல! அவர் சின்னவர் Baby 81 ஆற்றை பிள்ளை எண்டிறதைக் கண்டறிய மரபணுச்சோதனை செய்தமாதிரி, உந்த வவ். . வவ். . லக்ஷிக்கும் ஒருக்கால் செய்துபார்த்தால் விசயமும் வெளிச்சமாதிரி, சிங்கள இனவாதியளுக்கும் நல்ல சந்தோசம் கிடைக்கும். எங்களுக்கும் மனப்பாரம் குறைஞ்ச மாதிரி. ஒரு சதம்கூட வரேல்லை எண்டு சனாதிபதி சொல்லிற காசுக்கு நன்றி சொல்ல மினைக்கெட்டு லண்டன் போயிருக்கிது மனுசன். திரும்பி வந்து வராத காசை வைச்சு நாட்டைக் கட்டியெழுப்பிறது தானாம் முதல்வேலை, பேச்சுவார்த்தைக்கெல்லாம் இப்ப சரியான தருணம் இல்லையாம், எண்டு சொல்லிக்கொண்டு நிற்கிது. என்ன இருந்தாலும் அந்த மனுசன் கேம்பிரிட்ஜ் படிப்பெல்லே. விசயம் இல்லாமல் இருக்குமோ? கை கடிக்கிற நேரத்தில தானே அரசாங்கம் பேச்சுவார்த்தையைப்பற்றி பேச்செடுக்கிறது. இப்பை சுனாமிக்காசு கையில கொட்டிக்கிடக்கிற நேரத்திலை சும்மா என்னத்துக்கு பேச்சுவார்த்தையும், மண்ணாங்கட்டியும் எண்டு மனுசன்ரை அறிவுக்கு(?) தட்டுப்பட்டிருக்காக்கும். சும்மா சொல்லக்கூடாது, அல்சேஷன் கூட உவ்வளவு வாலாட்டாது.

வேறென்ன பிள்ளையள்! குந்தில தொடங்கினது இவ்வளவுக்கு எங்களைக் கொண்டுவந்து விட்டிருக்கிது. அண்டைக்கு வெளிக்கிட முன்னால நடந்த 2 விசயங்கள் (ப.மு. : பல்லுடைய முன்), சரியான மனத்தாங்கலா இருந்திச்சு. உங்களுக்கு சொல்லோணுமெண்டு இருந்திட்டு கள்ளன்மாரிட்டை அடிவேண்டின அமளியில அயத்துப் போனன். அண்டைக்குப் பாருங்கோ குந்தில பிராக்குப் பார்த்துக்கொண்டிருந்தனான். அப்பை வேலையால வீட்டை போறதுக்கெண்டு அங்கை வந்த பொம்பிளைப்பிள்ளையொண்டு நேரம்போக என்னோட கதைச்சுக் கொண்டிருந்தது. அப்பதான் அவா இருந்தாப்போல "கோழி மேய்ச்சாலும் அரசாங்க வேலையா இருக்க வேணும்!", எண்டு சொன்னா. எனக்குத் தெரியும், சோலி இல்லாத பென்சன் வருமெண்டு உந்த ஐ. பாவிலை எங்கட கன இளசுகள் திரியினம். சும்மா பகிடிக்கு அவாவைக் கேட்டன், "எனக்குத் தெரிய வெளிநாடொண்டில கல் உடைக்கிற வேலை இருக்கு. அஞ்சு வருச கட்டாய ஒப்பந்தம், ஒவ்வொருநாளும் 18 மணித்தியால வேலை, விடுமுறை ஒண்டுமில்லை. 5வருச ஒப்பந்தம் முடிஞ்சாப்பிறகு சாகும் வரைக்கும் டொலரில நல்ல பென்சன் கிடைக்கும். என்ன மாதிரி விருப்பமோ ?". "ஓம், நான் ஓம். அஞ்சு வருசம் பல்லைக் கடிச்சுக்கொண்டு வேலை செய்தால், அதுக்குப் பிறகு துன்பமில்லை. எங்கை பதியோணும் அதுக்கு ? கதைச்சு விடிறீங்களா?" "கொஞ்சமாவது யோசிச்சுப் பார்த்தனீரோ நீர்? 5 வருசமா லீவில்லாமல் 18 வருசம் கல்லுடைச்சாப் பிறகு, அந்தப் பென்சனை அனுபவிக்கிறதுக்கு நீர் மிஞ்சுவீர் எண்டு நினைக்கிறீரோ ? எட அப்பிடித்தான் மிஞ்சினாலும் அப்பிடி ஓய்வில்லாத 5 வருசத்துக்குப் பிறகு வாழ்நாள் எண்டுமக்கு எவ்வளவு காலம் அங்கால மிஞ்சப்போகுது ? அதை விட்டிட்டு இப்பை இருக்கிற இடத்திலையே திருப்தியா இருக்கலாமெல்லோ?". "அஞ்சு வருசமா வேலையை வாங்கிப்போட்டு கண்காணாத எங்கையோ சாக்கொண்டும் போடுவாங்கள். அந்தவகையில நீங்கள் சொல்லிறதிலையும் நியாயம் இருக்கிது. அப்பாக்கும் பெரீசா ஏலாது. அம்மாவுக்கும் ஒரே வருத்தம். தம்பியைத்தான் நம்பியிருந்தனாங்கள். அந்த நம்பிக்கையும் கைகூடேல்லை. அப்பிடியிருக்க என்ரை இப்பத்தைய 5200 ரூபா சம்பளத்திலை தான் எனக்கு ஏதாவது நாளைக்கு நல்லது நடக்கிறதெண்டால் நடக்கோணும். இந்தக்காலத்து லட்சங்கள் எங்கை? என்ரை சம்பளம் எங்கை? அதுக்காக 5 வருசம் போய் ஏமாரவும்கூடாது", எண்டிட்டு அமைதியாயிட்டிது அந்தப்பிள்ளை. இடம்வலம் தெரியாமல் பகிடிக்குப் பொய் சொன்ன என்ரை புத்தியை (தயவுசெய்து மன்னிக்கவேண்டும்) நினைக்க எனக்கு ஆத்திரம் ஆத்திரமாய்க் கிடந்திச்சிது. என்னதான் சட்டரீதியான பாதுகாப்பு நடைமுறையில இருந்தாலும், அதுவே முழுமையான நடைமுறையா வாற வரைக்கும் இந்த நிலை தொடரும் போலகிடக்கு. கடைக்கண்ணால பார்த்தன், அந்தப் பிள்ளையின்ரை கண் சிவந்துபோய் கசியிற நிலையில இருந்திச்சு. என்ரை விசர்க்கதையைத் தவிர்த்திருக்கலாம் எண்டு நினைச்சுக்கொண்டு, "இந்த வீதியை 66 அடி அகலமா ஆக்கப்போயினமாம்! என்ன?" கதையை மாத்தினன். ஆனாலும், மனம் ஆயிரம் கேள்வியளைக் கேட்டுக்கொண்டிருந்திச்சு. 5200 ரூபாவில தன்னையும், தாய்-தகப்பனையும் காப்பாற்றிக்கொண்டு அதிலை மிஞ்சிறதை வைச்சு ஒருத்தனுக்கு சீதனம் குடுத்து தன்னை ஒப்பேற்ற வேண்டின அந்தப் பிள்ளையின்ர நிலையை யோசிச்சுப்பார்த்தன். அந்தப்பிள்ளை நூறு, இருநூறெண்டு சேர்த்துக் குடுக்கிறதை ஆரோ ஒரு அரைகுறை பேரம்பேசி நாளைக்கு வேண்டிப்போட்டு, தன்னை ஆம்பிளையெண்டு வேற சொல்லிக்கொண்டு மீசையோட தெருவழியில போகப்போகுது தானே ? எனக்கேதோ




உதுக்கான விஞ்ஞானவிளக்கங்கள் விளங்கிறதில்லை. காசு குடுத்து சரிக்கட்டிப் போட்டு ஆயிரம் காலப் பயிர் அது இதெண்டு என்னண்டு சொல்லலாம் ? அண்டைக்கு கடையடியிலையும் ஒருக்கால் உந்தக் கதை வந்திட்டிது. எங்கட உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்ர வரியளில சிலதுகளை அவையளுக்கு மேற்கோள் காட்டினன், 'சீதனமா எவன் கேட்டான் ? எடுத்தடி செருப்பால் ! கோவணம் கட்டிய குப்பனை மணம் முடி !'. உணர்ச்சிக்கவிஞர் ஒவ்வொரு சொல்லையும் காரணத்தோடதான் போட்டவர் எண்ட விசயம் உங்களுக்கு நான் சொல்லத்தேவையில்லை. ஆனாலும், அங்கை நிண்ட ஒரு இளந்தாரிப்பொடியன் சிரிச்சுக்கொண்டு எனக்குச் சொன்னான், "அப்பு! நீங்கள் சொல்லிற உடுப்புகளெல்லாம் இப்பை போடுறேல்லை. நீங்கள் இன்னும் மாறாமல் அந்தக் காலத்திலேயே இருக்கிறீங்கள்!". "தம்பி ! என்னோடை மாற்றமின்மை ஒருபக்கம் இருக்கட்டும். உள்ளத்தால மாறாமல், உடுப்பால மார்றதெல்லாம் என்ன நாகரீகம் ! கொழுக்கட்டைக்கும், மோதகத்துக்கும் இடையில வேறுபாடு காட்டிப் பெருமைப்படிறீங்கள். உங்களுக்கு நான் என்னத்தைச் சொல்ல ?".

அப்பிடியிருக்க வெளிக்கிட முன்னால ஒருக்கால் முல்லைத் தீவுப்பக்கமாவும் போயிட்டு வருவோமெண்டிட்டுப் போனன். சுனாமிக்குப் பிறகு அண்டைக்குத்தான் போனனான். என்னத்தைச் சொல்லிறது ! கடலைப் பார்க்க ஆசையாவும் கிடக்கிது, எரிச்சலாவும் கிடக்கிது. அதைப் பற்றி பேந்தெப்பையன் பார்ப்பம். கொதிக்கிற வெய்யிலிலை ஓடினதால சைக்கிள் சில்லும் காத்துக் குறைஞ்சு இடிக்கத் தொடங்கீட்டிது. காத்தடிச்சிட்டுப் போவம் எண்டு அதிலையிருந்த சைக்கிள் கடையடிக்கு விட்டன். கடைக்காரத்தம்பி தன்ரை கைக் குழந்தைக்கு சோறு தீத்திக் கொண்டிருந்தார். ஆள் குழந்தையை வைச்சிருந்து தீத்தின விதத்தைப் பார்க்க, பழக்கமில்லாமல் செய்யிறார் எண்டிறது விளங்கிச்சிது. நானும் அவசரப்படுத்தேல்லை. வெய்யில் அலுப்புக்கு அதிலை கொஞ்சம் குந்தினன். "நீர் குழந்தைக்கு முதல் சாப்பாட்டைக் குடும். எனக்கொண்டும் தலைபோற அவசரமில்லை", எண்டு சொல்லிப்போட்டு அப்பிடியே கதைச்சுக்கொண்டிருந்தன். கடவுள் எண்டு ஆராலும் எனக்கு முன்னால தோன்றோணும், அவரிட்டை கேட்கிறதுக்கு கனகேள்வியள் வைச்சிருக்கிறன். சே ! அந்தப் பொடியன்ரை மனிசியை, அதுதான் அந்தப் பச்சைக் குழந்தையின்ரை தாயை டிசம்பர் 26 அள்ளிக்கொண்டு போயிட்டிதாம்! என்ன கடவுள்! சீ! அந்த மனுசனைப் பேசக்கூடாது ! அந்தாள் எப்பையாவது முன்னால வந்து ஏதாவது சொன்னதோ, நான்தான் உலக விசயங்கள் எல்லாத்துக்கும் பொறுப்பெண்டு ? இல்லைத்தானே!

பேந்தென்னத்துக்கு அந்தாளை நோவான்! இது எங்கட சமுதாயம் சார்ந்த இன்ப-துன்பங்கள், எப்பிடி நேர்ந்தாலும் மொத்தமாய்முழு இனமும் முகங்கொடுக்கோணும். மனைவியை இழந்த கணவனும், கணவனை இழந்த மனைவியும் எண்டு தமிழர் பகுதிகளிலையே 8 ஆயிரத்துக்குக் கிட்டவருமாம். இதிலை ஓரளவுக்கு வாழ்ந்து முடிச்சாக்கள் போக, இன்னும் வடிவாய் வாழவே ஆரம்பிக்காத இளசுகள் எண்டே எத்தினை பேர்வரும் ! இஞ்சை இப்ப உதுகளுக்கான கணக்கெடுப்புகள் வேணுமெண்டு நான் சொல்ல வரேல்லை. இப்பிடி இடையிலை வாழ்க்கையைத் தொடர ஏலாமல் நிக்கிற எங்கட சின்னஞ்சிறுசுகளைப் பற்றி, எங்களுக்கிள்ளை ஒரு புதுப் பார்வை உருவாகோணும். சும்மா காண்ற நேரம்'உஸ்...'எண்டு பரிதாபப் பட்டுப் போட்டு, தொடர்ந்து நடையைக்கட்டிற மாதிரி இருக்கக்கூடாது.

ஆகவே தான் உங்கள் எல்லோருக்கும் ஒண்டைச்சொல்ல விரும்பிறன். 1915ஆம் ஆண்டில இருந்து இன ஒடுக்குமுறைக்கு உள்ளாகி வாற எங்கட இனம், கடந்த 22 வருசங்களாக பெரியதொரு யுத்த சூழலுக்கு முகம் கொடுத்துக்கொண்டு வருகிது. பத்தாக்குறைக்கு உந்த டிசம்பர் அனர்த்தம் வேற வந்து பெரிய தொகையில பலியெடுத்திட்டிது. இப்படியான சூழலை முழுமையாக விளங்கிக் கொள்ளுங்கோ ! கற்பிருக்கா ? காணியிருக்கா ? எண்டிற கேள்வியளை எல்லாம் கேட்டுக்குழப்பிற அளவுக்கு, நீங்கள் சோரம் போக இடம் குடுக்க வேண்டாம் ! பரஸ்பர புரிந்துணர்வு, ஏற்றுக்கொள்ளிற தன்மை, வாழலாம் எண்ட நம்பிக்கை இதுகள் இருந்திச்சிண்டால் மனித உறவுகளை ஏற்படுத்திக்கொள்ளிறதுக்குப் போதும். அதைவிட்டிட்டு சீலை, சிரட்டை, சட்டத்தைச் சுத்திற சாதுர்யம், தலைவிதி எண்டெல்லாம் முக்கியத்துவம் குடுக்க வெளிக்கிட்டு, மனிதமாண்புகளை ஒருக்காலும் இழந்திடாங்கோ! Firsthand, Secondhand (வெளியில் தெரியும்போது மட்டும்) எண்டெல்லாம் சொல்லி, பாரம்பரியம், சமயக்காரணங்கள் சொல்லிக்கொண்டு ஒருத்தரும் இஞ்சை வெளிக்கிடாங்கோ ! சிவபெருமான் சுந்தரமூர்த்தி நாயனாரின்ரை காதலிக்காய் தூதுபோய் இரண்டுபேரையும் சேர்த்துவைக்க உதவி செய்த கதை உங்களுக்குத் தெரியும்தானே ! அதுவும் அது Multihand சம்பந்தப்பட்ட சம்பவம். பைபிளிலையும் கண்ணீரால கால் கழுவ யேசு அனுமதிக்கிற சம்பவம் இருக்கெல்லோ! தயவுசெய்து முதல்சொன்னதுகளை இதோடை வைச்சு ஒத்துப்பார்க்காங்கோ ! கற்பு, மறுமணம் பற்றின எங்கட பார்வையள் மாறவேணும், மதங்களிலேயே முன்மாதிரியான பல சம்பவங்கள் இருக்கெண்டிறதுக்காகத்தான் பின்னாடி இரண்டு விசயத்தையும் சொன்னனான்.

வாழ்க்கை எண்டிறது ஒரு மாதிரி சரிக்கட்டி விடிற விசயமில்லை; உளவியல் விஞ்ஞானம் சார்ந்தது. அதுக்கான முக்கியத்துவத்தோட அதை அணுகப்பாருங்கோ! அண்டைக்கும் கொழும்பில நிற்கிற நேரம் பத்திரிகையில பார்த்தன், உங்கால் பக்கம் இளம் வயசிலை கிணத்துக்குள்ளை விழுந்து தற்கொலை எண்ட செய்தி. இது ஒண்டும் இனப்பிரச்சினையில்லை ; இரண்டு இதயங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை தான் ! பிரச்சினையள் என்னண்டாலும் வெளிப்படையா மனம் திறந்து கதைச்சிருக்கலாம். ஒட்டு இல்லாட்டி வெட்டு ! அதைவிட வேறொரு தீர்வு இல்லை.

(21ஆம் பக்கம் பார்க்க)




# உளவியல் நவீனம்...

## அத்தியாயம்- 08

பகுதி -42

இத செய்ய வேணுமெண்டு நினைச்சிருக்கயில்ல. நான் தொலைபேசி அழைப்பை எடுத்து உங்கள சந்திக்க நேரம் கேட்கயிக்க டிப்ஸ்ஸைப் பற்றி உங்களிடம் கேட்பதற்குத் தான் எண்ணியிருந்தேன். நேற்றைக்கு அவனுடைய தகப்பன் குழம்பிப்போனார். உங்கட சிகிச்சை அவன்ர நிலையை இன்னும் மோசமாக்கிப் போட்டுது என்று அவர் நினைக்கிறார். ஆனா இப்ப உங்களட்ட கதைக்க வேண்டிய ஒரு விஷயம் இருக்குது. நீண்ட காலமா அத எனக்குள்ளயே பூட்டிவைச்சிருந்திட்டன்.

என்ர கர்ப்ப காலம் மிகவும் கஷ்ட மானதா இருந்துது. அநேகமான வேளைகளில மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தன். நான் கர்ப்பமுற்றத என்ர கணவர் வெறுத்தார். நான் அத தடுத்திருக்கலாம் என்று அவர் எண்ணினார். நான் அவர குறைசொல்ல மாட்டன். நானும் அத வெறுத்தன். நாங்கள் இரண்டு பேரும் சேர்ந்து செய்த பல வேலைகள எங்களால செய்யமுடியேல்ல... ஒரு இடத்துக்கும் சேர்ந்துபோக முடியேல்ல. போக முடியல்ல எண்டுசொல்ல ஏலாது நாங்கள் போகயில்ல, எண்டுதான் சொல்லவேணும். என்ர கணவர் அதிகமதிகம் விலகிக் கொண்டு தனது வேலையிலேயே மூழ்கிப் போனார். உங்களுக்குத் தெரியும்தானே... அவர் ஒரு விஞ்ஞானி மிகவும் கெட்டிக்காரர். ஆனா இலகுவா எட்ட முடியாதவர்.... மிக... மிக... நுணுக்கமான உணர்வுகள் கொண்டவர். இப்ப சொல்லப் போறது உங்கள ஆச்சரியத்துக்குள்ளாக்கலாம். இது பற்றி நான் இப்போது கதைப்பதே இல்லை. இது பற்றிப் பள்ளிக்கூடத்தில எப்பவுமே சொல்லயில்ல". என்றவளது உதடுகளில் அந்த உயிரற்ற சிரிப்பு மீண்டும் ஒட்டிக்கொண்டது. "நான் கர்ப்பமடைவதற்கு முன்னர் நான் ஒரு சத்திரசிகிச்சை நிபுணராக இருந்தேன். எனது வேலையை நான் மிகவும் நேசித்தேன். சத்திரசிகிச்சை நிபுணர் என்ற வகையிலே வெற்றியை எட்டும் அறிகுறிகளை நான் காட்டிக்கொண்டிருந்தன். மிகவும் சிக்கலான இரண்டு இருதய சத்திரசிகிச்சைகளை நான் செய்து முடித்திருந்தேன். என்ர கணவருக்கு என்னப் பற்றி சரியான பெருமை. எங்கட நண்பர்கள் எல்லோருமே புத்திசாலிகள்... வெற்றி பெற்றவர்கள்... ஆர்வமூட்டுகின்ற மனிதர்களும் பெண்களுமாயிருந்தவர்கள். அப்பத்தான் டிப்ஸ் பிறந்து எங்கட எல்லாத் திட்டங்களையும் எங்கட வாழ்க்கையையும் குழப்பி விட்டான். நான் மிக மோசமாகத்தான் தோற்றுப்போய் விட்டேன் என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. நான் எனது வேலையை விடவேண்டும் என்று முடிவு செய்து கொண்டன். எனக்கு நெருக்கமான தொழில்முறை நண்பர்கள் சிலரால் எனது மனப்போக்கையோ எனது முடிவையோ புரிந்துகொள்ள முடியேல்ல. நான் டிப்ஸப்பற்றி அவயட்ட சொல்லேல்ல. நான் கர்ப்பம் தரித்தது அவர்களுக்குத் தெரியும்தான் ஆனா டிப்ஸ்ஸைப் பற்றி ஆவர்களுக்குத் தெரியாது. டிப்ஸ் இயல்பானவனாக இல்லை என்று விரைவிலேயே வெளிப்படையாகத் தெரிந்தது. எங்களுக்கு ஒரு பிள்ளை பிறப்பதே மோசமான விஷயமா இருந்தது. உள வளர்ச்சி குன்றிய பிள்ளையொன்றை பெறுவது என்பது எங்களால் தாங்க முடியாத ஒன்றாக இருந்துது. எங்களுக்கு அவமானமா இருந்துது. நாங்கள் சிறுமைப்பட்டுப் போனோம். எங்கள் இருவரினதும்



குடும்பங்களில் இப்படி ஒன்று இதற்கு முன் நடக்கவேயில்ல. எனது கணவர் அவரது பெருந்திறமை காரணமாக நாடெங்கும் (பெயர் கவனிப்பைப்) பெற்றிருந்தார். எனது சொந்த தொழில் வாழ்க்கையும் எப்பவுமே வேறுபட்டுத் தெரிவதாகவே இருந்தது. எங்களுடைய விழுமியங்கள் யாவுமே... நுட்பமான நுணுக்கமான குறிப்பிடத்தக்களவில் புத்திசாலித்தனமான சாதனைகளின் திசையில் சாய்ந்திருந்தவையாகவே இருந்தன.

"எங்களுடைய குடும்பங்களும் அப்படித்தான் மற்ற எல்லாவற்றையும் விட அதிகமாக இந்த திறமைகள் மதிக்கப்படுகின்ற குடும்பங்களிலதான் நாங்கள் இருவருமே வளர்ந்தோம் எங்களுக்கு டிப்ஸ் பிறந்தான். அவ்வளவு புதிரானவனாக எட்டமுடியாதவனாக... தீண்ட முடியாதவனாக கதைக்காதவனாக... விளையாடாதவனாக... மெது மெதுவாகவே



# முடுபனிக்குள் ஒரு தேடல்

மொழியாக்கம் :- வி.பி.யோசப்

நடக்கக் கற்றுக்கொள்பவனாக... சிறியதொரு காட்டு விலங்கு போல் ஆட்களுக்கு அடித்துக் கொண்டு ... எங்களுக்கு சரியான அவமானமாயிருந்தது. எங்களுடைய நண்பர்களில் எவரும் அவனைப்பற்றி அறியிறத நாங்க விரும்பவில்லை. நாங்க எங்கட நண்பர்களை எங்கட வீட்டுக்கு வரும்படி அழைத்தால் இயற்கையாகவே அவங்க எங்கட குழந்தையைப் பற்றி கேட்பாங்க என்பதால எங்கட நண்பர்களிடமிருந்து அதிகமதிகம் நாங்கள் ஒதுங்கிக் கொண்டோம். யாரும் அவனைக் காண்பதை நாங்கள் விரும்பயில்ல. எங்களுக்கு சரியான அவமானமாக இருந்துது. நான் தன்னம்பிக்கையை இழந்து போனன். என்ர வேலையை என்னால தொடர முடியேல்ல மீண்டும் ஒரு சத்திரசிகிச்சையை என்னால செய்ய முடியாது எண்டு எனக்குத் தெரியும் "

"அவனை அனுப்பக்கூடிய இடமெதுவும் இருக்கயில்லை. எங்களால் முடிந்தளவுக்குச் சிறப்பா இந்தப்பிரச்சினையைத் தீர்க்க முயன்றோம். எவரும் அவனைப் பற்றி அறிவதை நாங்க விரும்பயில்லை. ஒரு முறை மேற்குக் கரையில் உள்ள நரம்பியல் நிபுணரிட்ட அவனை எடுத்துப் போனன். வேறு ஒரு பெயரை நான் பயன் படுத்தினன். நாங்கள் எதைச் சந்தேகப்பட்டமோ, அதை யாரும் அறிவதை நாங்க விரும்பயில்ல. ஆனா உடல் ரீதியாக எந்தக் குறைபாட்டையும் அந்த நரம்பியல் நிபுணரால், டிப்ஸில கண்டு பிடிக்க முடியேல்ல. பிறகு ஒரு வருடத்துக்கு முன்பு ஒரு உளவியல் நிபுணரிடம் அவனை அழைத்துச் சென்றோம். அவரும் இந்தப் பகுதியில் உள்ளவரில்லை. உளவியல் ரீதியான உளநோய் மருத்துவ ரீதியான நோய் நிர்ணயத்த பெறுகிற நோக்கத்தில குறித்த இந்த மருத்துவமனையில் டிப்ஸை விடுவதற்கு நாங்க நினைச்சோம். டிப்ஸ் உள வளர்ச்சி குன்றியவனாக இல்லாவிட்டால், மனச்சிதைவு நோய் அல்லது உளமாயை நோய் கொண்டவனாக( chizophrenic) அல்லது தற்புணைவில் ஆழும் (autistic)நோய் கொண்டவனாக இருப்பான் என்று நான் எண்ணினேன். அவனுடைய நோய்க்குறிகள் அவனுடைய மூளை சேதமடைந்திருப்பதை நிச்சயமாக எடுத்துக் காட்டுகின்றன என்று நான் எண்ணினேன். அந்த உளநோய் மருத்துவர் என்னையும் எனது கணவரையும் பலமுறை காண விரும்பினார். இந்தமுறை மட்டும்தான் எமது உண்மையான அடையாளங்களை எமது மருத்துவருக்குத் தெரிவித்திருந்தோம். அது ஒரு அதிர்ச்சி தரும் அனுபவமாக இருந்தது. அந்த உளநோய் மருத்துவர் எங்களிடம் விவரங்கள் கேட்டார். அவர்கள் ஈன இரக்கமின்றி எமது தனிப்பட்ட, அந்தரங்க வாழ்க்கைகளை துருவித் துருவி ஆராய்ந்தார்கள். அவர்களுடைய கேள்விகள், அவர்களுடைய துறைசார் தேவைகளையும் மீறிச் செல்வதாக நாங்கள் உணர்ந்த பொழுது, அந்த சமூகசேவையாளர்கள் நாங்கள் விரோத உணர்வையும் எதிர்ப்புக் காட்டும் உணர்வையும் வெளிப்படுத்துவதாகச் சொன்னார்கள். சூடு சொரணையற்ற, கொடூரமான அவர்களது தொடர் துன்புறுத்தல்களிலே வக்கிரமான மகிழ்ச்சியை அவர்கள் பெறுவது போல் எங்களுக்குத் தோன்றியது."

"எங்களுடைய பின்னணிகளை கருத்தில் கொண்டு எங்களுடன் ஒளிவு மறைவில்லாமல் நடந்துகொள்ளப் போவதாக அந்த உளநோய் மருத்துவர் எங்களிடம் சொன்னார். டிப்ஸ் உளரீதியான பாதிப்புள்ளவனோ, அல்லது உளப்பிறழ்வு கொண்டவனோ

(தொடரும்)

---

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதன் பின்னர் இந்தக் காலக் கெடுவுக்குள் இந்த அடிப்படைத் தகைமைக்குள் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்ற அறிவிப்புக்கள் வெளிவரும்.

இவ்வாறாக குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு முறை அறிவிப்புக்கள் வெளிவருமே தவிர ஆரோக்கியமான விரைவான நடவடிக்கைகள் இடம் பெறுவதாக இல்லை.

இறுதியாகவும் கூட கஷ்டப்பிரதேச, அதிகஷ்டப்பிரதேச பாடசாலைகளில் மூன்று வருட சேவையை பூர்த்தி செய்த உயர்தரம் சித்தியடைந்தவர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்ற அறிவிப்பு வெளியானது. அதிலும் அவர்கள் கற்பிக்கும் பாடசாலைகளில் வெற்றிடம் நிலவவேண்டும்.

இந்த அறிவிப்பு வெளியான பின்னரும் கூட வேறு வழிகளில் ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு நியமிக்கப் பட்டார்களே தவிர தொண்டர் ஆசிரியர்கள் உள்வாங்கப்படவில்லை.

ஒரு வகையில் பார்த்தால் இவர்கள் சுரண்டப்பட்டுள்ளார்கள் என்றே கூற வேண்டும். நெருக்கடி நிலைமை ஏற்பட்ட போது இவர்கள் உள்வாங்கப்பட்டு தேவை முடிவடைந்ததும் கவனிப்பாரற்ற நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றனர். அவ்வாறானதொரு நிலைமையின் வெளிப்பாடே தற்போது நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டப்பேரணி ஆகும்.

இல்லையேல் பாடசாலைகளில் மாணவர்களை ஆர்ப்பாட்டம் செய்யவிடாது அடக்கி அவர்களை நல்வழிப் படுத்தியவர்கள் இன்று வீதியிலிறங்கி அர்ப்பாட்டப் பேரணி நடத்த வேண்டிய ஆவசியம் ஏற்பட்டிருக்காது.

எனவே இது விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் சிரத்தை எடுத்து ஆவர்களின் கோரிக்கையினை நிறை வேற்றப்பாடுபடுவார்களாயின் அது ஆரோக்கியமானதாக இருக்கும்.

அவ்வாறு சகலரும் செயற்பட்டு தமக்கு நிரந்தர நியமனம் கிடைக்க வழிசமைப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் தொடர்ந்தும் அந்த ஆசிரியர்கள் பாடசாலைகளில் தமது பணியினைத் தொடர்ந்து நல்ல கல்விச் சமூகத்தை உருவாக்க பாடுபட வேண்டும்.

---

(20ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், குறுக்கு வழியாய் தற்கொலை, மூளையோட ஒட்டிக்கொண்டிருக்கிது. ஒட்டி வாழ்ந்தால் சந்தோசம், வெட்டினால்... வேற வாழ்க்கை! நான் முன்னால சொன்ன எங்கட சமுதாயத்தைப் பீடிச்சிருக்கிற ஒருவகைக்கருத்து-வியாதி தீராத வரைக்கும், வேற வாழ்க்கை (பெண்களுக்கு) எண்டிறது முயல்கொம்புதான் !

என்னவோ பிள்ளையள்! எங்கட நடைமுறையள், வழக்கங்கள், வாதங்கள் எண்டு எல்லாமே எங்கட சமூகத்தைக் கருத்தில கொண்டதாக இருக்கோணும். நான் முன்னால சொன்ன விசயங்களைக் கொஞ்சம் யோசிச்சுப் பாருங்கோ! தயவுசெய்து விதண்டாவாதங்களை விட்டிட்டு, அதுகளில இருக்கக்கூடிய நியாயத்தை யோசிச்சுப் பாருங்கோ! நாங்கள் இரண்டாம் பட்சமாய் பார்க்கிற நிலைமை நாளைக்கு எங்களுக்கோ அல்லாட்டி எங்களுக்குத் தேவையான ஆருக்குமோ வராதெண்டு என்ன நிச்சயம்! இதொண்டும் புரட்சியோ, மறுமலர்ச்சியோ இல்லை. சாதாரண மனித ஒழுக்கத்தின்ரை ஒரு வரலாற்றுக்கட்டம் மட்டுமே! அண்டைக்கு பிபிசி-தமிழோசையில குடும்பத்தை முழுக்க இழந்த ஒரு ஐயா "எலும்புக்கும், மருந்துக்கும் மருத்துவம் கண்டேன், இதற்கொரு மருந்தைக் கண்டேனா?... போனால் போகட்டும் போடா!", எண்டு குடிச்சுப்போட்டு பாடினதை நீங்களும் கேட்டிருப்பியள். இதைமாதிரி நிலைமையில இருக்கிற பொம்பிளையள் குடிக்கவும் மாட்டினம், பாட்டுப்பாடி அழவும் மாட்டினம். உள்ளுக்குள்ளை அழுதே மாய்ஞ்சுகொண்டிருப்பினம். ஆற்றுப்படுத்தல் கதைக்கிற விசயம் மட்டுமில்லை, அதுக்கும் மேலானது. ஒருத்தற்றை வாழ்க்கையும் சுனாமியோடை முடிஞ்சு போகேல்லை. வாழ்க்கையின்ரை ஒவ்வொரு கணமும் அர்த்தமானது. அதை நல்ல மாதிரி எல்லாரும் வாழோணும் எண்டிற பிடிப்பு எல்லாரிட்டையும் வரோணும். அந்த நம்பிக்கையைக் குடுக்கிற மாதிரி ஆரோக்கியமான சமுதாயக் கட்டமைப்பும் எங்களிட்டை இருக்கோணும். இதைத்தான் என்ரை பேரப்பிள்ளையள் போல உங்கள் எல்லாரிட்டையும் எதிர்பார்க்கிறன். பொறுங்கோ! பொறுங்கோ! உதென்ன உந்த உந்த சிவப்பு லைற் விட்டுவிட்டு எரியிது! அவசரமா ஏதோ அறிவித்தல் வேற சொல்லினம்: பனிமூட்டத்தால பாதை தெளிவில்லையாம், எல்லாரையும் எழும்பி நிற்காமல், சீற்றில இருந்து பெல்ற்றைக் கட்டிக்கொண்டு, முன்பக்கமாய் குனியட்டாம். என்ரை கடவுளே! இந்த நேரம் பார்த்து பெல்ற் வேற அளவில்லாமல் கிடக்கிது. நல்ல வடிவான வெள்ளைக்காரர் கொண்டு வந்த பரிமாறின சாப்பாடுகளை வேண்டாமெண்டு சொல்லக்கூடாதெண்டிட்டு, நல்ல இறுக்கு இறுக்கிப்போட்டன். குனியவும் வண்டி விடுகிதில்லை. பிளேன் உங்கை பிறேக் அடிச்சிதெண்டால் துலைஞ்சன். திரும்பவும் மூஞ்சை உடைபட்டுத்தான் மீளவேணும். உங்களோடை கதைச்சுக் கொண்டிருக்க எனக்கிப்ப நேரமில்லை. உங்கினைக்கிள்ளை கயிறு, கியிறு கிடக்கோண்டு பார்த்து எடுத்துக்கட்டியாவது, தப்பிற வழியைப் பார்க்கோணும். பேந்து கதைப்பம். நான் சொன்னதுகளை மறந்திடாதேங்கோ!



# பொருண்மிய வாசல்

## எங்கள் மண்ணின் மாண்பு

சிதம்பரதிரு

கால்நடை வளம் எங்கள் வளங்களில் பிரதானமானது. ஒழுங்கான திட்டமிடல் மூலம் கால் நடை வளத்தினைப் பராமரித்து வந்தால் எங்கள் தேவையின் கணிசமான அளவினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கால் நடைகளில் இருந்து பெற்றுக்கொள்ளப் படும் பல்வேறு பயன்களில் முக்கியமானது பால் ஆகும். வன்னியின் பால் பிரசித்தமானது எனினும் அதன் பொருண்மியப் பெறுமானம் தொடர்பில் இன்னமும் ஒழுங்கு படுத்தப்படவில்லை.

எனினும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தன் துணை அமைப்புக்களின் பக்கத்துணையுடன் பல்வேறு மேம்பாட்டுத்திட்டங்களை பால் உற்பத்தி தொடர்பில் செய்து வருகின்றது.

வன்னியில் தொடக்கப்பட்டு தற்போது நடைபெற்றுவரும் "வன்னி சுரபி" நிறுவனம் இத்தகைய மேம்பாட்டு செயற்பாடுகளில் ஒன்றாகும்.

"சுரபி"யில் பாலை மூலப் பொருளாகக் கொண்டு பல்வேறு பாணவகைகள் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு விடப்படுகின்றன.

இந்த நிறுவனத்தின் செயற்பாட்டினை மேலும் மேம்பாட்டுக்கு உட்படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் பல்வேறு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன.

அதன் அடிப்படையில் இப்பகுதிகளில் பால்கொள்வனவு நிலையங்களை அமைக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் ஜெயபுரம், ஸ்கந்தபுரம், உருத்திரபுரம், கிளிநொச்சி போன்ற இடங்களிலும் தர்மபுரம் மாங்குளம் ஆகிய பகுதிகளில் இவை அமைக்கப்பட்டுள்ளன.

பால் கொள்வனவுக் கெலி அமைக்கப்பட்ட இந்த நிலையங்களில் ஒரு லீற்றர் பசும்பால் 12 ரூபா ஆகவும் ஒரு லீற்றர் எருமைப்பால் 14 ரூபாவாகவும் கொள்வனவு செய்யப்படுகிறது.

இதன் மூலம் பால் உற்பத்தி நடவடிக்கை ஊக்குவிக்கப் படுவதுடன். பால்மா உற்பத்தி என்ற இலக்கினை நோக்கி நகர முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மேட்டுநிலப் பயிர்ச் செய்கை வீழ்ச்சி கண்டதால் மரக்கறிகள் விலையேற்றம் கண்டனவா?

கிளிநொச்சி மாவட்டத்தி லுள்ள சகல குளங்களின் கீழும் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் நெற்பயிருக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து மீண்டும் மீண்டும் நெற்செய்கையிலேயே ஈடு பட்டு வருகின்றனர்.

இதனால் இவ்விடங்களில் மரக்கறிகள் சிறு தானியங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதுடன் அவற்றை வெளி மாவட்டங்களில் இருந்து தரு விக்க வேண்டியிருக்கிறது. எனவே விவசாயிகள் சிறுதானியங்கள் மற் றும் மரக்கறிப் பயிர்களையும் செய் கை பண்ணுவதற்கு முன்வர வேண் டுமென கிளிநொச்சி மாவட்ட நீர்ப் பாசனப் பொறியியலாளர் திரு. கந்த சாமி அவர்கள் கண்டாவளைப் பிர தேச செயலர் பிரிவிலுள்ள பிரமந் தனாறு சிறுபோக நெற்செய்கையாளர் களுக்கான கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்த கருத்துக்கள் முக்கியமானவை.

கிளிநொச்சி மாவட்டம் ஒரு பெரிய விவசாய நிலப்பரப்பைக் கொண்டது. இங்கு நெல் மற்றும் உப உணவு சிறுதானியம் என பல்வேறு பயிர்களுக்கு குளங்களில் இருந்து நீர் விநியோகிக்கப்படுகிறது.

ஆனால் இன்று கிளிநொச்சிச் சந்தைக்கு மரக்கறிகள் நாளாந்தம் யாழ்ப்பாணம் மற்றும் தென்னிலங்கை யில் இருந்துதான் வருகிறது. இந்த நிலை மாற வேண்டும். இங்குள்ள குளங்களில் நீர் நன்றாக நிரம்பி இருக்கிறது. குளங்களைக் கட்டி வகைப்படுத்தி ஆரம்பத்தில் நன்கு திட்டமிட்டு அதற்கான குடியிருப்பு களை அமைத்து நீர்ப்பாசனத்தின் மூலம் நெல் மற்றும் உப உணவு சிறு தானியம் என்பன பயிரிடப்பட்டு வந்தன. அப்போது இங்கு மரக்கறிகள் சிறுதானியங்களுக்குத் தட்டுப்பாடு இருக்கவில்லை. ஆனால் தற்போது இத் திட்டத்தை விவசாயிகள் மாற்றி தமக்குள் ஏதோ ஒரு காரணங்களைக் கூறி தனியாக எல்லாக் குளங்களின் கீழும் நெற்செய்கையை மட்டும் மேற்கொள்வதால் உற்பத்திக்கும் பாவனைக்கும் உப உணவு சிறுதானி யம் என்பன இல்லாத நிலையில் இப் பொருட்களின் விலைவாசி ஏறி யிருப்பதுடன் அவற்றிற்கு வெளி மாவட்டங்களை நம்பி இருக்க வேண் டிய நிலை உருவாகியுள்ளது.

இங்கு மரக்கறிகளுக்கு விலை வாசி அதிகரிப்பது இங்கு அதற்காக உற்பத்தியில்லை என்பதையே காட்டு கிறது. உப உணவுப் பயிர்ச்செய்கை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக கடந்த வருடம் பிரமந்தனாறு குளத் தை நியாப் -1 திட்டத்தில் 6 மில்லி யன் ரூபா செலவு செய்து புனரமைக் கப்பட்டது.

பிரதான வாய்க்கால்களும் ஓரளவுக்குப் புனரமைக்கப்பட்டது. கிளை வாய்க்கால்களை புனரமைப் பதற்கு நிதியில்லை. இதனை முன் னெடுத்துச் செல்வதற்கு விவசாய அமைப்புக்களும் விவசாயிகளுமே முனைய வேண்டும்.

குளப் பராமரிப்பு வேலைகளுக் கென கிளிநொச்சி மாவட்டத்திற்கு 10 மில்லியன் ரூபா பணமே ஒதுக்கீடு செய்யப்பட்டது. இப்போது கிளி நொச்சியில் 1 கிலோ கௌப்பி 80 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. இந்த விலையில் சிறுதானியமான கௌப் பியின் விலை என்றுமில்லாத உச்ச விலை உயர்வு பெற்று விற்பனை யாகின்றது. இதனால் இதனை நுக ரும் மக்கள் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியுள்ளது.

இதே நேரத்தில் யாழ் குடா நாட்டில் முருங்கைக்காயின் விலை என்று மில்லாதவாறு உயர்வடைந் துள்ளது.

மருதனார்மடம் சந்தையில் 1Kg முருங்கைக்காய் 400 ரூபாவிற் கும் அதிகமாக விற்கப்படுகின்றது என அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. மருதனார்மடம் சந்தை யில் 1 kg முருங்கைக்காய் 40 ரூபாவுக்கு வழமையாக விற்கப்படும். இம் முறை மரங்களில் உற்பத்தி குறை வடைந்தமையால் 400 ரூபாவுக்கு மேல் விலை அதிகரித் துள்ளது. இதன் விலை உயர்வு காரணமாக நோயாளிகள் பத்தியக் கறி சாப்பிடுவோர் பெரிதும் பாதிக் கப்பட்டுள்ளார்கள். இதே நேரத்தில் ஏனைய மரக் கறிகளின் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளன. இஞ்சிக் கிழங்கு ஒரு கிலோ 80 ரூபாவாக விற்பனையாகின்றது.

தம்புள்ள போன்ற தென்னிலங்கை பகுதி சந்தைகளில் இருந்து கொண்டு வரப்படும் மரக்கறிகளின் தொகை அதிகரித்திருப்பதால் குடாநாட்டு மரக்கறிகளின் விலையும் வெகு வாகக் குறைவடைந்துள்ளது. இதனால் பாவனையாளர்கள் நன்மை அடைந்துள்ளபோதிலும் குடாநாட்டு மரக்கறி உற்பத்தியாளர்களும் விவ சாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

த.சிவலிங்கம்

## பாடசாலையில் விளையாட்டுப்போட்டிகள்


### சில சிந்தனைகள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

பாடசாலையில் கண்காட்சிகள் இத்தகையனவே. எனவே தன்மீது தானே நம்பிக்கை கொள்ளவைக்கும் சந்தர்ப்பம் விளையாட்டுப் போட்டிக ளில் நடைபெறுகின்றது. தன் வாழ்க் கையில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளும் தகைமையை அவன் பெறுகிறான். குறிப்பாக விளையாட்டுப் போட்டிகள் மாணவனது உடல் தகைமையை மேம்படுத்த பாரியபங்கு வகிக்கின்றன.

பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் கண்ணுக்கு விருந்த ளிக்கும் பாரம்பரிய கிராமிய விளை யாட்டுக்களை அறிமுகம் செய்கி றார்கள்.

முட்டியுடைத்தல், பலூன் உடைத்தல், முட்டி பாதுகாத்தல், பணிஸ்,வடை உண்ணுதல், இவற்றி னால் அபாயகரமான பக்கவிளைவு கள் ஏற்படுகின்றன. உடல் சுகா தாரத்துக்கு கேடுவிளைவதும், பிள் ளைக்கு பணிஸ் உண்ணலில் உணவு இறுகி மரணம் சம்பவித்தும் உள்ளது. பலூன் ஊதுதலும் பெரிய பலூன்களை சிறிய மாணவர்கள் ஊதுவது அவனது சுவாசக்கால் வாயில் அபாயமான நிலையை ஏற்படுத்துமென உடலியல் நிபுணர் கள் எச்சரித்துள்ளனர். பலூன் ஊதி உடைத்தலின் போது பிள்ளைகள் மூச்சுத்திணறுவதை நாம் கண்ணால் பார்க்கிறோம். எனவே பாடசாலைகள்



களுக்கேற்ப நடந்தாலும் சர்வதேச மக்களோடு இணைந்து வாழ சிறுவர்களை தயார்ப்படுத்த முனைய வேண்டும்.

பாடசாலையில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது அதிபரின் இவற்றைக்கைவிடுவதும் மெய் வண்மைக்கு முக்கியத்துவமளிப்பதும் தேவையாகவுள்ளது.

எமது பாடசாலை விளையாட்டு விழாக்களில் புதிய சிந்தனை அவசியமாகியுள்ளது. இந்தச்சிந் தனைகள் எமது பிரதேச, நிலைமை

பெற்றுக்கொள்ளவேண்டும்.

பாடசாலையில் புதுக்கட்டடம் திறப்பதென்பது இரண்டாம் பட்சமான விடயம். முக்கியமல்லாத விடயம்.

இந்த விளையாட்டுப்போட்டியில் கல்வி உளவியற் பின்னணி உண்டு. மனப்பாங்கில் கணிசமாகத் தாக்கி இருப்பது கவனிக்கத்தக்கது. வருடா வருடம் இந்த புறப்பாடவிதானம் சரியாகவும் செம்மையாகவும் நடைபெற அதிபர்கள் கரிசனை கொள்ளவேண்டும்.

எனவே விளையாட்டுப் போட்டி என்ற ஒரு அருமை யானநாளை ஒரு சந்தர்ப்பத்தை பாட சாலைகள் என்ன விலைகொடுத்தேனும்

மாணவனுக்கும் ஆசிரியனுக்கும் இடையிலான சிநேகம் தாழ்வுச் சிக்க லுக்குள்ளான பிள்ளை, பெற்றோர் அதிலிருந்து விடுபடல். பிள்ளை, பெற்றோர் சில ஆசிரியர்கள் இந்தப் போட் டியால் கணிப்பையும் அங்கீ காரத்தையும் பெறல். தனது பிள்ளை யின் துடியாட்டத்தைக் கண்ட பெற் றோர் மனமகிழ்வில் பிள்ளையில் அன்பு பாராட்டுதல் அதனால் சமூகத்தை பிள்ளை நேசித்தல், மதித்தல் தனக்கு வாய்ப்பை ஏற்படுத்தித்தந்த சமூகத் துக்கு நன்றி செலுத்த பிள்ளை தனது எதிர்காலத்தைப் பயன்படுத்தல் அதே போல் பெற்றோர் அப்பாடசாலையை வளர்க்க உதவுதல் என்பன சில.

எனவே பாடசாலைகள் நேர காலங்களைச் சரியாகக் கவனித்து கணிப்பிட்டு பெற்றோருக்கான ஒருசில நிகழ்ச்சிகளை நடத்துவது விளை யாட்டுப்போட்டியால் பாடசாலை பல நன்மைகளைப் பெற வழிவகுக்கும்.

வருடந்தோறும் மரங்கள் மலர் கின்றன, காய்க்கின்றன. இலை உதிர்க்கின்றன. துளிர்க்கின்றன. வரு டாவருடம் திருவிழாவைத் தவற விடுவதில்லை. வருடாவருடம் பிறந்த நாள் வரத் தவறுவதில்லை.

வருடாவருடம் ஓய்வு பெறுவோர் தவறுவதில்லை. வருடா வருடம் மழையும், பனியும் தவறுவதில்லை. இயற்கை தன் கடமையைச் சரிவரவே செய்கிறதே. ஆசிரியர்களும் தமக் கிட்ட பணியை குழந்தைகளின் நன் மைக்காக இந்த உலகம் வாழ் வதற்காக ஆற்றவேண்டும்.


(10 ஆம் பக்கத்தொடர்ச்சி)

எட நீ எவ்வளவு தான் தீர்மானமெடுத்தாலும் அந்த டத்தை ஓமோமெண்டு சொல லிப் போட்டு அங்காலபோய் என்ர இதுக்குச் சொல்லெண்டு அவங்கள் நடக்கேல்லயே. பிறகு பொதுக்கட்டமைப்புக்குள்ள என்ன நடக்கப்போகுதோ ஏதோ பெரிய பொக்கிசத்தக் குடுக்க வெளிக்கிடுற மாதிரி குடாத பிடியெண்டு குடுமிப்பிடி சண்டை உள்ளுக்க நடக்குது. வெளியால ஒரு முகம், உள்ளுக்கு ஒரு முகம், ஜே.வி.பிக்கு ஒரு முகம் ஐ.தே.கட்சிக்கு ஒரு முகம், ரேடியோ ரீவியள்ள ஒரு முகம், சர்வதேசத்துக்கு ஒரு முக மெண்டு இப்ப ஆறுமுகம். கையில வேல்தான் இல்லை. ஆனா உந்த ஆறுமுகத்துக்கும் வேலுக்குப் பின்னால நூறு முகம் இருக்கட்டன்ரா. எங்கட வேலுப்பிள்ளையற்ற மோன் காறன் வலு விண்ணனடா... அவனோட முட்ட மாட்டாமத் தானே இப்ப உவளவு சில்லம் பலம் நடக்குது. நான் எங்கை யிருந்து சொல்லுறனெண்டு பார் கடைசி உவையாத்தரப் போறது ஒண்டுமில்லை. இப்ப ஓமந்தை முகமாலை மட்டும் பிடிச்சமாரி... எங்கட மண்ணை நாங்கதான் பிடிக்கோணும் அதுக்குத் தக்கனமாரி நடவுங்கோ. முதல் விளையாடித் திரியிறத விடுங்கோ. வேலையப் பாருங் கோ... ங்.... என்னடா... கிழவி யோ... வந்தனெண்டா...

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

பாவலன் பதில்கள்,
வெள்ளிநாதம்,
யாழ்சாலை, கிளிநொச்சி.

# பாவலன் பதில்கள்



*பாவலா!*
*விடுதலைப் போராளிகள் பற்றி உமது கருத்து?*

*பிரியன்,*
*கிளிநொச்சி.*

மகத்தான மனிதர்கள் குறித்து சாதாரணமானவர்கள் கருத்து சொல்லுதல் சாத்தியமில்லை.

*பாவலரே!*
*நீர் சினிமாவுக்கு சேர்ந்து பார்க்கலாமே?*

*ராஜன்,*
*உருத்திரபுரம்.*

என்னை நான் கண்ணாடியில் பார்ப்பதே சகிக்க முடியாமல் இருக்கையில்...!?

*பாவலா!*
*இன்றைய இளையோருக்கு நீர் கூற விரும்புவது?*

*சிவப்பிரியா,*
*திருவையாறு.*

மாவீரர்களை மனதில் வையுங்கள், மண்ணை நேசியுங்கள் நீங்கள் சாதனையாளர்களாக மாற முடியும்.

*பாவலா!*
*உண்மை நிலைமைகளை தெளிவாக விளங்கிக் கொண்டும் உதவாது இருப்பவர்களை பற்றி என்ன நினைக்கிறீர்?*

*சி.மயூ,*
*முல்லைத்தீவு.*

வெளிச்சம் காட்டா கலங்கரை விளக்குகள் இருந்தென்ன லாபம்!

*பாவலா!*
*நா... தவறும் நண்பிகளுக்கு நான்குவரிப் பதில் தாரும்?*

*ஆனந்தி,*
*புளியங்குளம்.*

'நாகாக்க காவாக்கால் சோகாப்பர்'- என்ற வள்ளுவரின் இரு வரிகளுமே போதும்.

*பாவலா!*
*தற்போதைய இளைஞர்கள் காதணிகளும், மெட்டிகளும் அணிகின்றார்கள் இவர்கள் தமிழர்களின் கலாச்சார அடையாளத்தையா கொண்டு வருகிறார்கள்.*

*யோ.பத்மசுதந்திரா,*
*உடையார்கட்டு.*

அத்தோடு வேட்டியும் சால்வையும் அணிவது அவர்களை முழுக் கலாச்சாரம் காவிகளாக அடை யாளப்படுத்துமே

*பாவலா!*
*நான் எல்லோருடனும் சகயமாக பழகுவதை சிலர் சந்தேகமாக எடுத்துக் கொள்கிறார்கள் ஏன்?*

*குயிலன்,*
*பரந்தன்.*

'சந்தேகம்' ஒரு விதமான மனநோயின் வெளிப்பாடே... சந்தேகம் தெளிய விரும்பாது இருப்பது முற்றிலும் நிலையாகும்.

*பாவலா!*
*சனாதிபதி நாட்டை கட்டியெழுப்புவாரா?*

*ச.சதீஸ்குமார்,*
*செல்வாநகர்.*

போற போக்கைப் பார்த்தால் கூட்டி அள்ள வழிவகுப்பார் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

*பாவலா!*
*திருமணம் செய்யப் போகும் எனக்கு உங்கள் உபதேசம் என்ன?*

*பிரியா,*
*ஸ்கந்தபுரம்.*

இனிமேல் நிலையான மந்திர உபதேசம் தாராளமாகக் கிடைக்கப் போகிறதே... நம்ம சாதாரண உபதேசம் எடுபடுமா?

*பாவலா!*
*அன்பு, அம்பு இரண்டும் ஆபத்தானதா?*

*வர்த்தனி,*
*கிளிநொச்சி*

இரண்டும் இதயத்தை துளைக்கும். செலுத்துபவர்களின் ஆளுமையை வெளிப்படுத்தும். அம்பு ஆளைக் கொல்லும், அன்பு ஆத்மாவையே வெல்லும் அல்லது கொல்லும்.

*பாவலா!*
*யாருக்கு வாழ்க்கை வெற்றி யாருக்கு வாழ்க்கை தோல்வி?*

*தர்ஷா,*
*வவுனியா.*

பிறருக்கு வாழ்க்'கை' கொடுப்பவரின் வாழ்க்கை வெற்றிகரமானதாக இருக்கும்.

*பாவலா!*
*கொல்லாமை சொன்ன புத்தனின் போதனைகள் சிறிலங்காவில் எப்படியுள்ளது?*

*கஜன்,*
*உருத்திரபுரம்.*

இல்லாமல் போயுள்ளது.

*பாவலா!*
*பத்தாயிரம் குளங்கள் என்ன சத்தத்தையே .காணவில்லை?*

*தர்மினி,*
*பரந்தன்.*

அடுத்த தேர்தல் வரும் போது மீண்டும் ஒலிக்கும்... கவலைப் படாதீர்கள்.

*பாவலா!*
*இலங்கையின் சனநாயகம் பற்றி ஒரு வரி கூறும்?*

*தீபா,*
*ஜெயந்திநகர்.*

சர்வாதிகாரிகளின் கையில் உள்ள சவுக்காகிவிட்டது.
பண நாயக்கர்களின் காலடியில் அடக்கமாகி விட்டது.




''உதார் சொன்ன புதுக்கதை மெய்யே குளத்துக்க வீடுகட்டி இருக்கிறவை காணியில்லாத ஏழையளே.''

''கடைசிவரைக்குமில்ல- நல்ல பணக்காறர், அரசாங்க உத்தியோகம் பாக்கிறவை, அல்லது கொழுத்த யாவாரிமார் உவை தான் வீடு கட்டியிருக்கின.

அது சரி உண்ணத் தின்ன இல்லாம இருக்கிறதுகள் உப்பிடி குளத்த மூடி மண்ணடிக்க எங்க போறது.''

அட அப்பிடித்தான் இல்ல. எங்கினயும் காலேக்கர் நிலத்தப் பிடிச்சுக் கொட்டிலப்போட்டாலும் அறுவத்தெட்டு அதிகாரியள் வந்திருவாங்களே. ஆர்தந்த காணி எவர் கட்டின வீடு... அரசாங்க நிலமெல்லோ தெரியாதோ...

ம்... ம்... பின்ன உவளவு குளமும் மூடி வீடு கட்டினவைக்கு கரண்டுகள் தொலைபேசியளெண்டும் செய்து குடுத்ததோட... மெல்லக் கதை உறுதியளும் போட்டிருக்கினயாம்...

ஓமாமோ பின்ன எங்கயும் இளைச்ச சனம் காசைக் குடுத்தும் கையெரிய வெட்டியுந்திருத்தின காணியளுக்குப் போமிற்றும் குடாயினமாம்.

உதைக் கேட்டா... கவுண்மேந்துச் சட்டம், காணிச் சட்டம், காட்டுச்சட்டமெண்டு ஊருப்பட்ட சட்டமெல்லே தருகினம்.

எங்களுக்கென்ன விடு...
என்ன எங்களுக்கென்ன விடோ... குளங்களை மூடிப்போட்டு உவை போக நாளைக்கு குடி தண்ணியில்லாமக் கிணறு வத்தப் போகுது நகரங்கள்ள தண்ணியில்லாட்டி நரகமாப்போம்- விடட்டோ?

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –114



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்–114

.....................................................................
.....................................................................
.....................................................................
.....................................................................

பெயர் : ..........................................................
முகவரி : ..........................................................
..........................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –113



**திருமதி.சு.சிவாஜினி,**
**8ஆம் வட்டாரம்,**
**மந்துவில்,**
**புதுக்குடியிருப்பு.**

### பரிசுக்குரிய வரிகள்

*மகனே தம்பியை வருத்தி தொடராதே உன் பயணத்தை*
*மன வைராக்கியம் கொண்டு தற் துணிவோடு*
*மிதி துவிச்சக்கர வண்டியை*
*மீதி தூரத்தை தொடர் உன் முயற்சியில்.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*ஆடிப் பாடி ஓடி விளையாடியே - நீவிர்*
*நல்ல தேக ஆரோக்கியம் பெற்றிடுவீர்*
*வளமான உளத்துடன் வலுவான உடலுடன்*
*தேசத்தினை வளமாக்கும் நாளைய சிற்பிகள் ஆகிடுவீர்.*

ரா.சுஜந்தன்,
பரவிப்பாஞ்சான்.

*அன்பான என் அப்பா வெலிக்கடையில் - ஆசை*
*அம்மா சுனாமி அலையில் - அரவணைத்த*
*பாட்டி அன்புச் சோலையில் - நாங்களோ*
*அண்ணன் அரவணைக்கும் சிறுவர் இல்லம் நோக்கி.*

ஆனந்தி- ஆறுமுகம்,
புளியங்குளம்.

*இளமையில் இனிமையாக வாழ்ந்தவன்*
*கொடிய சுனாமியால், இருக்கையில் இருக்கின்றான்*
*அண்ணனின் மகிழ்வுக்காக, காட்டும் திசை.*
*யாவும், தன் உதிரத்தை உரமாக்குகின்றான் - தம்பியவன்*

சி.கனிமொழி,
முள்ளியவளை.

*தள்ளு தள்ளு தம்பி வண்டியை*
*மிகவும் வேகமாக தள்ளினால் - அதோ*
*தெரியும் எங்கள் ஈழ தேசத்திற்கு*
*போய் சேருவோம் மிக விரைவில்.*

கு.இன்பநிலா,
வட்டக்கச்சி.

*மூன்று சில்லு வண்டி*
*மூர்க்கமான சுனாமியால் பிரிந்த உறவுகளைத் தேடி*
*மூத்தவரும் இளையவரும்*
*அலைகின்றனர் வாடி.*

தங்கராசா-கோகுலன்,
கனகாம்பிகைக்குளம்.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
கிளிநொச்சி. புதுக்குடியிருப்பு

சித்திரைப்புத்தாண்டை
எங்களுடன் கொண்டாடுங்கள்

நவீன வசதிகளுடன் கூடிய
உல்லாசப்பயணிகள் விடுதி
மிலேனியம்
உல்லாசப்பயணிகள் விடுதி




உங்கள் தொடர்புகளுக்கு
76/60, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.
T.P: 021-222 2810

(சி-11483)



இப்பொழுது
இலங்கையில்

அக்யூரேட்007
ஜாக்குவார் 009

சாரங்கள்
பெனியன்கள்
உள்ளாடைகள்
கைக்குட்டைகள்

Lungies(Sarongs)
Vests
Briefs
Kerchiefs

அனைவருக்கும்
இனிய புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்!



Direct
Importers
Wholesalers
&Retailers



Sole Distributors
OCEANICK IMPEX
Specialist in Wedding Sarees
WHOLE SALE & RETAIL DEALERS IN TEXTILES
192, MAIN STREET, COLOMBO - 11 Ph: 2336720, 2327168
FAX:2326961, Email: oceanick192@yahoo.com
(சி-11477)



சித்திரைப்புத்தாண்டை
முன்னிட்டு சிறப்பு விலைக்கழிவுடன்...



இந்தியாவில் இருந்து இறக்குமதி
செய்யப்பட்ட அதி நவீன
ஆடைகளை
உள்ளடக்கிய திருமணம் மற்றும்
மங்கள நிகழ்வுகளுக்கான
காஞ்சிபுரம் சாறிகள்
பட்டுசாறிகள் பட்டுவேட்டிகள் மற்றும்
சல்வார் சோலிகிற் சூட் கவுண்
சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள்
சிறியோர்களுக்கான
ஆடைகளை மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்



குமரகுரு புடைவை
அழகுப்பொருள் வாணிபம்
யாழ்சாலை, கிளிநொச்சி. தொ.பே: 021-228 5971
(சி-11484)



புதுவருடத்தினை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை

அழகுக்கு அழகூட்டும்
புத்தம் புதிய
சாறி வகைகள்,
சிறுவர் சிறுமியர்க்கான
றெடிமெற் ஆடைவகைகள்,
ஆடவர்களுக்கான
சேட்டிங் சூட்டிங்,
நங்கையர் விரும்பும்
துணி வகைகள்

இவையனைத்தையும்
தெரிவு செய்ய யாழ் நகரில்
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்



லிட்டில் இந்தியன் பெஷன்
(சி-11485) இல: 77,பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
SM Graphics



ஏமாற
வேண்டாம்

ASTRA Sun
போலிகளால் ஏமாறாதீர்கள்
அஸ்ட்ரா, சன் நூல்களை வாங்கும் போது
இப்புதிய அம்சங்களை அவதானியுங்கள்



இதோ
எமது புதிய
உறைகள்



கோட்ஸ் இலச்சினையுடன்
ஹொலோகிறாம் ஸ்டிக்கர்

தரமான தையல் நூல்களுக்கு ASTRA Sun

COATS
கோட்ஸ் திரட் லங்கா,
163, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
தொலைபேசி : 2307358
(சி-11656)

வடக்கில் எமது ஏக விநியோகஸ்தர்:
வைர மாளிகை
எண் 65, கண்டி வீதி, கிளிநொச்சி.
தொலைபேசி / தொலைநகல் : 021 2285706.

நியு சொப்பிங் சென்ரர்
இல 131/6, CKS ரோட், யாழ்ப்பாணம்.



இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 08 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.